# நீங்கள் மெய்யாகவே மறுபடியும் பிறந்திருக்கிறீர்களா?

“ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்” - இயேசு (யோவான் 3:3)

**போதகர் A. சாமுவேல்**

**Pastor A. Samuel**

# பொருளடக்கம்


| வ.எண் | தலைப்பு | பக்கம் |
|---|---|---|
| I | மறுபிறப்பு என்றால் என்ன? | 3 |
| II | எது  மறுபிறப்பு  அல்ல? | 3 |
| III | பூமிக்குரிய பிறப்பும், ஆவிக்குரிய பிறப்பும் | 6 |
| IV | பழைய ஏற்பாட்டில் மறுபிறப்பைப் பற்றிய உபதேசம் | 7 |
| V | நாம் ஏன் மறுபடியும் பிறக்க வேண்டும்? | 12 |
| VI | இயேசுகிறிஸ்து ஒருவர் மட்டுமே மறுபிறப்பை அருள முடியும் | 18 |
| VII | இயேசுகிறிஸ்து எப்படி மறுபிறப்பை அருளுகிறார்? | 25 |
| VIII | ஆதி அப்போஸ்தல காலத்தில் மறுபிறப்பு | 25 |
| IX | சபைக் காலங்களில் மறுபிறப்பு | 26 |
| X | இந்தக் கடைசிக் காலத்தில் மறுபிறப்பு | 39 |
| XI | கர்த்தருடைய வருகையும், மறுபிறப்பும் | 54 |
| XII | மறுபிறப்பின் மூன்று படிகள் | 56 |
| XIII | மறுபிறப்பின் அத்தாட்சி | 60 |
| XIV | மறுபிறப்பு என்பது ஒரு மனிதனுடைய வாழ்வில் தேவன் செய்யும் மிகப்பெரிய அற்புதம் | 61 |
| XV | இனி வரும் நாட்களில் நடக்கும் சம்பவங்கள் | 64 |

# நீங்கள் மெய்யாகவே மறுபடியும் பிறந்திருக்கிறீர்களா?

## முன்னுரை

நாம் வாழுகிற இந்த நவீன உலகத்தில் அரசாங்கம் மற்றும் தனியார் அலுவலகங்கள் சம்பந்தப்பட்ட எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் நம்முடைய பிறந்தநாளையும், தகப்பன் அல்லது கணவர் பெயரையும் கண்டிப்பாகக் குறிப்பிட வேண்டும். அதற்கான ஆதாரத்தையும் சமர்ப்பிக்கவில்லை என்றால் நமது விண்ணப்பம் அங்கீகரிக்கப்படமாட்டாது. அதே போல் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்றால், நாம் மறுபடியும் பிறந்திருக்க வேண்டும். நாம் எந்தக் காலத்தில் தேவனால் பிறந்தோம்? நாம் உண்மையிலே மறுபடியும் பிறந்திருக்கிறோமா? என்பதை தேவனுடைய வார்த்தை உறுதிப்படுத்த வேண்டும். அதை நிச்சயப்படுத்திக் கொள்ளுவது நமக்கு மிகவும் அவசியம். நாம் அதை அறிய வேண்டிய அவசியமில்லை என்று தீர்மானிப்போமென்றால், நாம் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது (யோவான் 3:3).

இயேசுகிறிஸ்துவின் பிரதானமான முதலாம் உபதேசம் ஒருவன் மறுபடியும் பிறக்க வேண்டும் என்பதே. மறுபிறப்பு என்றால் என்ன? நாம் எப்படி மறுபடியும் பிறக்க முடியும்? மறுபிறப்பு ஏன் அவசியம்? என்பதை தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் தியானிக்கலாம்.

## I. மறுபிறப்பு என்றால் என்ன (What is New Birth)?

மறுபிறப்பு என்பது தேவனுடைய ஜீவனாகிய பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்வதைக் குறிக்கும். 1) மறுபிறப்பு 2) புதுப்பிறப்பு (New Birth) 3) ஆவியினால் பிறப்பது 4) வார்த்தையினால் பிறப்பது 5) தேவனால் பிறப்பது 6) பரிசுத்தஆவியின் அபிஷேகம் (Baptism of the Holy Ghost) 7) கிறிஸ்துவின் ஜீவனைப் பெறுவது 8) ஆவிக்குரிய விவாக இணைப்பு (Spiritual Marriage Union) இவைகள் அனைத்தும் மறுபடியும் பிறக்கும் அனுபவத்தைக் குறிக்கும் ஆவிக்குரிய வார்த்தைகள் (Spiritual Terms).

## II. எது மறுபிறப்பு அல்ல (What is not New Birth)?

a) **மறுபிறப்பு என்பது கிறிஸ்தவ மதத்திற்கு மாறுவதோ அல்லது ஒரு ஸ்தாபன சபையைச் சேர்ந்துகொள்ளுவதோ அல்ல:** இன்றைய கிறிஸ்தவ மார்க்கத்தில் மனந்திரும்பாதவர்கள் மிகவும் அதிகம். கிறிஸ்தவம் என்பது ஒரு மதமல்ல, அது கிறிஸ்து (Christianity is not a religion but it is Christ). கிறிஸ்துவை உடையவர்களே கிறிஸ்தவர்கள்.

i) **ஆகாப்** இஸ்ரவேலின் ராஜாவாக இருந்தாலும் விக்கிரக ஆராதனையை ஆதரிக்கிறவனும், கர்த்தருடைய தீர்க்கதரிசிகளைக் கொலை செய்கிறவனாகவும், தேவனுடைய வார்த்தைக்கு

விரோதமாகத் தன் மனைவியாகிய யேசபேலின் உபதேசத்தின்படி செய்ய அவளுக்கு அடிமைப்பட்டவனாகவும் இருந்தான் (1 இரா 18:18).

ii) **ஏரோது** மன்னன் யூதருடைய ராஜாவாயிருந்து, தேவனுடைய ஆலயத்தை அழகுப்படுத்திக் கட்டினான். ஆனால் அவன் தன் சகோதரனுடைய மனைவியை வைத்திருந்தான் (மாற்கு 6:18). அப்போஸ்தலர்களைக் கொலை செய்தான். அது போல கிறிஸ்தவர்கள் என்று தங்களை அழைத்துக் கொள்ளுகிற அநேகர், தீய பழக்கங்களையும், தீய சுபாவங்களையும் உடையவர்களாயிருக்கிறார்கள். மற்றும் தேவனுடைய வார்த்தையை மறுதலிக்கிறவர்களும், உண்மையான பரிசுத்தஆவிக்கு எதிர்த்து நிற்கிறவர்களுமாயிருக்கிறார்கள். இவர்கள் மனந்திரும்பாதவர்கள். மனந்திரும்பாதவர்கள் எப்படி மறுபடியும் பிறக்க முடியும்? இவர்கள் யூதரல்லாதிருந்தும் தங்களை யூதரென்று பொய் சொல்லுகிற சாத்தானுடைய கூட்டத்தாராயிருக்கிறார்கள் (வெளி 3:9). ***இஸ்ரவேல் வம்சத்தார் எல்லாரும் இஸ்ரவேலரல்லவே*** (ரோமர் 9:6) என்று பரிசுத்த பவுல் சொல்லுகிறார். ஆகவே கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறவர்கள் அனைவரும் கிறிஸ்தவர்கள் அல்லவே.

b) **மறுபிறப்பு என்பது ஒரு ஸ்தாபனத்திலிருந்து இன்னொரு ஸ்தாபனத்திற்கு மாறிக்கொண்டு அதிக பக்தியாய் (more religious)இருப்பதும் அல்ல: காயீன்** அதிக பக்தியாக இருந்தான். கர்த்தருக்கு அழகான பலி பீடத்தைக் கட்டினான். நிலத்தின் கனிகளில் முதற்பலன்களைக் கொண்டு வந்தான். அதிக உத்தமத்தோடுதான் தேவனைத் தொழுது கொண்டான். ஆனால் தேவன் அவனையும் அவன் காணிக்கையையும் அங்கீகரிக்கவில்லை (ஆதி. 4:5). அவனுக்கு தேவனுடைய வார்த்தையைக் குறித்த புரிந்துகொள்ளுதல் (வெளிப்பாடு) இல்லை. தேவன், தம்மை ஆராதிக்க வருகிறவனை சிந்தப்பட்ட இரத்தத்தின் கீழ்தான் சந்திக்கிறார் (It's only under the shed Blood that God meets the worshipper) என்ற உண்மையை அறியாதிருந்தான். ஏனெனில் பாவம் இரத்தத்தினால் வந்தது. ஆகவே, ஜீவனுக்கு ஜீவன் கொடுக்கப்பட வேண்டும் என்பது தேவநீதி (யாத் 21:21). ***மாம்சத்தின் உயிர்அதின் இரத்தத்திலிருக்கிறது. ஆத்துமாவிற்காக பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே*** (லேவி 17:11). தேவனைச் சந்திக்க, அவரோடு ஐக்கியப்பட வேண்டுமானால் அவருக்கும் ஆராதிக்கிறவனுக்கும் மத்தியில் ஒரு பாவ நிவிர்த்தி (Atonement) உண்டாயிருக்க வேண்டும். மெய்யான ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம் சிந்தப்படும் வரைக்கும் அவர்கள் ஆட்டுக்குட்டியின் இரத்தத்தின் மூலமாக தேவனோடு ஐக்கியப்பட்டார்கள். இந்த வெளிப்பாடு தேவனால் **ஆபேலு**க்குக் கொடுக்கப்பட்டது. ***விசுவாசத்தினாலே ஆபேல் காயீனுடைய பலியிலும் மேன்மையான பலியை தேவனுக்குச் செலுத்தினான்; அதினாலே அவன் நீதிமானென்று சாட்சி பெற்றான்; அவனுடைய காணிக்கைகளைக் குறித்துத் தேவனே சாட்சி கொடுத்தார்***; (எபி. 11:4) என்று தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது. விசுவாசம் என்றால் வெளிப்பாடு என்று அர்த்தம் (Faith means Revelation). ஆபேல் வெளிப்பாட்டினாலே சரியான காணிக்கையைக் கொண்டு வந்தான். ஆகவே ஆபேலையும் அவனுடைய காணிக்கையையும் தேவன் அங்கீகரித்தார். அவன் பலியின் மேல் அக்கினியை அனுப்பினார். காயீன் கொண்டு வந்த காணிக்கையில் இரத்தம் இல்லை. ஆகையால் பாவ நிவிர்த்தி இல்லை. அவனுக்கு தேவனால் அருளப்பட்ட வெளிப்பாடு இல்லை. ஆகவே தேவன் காயீனையும் அவன் காணிக்கையையும் புறக்கணித்தார். அவன் பலியின்மேல் தேவன் அக்கினியை அனுப்பவில்லை. அவனுடைய ஆராதனை வீணான ஆராதனையாயிருந்தது. ஆனாலும் அவன் சரியான காணிக்கையைக் கொண்டு வரும்படி தேவன் அவனுக்கு ஒரு தருணத்தைக் கொடுத்தார்.

அப்படியிருந்தும் காயீன் அதை நிராகரித்தான். அவ்விதமாகவே தேவனுடைய உபதேசத்தை ஏற்றுக் கொள்ளும்படி எல்லாருக்கும் தேவன் தருணத்தைக் கொடுக்கிறார். ஆனாலும் அவர்கள் தேவனுடைய உபதேசத்தை நிராகரித்து, தங்கள் பாரம்பரியங்களையும் மனுஷீகக் கோட்பாடுகளையும் பின்பற்றி மனுஷனுடைய ஆளுகைக்கு ஒப்புக் கொடுக்கிறார்கள்.

காயீனைப் போலவே இயேசுகிறிஸ்து காலத்தில் வாழ்ந்த **வேதபாரகர்கள்**, **பரிசேயர்கள்** அதிக பக்தியாய் ஜீவித்தனர். வேதத்தில் தேறினவர்களாயிருந்தனர். ஆனால் கிறிஸ்து அவர்கள் முன் மாம்சத்தில் வெளிப்பட்டு வேத வாக்கியங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கும்போது அவரை விசுவாசிக்க முடியவில்லை. அவரைக் குறித்த வெளிப்பாடு அவர்களுக்கு இல்லை. ஆகவே யூதர்களுடைய பக்தி அவர்களுக்கு மறுபிறப்பைக் கொண்டு வந்ததா? இல்லை. அவர்களுடைய ஆராதனை வீணான ஆராதனையாக இருந்தது (மத். 15:9). அது போலவே இன்று சில கிறிஸ்தவர்கள் அதிக பக்தியாய் இருக்கின்றனர். ஆனால் தேவனால் வெளிப்படுத்தப்பட்ட வார்த்தையை மறுதலிக்கின்றனர். இவர்கள் தங்களை மறுபடியும் பிறந்தவர்கள் என்று நினைத்துக் கொண்டு தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொள்ளுகிறார்கள். ***தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை நீ விட்டு விலகு*** (2 தீமோத் 3:5) என்று பரிசுத்த பவுல் சொல்லுகிறார்.

c) **மறுபிறப்பு என்பது நம்மை நாமே சீர்திருத்திக் கொள்ளுவதும் அல்ல**: சிலர் தங்கள் வாழ்க்கையில் புதிய தீர்மானம் செய்து, திருந்தி வாழ முயற்சி செய்யலாம். அது நல்லது தான். ஆனால் அது தற்காலிகமானது. உதாரணமாக **பேதுரு** கர்த்தரை மறுதலிக்கமாட்டேன் என்று தீர்மானம் பண்ணினான். ஆனால் அன்று இராத்திரியிலே இயேசுவை மூன்று தரம் மறுதலித்தான். அவன் மறுபடியும் பிறக்கவில்லை. இயேசு அவனைப் பார்த்து, ***"நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து"*** என்று சொல்லியிருந்தார் (லூக்கா 22:32). ஆகவே மறுபிறப்பு என்பது ஒரு மனிதனுக்குள் தேவன் பரிசுத்தஆவியாக வாசஞ்செய்து அவன் இருதயத்திலிருந்து பாவஞ்செய்ய வேண்டும் என்ற விருப்பத்தை எடுத்துப் போடுவதாகும் (take away the desire to do sin). ***தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான். ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான்*** (1 யோவான் 3:9).

d) **பக்தியாய் இருப்பது மட்டும் மறுபிறப்பல்ல (Just being religious is not New Birth):** தினமும் பைபிள் படித்து, ஜெபிக்கிற அனுபவம் உடையவர்களாயும், ஊழியத்தில் நாட்டம் உடையவர்களாயும் இருந்தால் அவர்கள் மறுபடியும் பிறந்தவர்கள் என்று பலர் நினைக்கிறார்கள். பைபிள் படிப்பது, ஜெபிப்பது, ஊழியம் செய்வது கிறிஸ்தவ வாழ்க்கைக்கு மிகவும் அவசியம். ஒவ்வொரு கிறிஸ்தவரும் அதைக் கட்டாயம் செய்ய வேண்டும். ஆனால் அப்படியிருந்தும் மறுபடியும் பிறக்காமல் இருக்க முடியும். உதாரணமாக, **அப்பொல்லோ** என்பவன் அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்தவனும் சாதுரியவானும் வேதாகமங்களில் வல்லவனுமாயிருந்தான். அவன் கர்த்தருடைய மார்க்கத்திலே உபதேசிக்கப்பட்டு, யோவான் கொடுத்த ஸ்நானத்தை மாத்திரம் அறிந்தவனாயிருந்து, ஆவியில் அனலுள்ளவனாய்க் கர்த்தருக்கு அடுத்தவைகளைத் திட்டமாய்ப் போதகம் பண்ணிக் கொண்டு வந்தான். ஆனால் அவன் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறவில்லை. ஆகவே அவன் விசுவாசியாய் இருந்தபோதிலும், பரிசுத்தஆவியைப் பெறவில்லை. தேவனுடைய ஜீவனாகிய பரிசுத்தஆவியைப் பெறுவதே மறுபடியும் பிறப்பதாகும். எனவே ஆக்கில்லாவும்

பிரிஸ்கில்லாளும் அவனைச் சேர்த்துக் கொண்டு, தேவனுடைய மார்க்கத்தை அதிக திட்டமாய் அவனுக்கு விவரித்துக் காண்பித்தார்கள் (அப். 18:24–26).

e) **அந்நியபாஷை பரிசுத்தஆவியைப் பெற்றதின் அடையாளமல்ல (Speaking tongues is not the evidence of the Holy Ghost):** சிலர் நாங்கள் அந்நியபாஷை பேசுகிறோம்; ஆகவே நாங்கள் பரிசுத்தஆவியைப் பெற்றிருக்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அந்நிய பாஷை என்பது பரிசுத்தஆவியின் கடைசி வரம். அதாவது ஒன்பதாவது வரம். அது பரிசுத்தஆவியைப் பெற்றதின் அடையாளமல்ல. பரிசுத்தஆவி என்றால் கிறிஸ்து. அந்நியபாஷை என்பது தேவன் கொடுக்கும் ஒரு சிறிய வரம் (Gift). ஆனால் கர்த்தரையே சொந்தமாக்கிக் கொள்ளுவது தான் பரிசுத்தஆவியின் அபிஷேகம். பரிசுத்தஆவியைப் பெற்றதின் உண்மையான அடையாளம். ஆவியானவர் அந்த நபரை சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துவதாகும். தேவனால் வெளிப்படுத்தப்பட்ட சத்தியங்களை ஒரு மனுஷனால் விசுவாசிக்க முடியவில்லை என்றால், அந்த மனுஷன் ஒருவேளை அதிகமாக அந்நியபாஷைகளைப் பேசினாலும், அந்த மனுஷனுக்குள் பரிசுத்தஆவி இல்லை என்று உறுதியாகச் சொல்லலாம். **பிலேயாம்** தீர்க்கதரிசன வரத்தை உடையவனாயிருந்தான். அவனுடைய தீர்க்கதரிசனம் முற்றிலும் உண்மை. ஆனால் அவன் தேவனுடைய மனிதன் அல்ல. அவனுடைய உபதேசங்கள் தவறு (வெளி. 2:14). பிரதான ஆசாரியனாகிய காய்பாவின் தீர்க்கதரிசனம் சரிதான் (யோவான் 11:49–52). ஆனால் அவன் இயேசுவுக்குக் கொடூரமான சிலுவை மரணத்தைக் கொடுக்கும்படி தேசாதிபதியாகிய பிலாத்துவை நிர்பந்தப்படுத்துகிறவனாயிருந்தான். (யோவான் 19:15,16). இவர்கள் ஆவியின் வரங்களைப் பெற்றும் மறுபடியும் பிறவாத ஊழியக்காரர்கள். இந்தக் கடைசி காலத்தில் இப்படிப்பட்ட ஊழியர்கள் அநேகராயிருப்பார்கள் என்று இயேசுகிறிஸ்து தீர்க்கதரிசனமாகச் சொல்லியிருக்கிறார்.

***"அந்நாளில் அநேகர் என்னை நோக்கி, கர்த்தாவே கர்த்தாவே உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்"*** (மத்தேயு7:22,23).

## III. பூமிக்குரிய பிறப்பும் ஆவிக்குரிய பிறப்பும் (Natural Birth Vs Spiritual Birth)

நாம் தகப்பனுக்கும், தாய்க்கும் பிறப்பது பூமிக்குரிய பிறப்பு (Natural Birth) இதுதான் நமது முதல் பிறப்பு. இந்தப் பிறப்பு நம்மைத் தேவனுடைய ராஜ்யத்திற்குக் கொண்டு செல்லாது. இந்த பிறப்பு நம்மை தேவனிடத்திற்கும், அவருடைய ராஜ்யத்திற்கும் கொண்டு செல்லுகிற ஒரு பிறப்பாயிருந்தால் நாம் மறுபடியும் பிறக்க வேண்டிய அவசியமில்லை. நமது முதல் பிறப்பு மாம்சத்தினால் உண்டானது. அது பாவப்பிறப்பு. அது இனச்சேர்க்கையினால் (Sex Birth) உண்டான பிறப்பு. ***"இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்; என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்"*** (சங் 51:5) என்று தாவீது ராஜா சொல்லுகிறான். உலகத்தில் பிறக்கிற ஒவ்வொரு குழந்தையும் பாவத்தில் பிறந்து, அக்கிரமத்தில் உருவாக்கப்பட்டு, பொய் பேசுகிறவர்களாக வெளிப்படுகிறார்கள் (Born in sin, shaped in iniquity, come to the world speaking lies). ***எல்லாரும் பாவம் செய்து தேவமகிமையற்றவர்களானார்கள்*** (ரோமர் 3:23). ***பாவத்தின் சம்பளம் மரணம்*** (ரோமர் 6:23). ஆகவே இந்தப் பாவப்பிறப்பினிமித்தம் நாம்

தேவனுடைய ஆவியைப் பெற முடியாது. தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது. பாவப் பிறப்பு, ஒரு மனுஷனை பாதாளத்திற்கும், நியாயத்தீர்ப்பிற்கும், இரண்டாம் மரணமாகிய அக்கினிக் கடலுக்கும் கொண்டு செல்லுகிறது. ***"பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபச்சாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்"*** (வெளி 21:8*)* என்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சொல்லுகிறார். எனவே இவைகளுக்கெல்லாம் தப்பி, நாம் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசித்து, அவரோடு நித்தியகாலமாக வாழ வேண்டுமென்றால் மறுபடியும் பிறக்க வேண்டும். முதலில் மாம்சத்தின்படி தகப்பனுக்கும் தாய்க்கும் பிறந்த நாம், இரண்டாவதாக தேவனால் பிறப்பதே மறுபிறப்பு என்பதாகும். ***தேவன் ஆவியாயிருக்கிறார்*** (யோவான் 4:24). அவர் வார்த்தையாயிருக்கிறார் (யோவான் 1:1,14). ஆகவே நாம் இயேசுகிறிஸ்துவை விசுவாசித்து நம்முடைய ஆத்துமாவை, அவருடைய வார்த்தைக்குத் தாழ்த்தி ஒப்புக் கொடுக்கும்போது, அவர் ஆவியின் ரூபமாக வந்து நமக்குள் வாசஞ் செய்து, நம்மை சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்துகிறார் (யோவான் 16:13). இதுவே ஆவியினால் பிறக்கின்ற அனுபவமாயிருக்கிறது. நம்முடைய ஆத்துமாவும், தேவனுடைய வார்த்தையும் ஒன்றாக இணைக்கப்படும்போது மறுபிறப்பு உண்டாகிறது (1 கொரி 6:17). இது ஆவிக்குரிய விவாக இணைப்பு (Spiritual Marriage Union) என்றும் அழைக்கப்படுகிறது. தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட வார்த்தையை நம்முடைய ஆத்துமா எதிர்க்கும்போது மறுபிறப்பு அடைய முடியாது.

உதாரணமாக **சகேயு** வீட்டிற்குள் இயேசு பிரவேசித்து ***"இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே"*** என்றார் (லூக்கா 19:9). சகேயு ஏற்கனவே மாம்சத்தின்படி யூத குலத்தில் பிறந்து, ஆபிரகாமின் குமாரனாக இருக்கும்போது அவனைப் பார்த்து இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே என்று சொல்லுவதின் அர்த்தம் என்ன? இயேசுவை விசுவாசித்து அவன் தன் பாவங்களை அறிக்கை செய்து, அவரை ஏற்றுக் கொள்ளுவதற்கு முன்பு, அவன் ஆபிரகாமின் மாம்ச பிரகாரமான குமாரனாயிருந்தான். இப்பொழுது ஆவியின்படி ஆபிரகாமின் விசுவாச குமாரனாயிருக்கிறான். ***ஆகையால் விசுவாசமார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக*** *(*கலா *3:7)* என்று தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது. ஆனால் வேதபாரகரும், பரிசேயரும் தங்களை ஆபிரகாமின் பிள்ளைகள் என்றும் சொன்ன போது, இயேசு அவர்களைப் பார்த்து நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசினால் உண்டானவர்கள் என்று சொன்னார் (யோவான் 8:39,44). அப்படியானால் இயேசு சொன்னதின் அர்த்தம் என்ன? அவர்கள் ஆபிரகாமின் பிள்ளைகள் இல்லையா? அவர்கள் மாம்சத்தின்படி ஆபிரகாமின் பிள்ளைகள்தான். ஆனால் ஆவியின்படி அவர்கள் பிசாசின் பிள்ளைகள். ஏனெனில் அவர்கள் இயேசுகிறிஸ்துவின் உபதேசத்திற்கு எதிர்த்து நின்றார்கள். அவர்கள் மறுபடியும் பிறவாதவர்கள். அவர்கள் சர்ப்பத்தின் வித்துக்கள் என்று இயேசு சொன்னது சரிதான்.

## IV. பழைய ஏற்பாட்டில் மறுபிறப்பைப் பற்றிய உபதேசம் (Doctrine of New Birth in the Old Testament)

பழைய ஏற்பாட்டில் ஒரே ஒரு பிறப்பு தான் உண்டு. அது ஆபிரகாமின் சந்ததியில் மாம்சத்தின்படி பிறப்பதாகும். புதுப்பிறப்பு என்பது புதிய ஏற்பாட்டில் நிகழும் சம்பவமாகும். அது கல்வாரி சிலுவையின் மூலமாக மாத்திரமே **(only possible by cross)** சாத்தியமாகிறபடியால், பழைய ஏற்பாட்டு

பரிசுத்தவான்கள் இந்த அனுபவத்தைப் பெற முடியவில்லை. ஆனால் அவர்களுடைய வாழ்க்கையில் அது திருஷ்டாந்தமாகவும், அடையாளமாகவும் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

a) **மாம்சத்தின்படிப் பிறப்பதும், ஆவியின்படி பிறப்பதும் (Born by flesh Vs Born by Spirit):** இயேசுகிறிஸ்து **நிக்கொதேமுவிடம்** ***"ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்"*** (யோவான் 3:3) என்று கூறுகிறார். காணமாட்டான் என்றால் அதை அறிந்து கொள்ளமாட்டான் (Cannot understand) என்று பொருள்படும். தேவனுடைய ஆவியைப் பெறாத ஜென்ம சுபாவமுள்ள மனுஷன் தேவனைக் குறித்தும், அவருடைய வார்த்தையைக் குறித்தும், ஆவிக்குரிய சத்தியங்களைக் குறித்தும் புரிந்து கொள்ள இயலாது. அது அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும் (1 கொரி 2:14). இயேசு நிக்கொதேமுவிடம் மறுபிறப்பைக் குறித்துப் பேசும் போது அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆகவே அவன் இயேசுவை நோக்கி ஒரு மனுஷன் முதிர் வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான். இயேசு அவனை நோக்கி: ***"நீ இஸ்ரவேலில் போதகனாயிருந்தும் இவைகளை அறியாமலிருக்கி றாயா?"*** என்றார் (யோவான் *3:4,10).*

நிக்கொதேமு பழைய ஏற்பாட்டின்படி, நியாயப்பிரமாணத்தின் உபதேசத்தில் இருந்தான். ***நியாயப்பிரமாணமானது வரப்போகிற நன்மைகளின் பொருளாயிராமல் அவைகளின் நிழலாய் மாத்திரம் இருக்கிறது*** (எபிரெயர் 10:1*).* அது பூமிக்குரியதாயிருக்கிறது (Natural). புதிய ஏற்பாடு ஆவிக்குரியதாயிருக்கிறது ( Spiritual). பழைய ஏற்பாடு மறுபிறப்பைக் குறித்து நிழலாட்டமாகவும், தீர்க்கதரிசனமாகவும் (Ezekiel, Joel) உரைப்பதினால், நிக்கொதேமுவினால் மறுபிறப்பைக் குறித்த ஆவிக்குரிய சத்தியத்தைத் தெளிவாக அறிந்து கொள்ள இயலவில்லை. ஆகவே அவன் இயேசுவை நோக்கி ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான்.

b) **பரிசுத்தஆவி அவர்கள் மேல் வந்தார், ஆனால் அவர்களுக்குள் வந்து வாசஞ்செய்யவில்லை (The Holy Ghost came upon them but the Holy Ghost did not dwell in them)** இயேசுகிறிஸ்துவின் இரத்தம்தான் பாவங்களைக் கழுவிச் சுத்திகரிக்கும். ***இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்*** (1 யோவான் 1:7B). பாவம் நிவிர்த்தியானால்தான் பரிசுத்தஆவி வந்து, நமக்குள் வாசஞ்செய்ய முடியும். பழைய ஏற்பாட்டு உடன்படிக்கை காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தத்தினால் உண்டானது. காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்யமாட்டாது. அவைகள் ஆராதனை செய்கிறவனை பூரணப்படுத்தமாட்டாது. அவைகள் பாவங்களுண்டென்று உணர்த்தும் மனசாட்சியையும், பாவம் செய்ய வேண்டுமென்கிற விருப்பத்தையும் எடுத்துப் போட முடியாது (எபி. 10:1–4). அவைகள் பாவங்களை மூடுவதற்கு தற்காலிகமாகக் கொடுக்கப்பட்ட வழியாகும். பாவம் நிவிர்த்தி செய்யப்படாதபடியால், பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் மேல் பரிசுத்தஆவி வந்தாலும், பரிசுத்தஆவி அவர்களுக்குள் வந்து வாசஞ்செய்ய முடியவில்லை (The Holy Ghost came upon them but did not come and dwell in them).

**சிம்சோனின்** மேல் கர்த்தருடைய ஆவி வந்தது (நியா 14:6). **யெப்தா**வின் மேல் கர்த்தருடைய ஆவி வந்தது (நியா 11:29). **எலிசா**வின் மேல் தேவனுடைய ஆவி வந்தது (2 இரா 2:15). இவ்விதமாகத் தான் வேதத்தில் எழுதப்பட்டிருக்கிறது. மறுபடியும் பிறப்பது அல்லது புதுப்பிறப்பு

என்பது பரிசுத்தஆவி ஒரு மனுஷனுக்குள் வாசஞ்செய்வதாகும். ஆகவே பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள் புதுப்பிறப்பின் அனுபவத்தைப் பெற இயலாது. எனவே மரித்த பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள், மெய்யான ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்படும் வரைக்கும் பரதீசு (Paradise) என்ற ஸ்தலத்தில் காத்திருக்க வேண்டியதாயிருந்தது. கிறிஸ்துவின் இரத்தம் சிந்தப்பட்டபின்பு, அவர்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்பட்டபடியால், அவர்களை அந்த ஸ்தலத்திலிருந்து அவர் விடுதலையாக்கினார். அவர் உயிர்த்தெழுந்த பின்பு, அவர்களும் உயிர்த்தெழுந்து (மத்தேயு 27:52,53), அவருடனே கூட அவர்களும் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசித்தனர் (எபேசியர் 4:8–10).

c) **விருத்தசேதனம் (Circumcision):** பழைய ஏற்பாட்டில் ஆபிரகாமின் சந்ததியில் பிறந்த ஆண் பிள்ளைகள், விருத்தசேதனம் பண்ணப்பட வேண்டும் (ஆதி 17:11,12). விருத்தசேதனம் மறுபிறப்புக்கு ஒரு நிழலாயிருக்கிறது. விருத்தசேதனம் பெற்றவர்களுக்குத் தான் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட கானான் தேசத்தில் சுதந்திரம் உண்டு (யோசுவா 5:2). விருத்தசேதனம் இல்லாத பெலிஸ்தன் கோலியாத்திற்கு அந்த தேசத்தில் உரிமை இல்லை என்பதை விருத்தசேதனமுள்ள **தாவீது** அறிந்திருந்தபடியால் ***"ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்தப் பெலிஸ்தன் எம்மாத்திரம்"*** என்றான் (1 சாமு 17:26). அந்த வெளிப்பாட்டில் அவன் உறுதியாக இருந்தபடியால் தேவன் அந்த பெலிஸ்தனை, விருத்தசேதனமுள்ள தாவீதின் கரத்தில் ஒப்புக் கொடுத்தார். புதிய ஏற்பாட்டில் புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல. ***ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம்*** (ரோமர் 2:29).

d) **புத்திரசுவிகாரம் (Adoption):** பழைய ஏற்பாட்டில் புத்திரசுவிகாரம் (Adoption) என்பது மறுபிறப்பு அல்லது புதுபிறப்பிற்கு அடையாளமாயிருக்கிறது. பழைய ஏற்பாட்டில் ஒரு குடும்பத்தில் ஒரு குமாரன் பிறக்கும்போது, தகப்பனார் அவன் நன்மை, தீமை அறியத்தக்க வயதை அடையும்போது, அவனை ஒரு உபாத்தியாரிடத்தில் (Tutor) ஒப்படைக்கிறார். அந்த உபாத்தியார் அவனுக்குத் தகப்பனாருடைய பொறுப்புகளை, எவ்விதமாகக் கையாளவேண்டும் என்ற எல்லாப் பயிற்சிகளையும் கற்றுக் கொடுக்கிறார். அவன் அவைகளில் தேறினவுடன், அவர் எஜமானிடத்தில் அவனைக் குறித்த நற்சாட்சியை அறிவிக்கிறார். அவர்: "உம்முடைய மகன் உம்மைப் போலவே நல்ல சுபாவத்தை உடையவராயிருக்கிறார். அவர் உம்மைப் போலவே காரியங்களைத் திறமையாக, ஞானமாகக் கையாளக் கூடியவராயிருக்கிறார். அவருக்குப் புத்திர சுவிகாரம் வழங்கலாம்" என்று கூறுகிறார். அப்பொழுது தகப்பனார் ஒரு நாளைக் குறித்து அந்த நாளில் தன்னுடைய உறவினர், குடும்பத்தார் தன்னுடைய பண்ணையைச் சார்ந்த அனைவரையும் அழைத்து புத்திரசுவிகார விழாவை (Ceremony of Adoption) ஏற்பாடு செய்கிறார். அந்த நாளில், அவனுக்கு விசேஷித்த வஸ்திரத்தை அணிவித்து, உயரமான இடத்தில் அவனை அமர்த்தி, "இவன் என்னுடைய குமாரன். இவனுக்குப் புத்திரசுவிகாரத்தை வழங்குகிறேன். இனிமேல் இவன் என்னுடைய காரியங்கள் எல்லாவற்றையும் கையாளுவான். இவனுக்குச் செவிகொடுங்கள்" என்று தகப்பனார் கூறுவார். அது முதல் அந்தக் குமாரன் எல்லாவற்றிற்கும் சுதந்தரவாளியாக மாறுகிறான் (கலா 4:1–4). **கர்த்தராகிய இயேசுகிறிஸ்து** தேவனுடைய குமாரனாக இருந்தார். அவர் பேதுரு, யாக்கோபு, யோவான் என்ற மூன்று சீஷர்களோடு ஒலிவமலையில் இருக்கும்போது, மறுரூபமானார். அவருடைய வஸ்திரம் வெண்மையாகி பிரகாசித்தது. ஒரு மேகம் அவர் மேல் நிழலிட்டது. மோசேயும், எலியாவும் அங்கே தோன்றி

அவரோடு சம்பாஷித்தனர். அப்பொழுது ***இவர் என்னுடைய நேச குமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன். இவருக்குச் செவிகொடுங்கள் என்று அந்த மேகத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று*** (மத். 17:1–5). இந்த நிகழ்ச்சி இயேசுவின் புத்திரசுவிகாரத்தை வெளிப்படுத்துகிறது.

ஆனால் ஒருவன் மாம்சத்தின்படி குமாரனாகப் பிறந்தும், உபாத்தியாருக்குக் கீழ்ப்படியாமல், முதிர்ச்சி (Maturity) அடையாமல் போனால் அவனுக்குப் புத்திரசுவிகாரம் வழங்கப்படமாட்டாது. **ஏசா** முற்பிதாவாகிய ஈசாக்கின் மூத்த குமாரனாகப் பிறந்தாலும், புத்திர சுவிகாரத்தை அடையவில்லை. ***ஒருவனும், ... ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்ட புத்திரபாகத்தை விற்றுப் போட்ட ஏசாவைப் போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள். ஏனென்றால், பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள்; அவன் கண்ணீர்விட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற்போனான்*** (எபிரெயர் 12:16,17) என்று தேவனுடைய வார்த்தை நம்மை எச்சரிக்கிறது. நாம் புத்திரசுவிகாரத்தையடையும்படி நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களை மீட்டுக் கொள்ளத்தக்கதாக, ***"காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார். மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்"*** (கலா 4:4–6). இயேசுகிறிஸ்து எப்படி புத்திரசுவிகாரத்தைப் பெற்றாரோ, அதேவண்ணமாக நாமும் புத்திரசுவிகாரத்தைப் பெறவேண்டும். அதுவே மறுபிறப்பு.

e) **ஓய்வுநாள் (Sabbath):** அடுத்தபடியாக, பழைய ஏற்பாட்டில் ஓய்வுநாள் (Sabbath) மறுபிறப்பிற்கு நிழலாக உள்ளது. வாரத்தின் ஏழாவது நாளை அவர்கள் ஓய்வுநாள் என்று நியமித்துக் கொண்டு, அந்த நாளில் யாதொரு வேலையும் செய்யாமல் கர்த்தருக்கென்று அந்த நாளை ஒப்புக் கொடுத்தனர். அது அவர்களுக்கு சரீர இளைப்பாறுதலைக் (Physical Rest) கொண்டு வந்தது. ஆனால் மறுபிறப்பு நமக்கு ஆத்தும இளைப்பாறுதலைக் (Soul Rest) கொண்டு வருகிறது. அவருடைய உபதேசத்திற்கு நம்மை தாழ்த்தி ஒப்புக் கொடுக்கும்போது, நாம் பாவ கிரியைகளைவிட்டு விடுதலையாகி, ஆத்தும இளைப்பாறுதலைப் பெறுகிறோம்.

***"வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்; நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொண்டு, என்னிடத்தில் கற்றுக் கொள்ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும். என் நுகம் மெதுவாயும், என் சுமை இலகுவாயும் இருக்கிறது"*** (மத்தேயு 11:28–30) என்று இயேசு அழைக்கிறார். இப்பொழுது இயேசுகிறிஸ்து மாம்சத்தில் இல்லை. அவர் வெளிப்படுத்தப்பட்ட வார்த்தையாயிருக்கிறார். நாம் வார்த்தையினிடத்திற்குத் திரும்பி நம்முடைய வாழ்க்கையை வார்த்தைக்கு ஒப்புக்கொடுத்தால் மட்டுமே இளைப்பாறுதலைப் பெறமுடியும். அந்த இளைப்பாறுதலை இயேசுகிறிஸ்து மாத்திரமே கொடுக்க முடியும்.

f) **தீர்க்கதரிசனம் (Prophecy):** பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் மறுபிறப்பின் ஆவிக்குரிய அனுபவத்தை எதிர்பார்த்தனர். மேசியாவாகிய கிறிஸ்துதான் அதைப் பிறப்பிக்க முடியும். அவர்கள் காலத்தில் கிறிஸ்து வராதபடியால், அவர்கள் அதைக் குறித்துத் தீர்க்கதரிசனம் உரைத்தனர். உதாரணமாக, **எசேக்கியல்** தீர்க்கதரிசி, ***"அப்பொழுது நான் உங்கள் மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன். நான் உங்களுடைய எல்லா அசுத்தங்களையும் உங்களுடைய***

***எல்லா நரகலான விக்கிரகங்களையும் நீக்கி உங்களைச் சுத்தமாக்குவேன். நீங்கள் சுத்தமாவீர்கள். உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப் போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன். உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன்"*** (எசேக் 36:25–27) என்று கூறியிருக்கிறார். இந்த தீர்க்கதரிசன வாக்கியங்கள் நமது மறுபிறப்பின்போது நிறைவேறுகிறது.

g) **பழைய ஏற்பாட்டிற்கும் புதிய ஏற்பாட்டிற்கும் உள்ள வித்தியாசங்கள்**

**(Differences between the Old Testament and the New Testament)** கீழ்கண்ட அட்டவணையில் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு இவைகளுக்குள்ள வித்தியாசத்தைக் காணமுடியும்.

**Table 1**

| எண் | பழைய ஏற்பாடு | புதிய ஏற்பாடு |
|---|---|---|
| 1 | பூமிக்குரியது | ஆவிக்குரியது |
| 2 | நிழலாகவும், அடையாளமாகவும் இருக்கிறது | உண்மைப் பொருளாயிருக்கிறது |
| 3 | தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டிருக்கிறது | தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது |
| 4 | ஆட்டுக் குட்டியின் இரத்தத்தினால் உண்டானது | இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் உண்டானது |
| 5 | பாவம் மூடப்பட்டது | பாவம் பரிகரிக்கப்பட்டது |
| 6 | பரிசுத்தஆவி அவர்கள் மேல் வந்தார் | பரிசுத்தஆவி அவர்களுக்குள் வந்து வாசம் செய்தார் |
| 7 | சரீர இளைப்பாறுதல் (Sabbath) | ஆத்தும இளைப்பாறுதல் |
| 8 | பூரணப்படுத்தாது | பூரணப்படுத்துகிறது |
| 9 | ஆபிரகாமின் சந்ததி | கிறிஸ்துவின் சந்ததி (சகல ஜனங்களிலும், ஜாதிகளிலும், பாஷைக்காரரிலுமிருந்து அவருடைய நாமத்திற்கென்று ஒரு ஜனம்) |
| 10 | மரித்த பரிசுத்தவான்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல் வரை பூமியின் கீழ் இருந்த பரதீசியில் காத்திருந்தனர் | மரித்த பரிசுத்தவான்கள் தேவசமூகத்தில் பிரவேசித்தனர் |

யூதர்கள் கிறிஸ்துவைச் சிலுவையில் அறைந்து புறக்கணித்தபடியால், அதுமுதல் தேவன், அவர்களோடு ஈடுபடுவதை நிறுத்திவிட்டு, யூதரல்லாத சகல ஜனங்களிலும், ஜாதிகளிலும், பாஷைக்காரரிலுமிருந்து தமது நாமத்திற்காக ஒரு ஜனத்தைத் தெரிந்து கொள்ளுகிறார் (அப். 15:14). அவர்கள் மறுபடியும் பிறந்த அனுபவத்தைப் பெற்றுக்கொள்ளுகிறார்கள். புதிய ஏற்பாட்டு

காலத்தில், தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் அதை எப்படிப் பெற்றுக் கொள்ளுகிறார்கள் என்பதைக் குறித்தும் தொடர்ந்து விளக்கமாக அறியலாம்.

## V. நாம் ஏன் மறுபடியும் பிறக்க வேண்டும்? (Why we must be born again)?

ஆதாமும் ஏவாளும் பாவம் செய்யவில்லை என்றால் மறுபடியும் பிறக்க வேண்டிய அவசியம் ஏற்படாது. நமது முதல் பிறப்பு பாவப் பிறப்பாயிருக்கிறபடியால், நாம் மறுபடியும் பிறக்க வேண்டியதாய் இருக்கிறது. ஆகவே மனுக்குலத்திற்குள் பாவம் எப்படி பிரவேசித்தது (How did Sin enter into the human race)? என்பதைக் குறித்த உண்மையை அறிய வேண்டிய அவசியம் உள்ளது.

a) **சிருஷ்டிப்பின் மூலம் பிள்ளைகள் (Born by Creation):** இந்த உலகம் தேவனுடைய உரைக்கப்பட்ட வார்த்தையினால் உருவாக்கப்பட்டது. ***விசுவாசத்தினாலே நாம் உலகங்கள் தேவனுடைய வார்த்தையினாலே உண்டாக்கப்பட்டதென்றும், இவ்விதமாய், காணப்படுகிறவைகள் தோன்றப்படுகிறவைகளால் உண்டாகவில்லை யென்றும் அறிந்திருக்கிறோம்*** (எபி 11:3*)*. தேவன், ஆவியாய் இருக்கிறதுபோல, முதல் மனிதனாகிய **ஆதாமை** ஆவியின் மனிதனாக (Spirit Man) தம்முடைய உரைக்கப்பட்ட வார்த்தையினால் (The Spoken Word) சிருஷ்டித்தார். ***தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார். அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார்; ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்*** (ஆதி 1:27). அந்த ஆவியின் மனிதன் பூமியோடு தொடர்புகொள்ள அவனுக்கு மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் ஐம்புலங்களைக் கொண்ட ஒரு சரீரத்தைப் பூமியின் மண்ணினால் உருவாக்கினார். ***தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான்*** (ஆதி 2:7). பின்பு மனுஷன் தனிமையாக இருப்பது நல்லதல்ல என்று சொல்லி, அவனுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணி, அவனுக்குள் இருந்த, பெண்ணின் ஆவியைப் பிரித்து அவனுடைய மாம்சத்தினாலும், அவனுடைய எலும்பினாலும், அவன் துணைவியாகிய ஏவாளை சிருஷ்டித்தார். அவர்களைக் கணவன், மனைவியாக இணைத்து ஆசீர்வதித்தார் (ஆதி 2:21–24). ஆகவே தேவனாகிய கர்த்தர் தம்முடைய பிள்ளைகளை சிருஷ்டிப்பின் மூலமாகக் கொண்டு வந்தார். அவர்களுக்கு வியாதி, முதுமை, மரணம் என்பதே இல்லை. அவர்கள் இயற்கையை தங்களுடைய வார்த்தையினால் ஆளுகை செய்தனர். காற்றைப் பார்த்து வீசாதே என்று சொன்னாலும், ஒரு மலையைப் பார்த்து நீ இவ்விடத்தை விட்டுப் பெயர்ந்து அவ்விடத்திற்குப் போ என்று சொன்னாலும், ஒரு மிருகத்தைப் பார்த்து கூப்பிட்டாலும் அவர்களுடைய வார்த்தைக்குச் சகலமும் கீழ்ப்படிந்திருந்தது (சங்கீதம் 8:4–8). அவர்கள் தேவனோடுகூட ஐக்கியமுள்ளவர்களாயிருந்தார்கள்.


தேவனாகிய கர்த்தர் ஏதேன் தோட்டத்தின் நடுவில் இரண்டு விருட்சங்களை வைத்தார். ஒன்று **ஜீவவிருட்சம்** (Tree of Life). மற்றொன்று **நன்மை தீமை அறியத்தக்க விருட்சம்** (Tree of Knowledge of good and evil). ***தேவனாகிய கர்த்தர், பார்வைக்கு அழகும் புசிப்புக்கு நலமுமான சகலவித விருட்சங்களையும், தோட்டத்தின் நடுவிலே ஜீவவிருட்சத்தையும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தையும் பூமியிலிருந்து முளைக்கப்பண்ணினார்*** (ஆதி 2:9). ஜீவ விருட்சம் கிறிஸ்துவுக்கும், நன்மை தீமை அறியத்தக்க விருட்சம் சாத்தானுக்கும் உருவகமாக எழுதப்பட்டு இருக்கிறது. நீதியுள்ளவரும், பொல்லாங்கனும் ஏதேனில் இருந்தனர். ***"நீ (சாத்தான்) தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன்"*** (எசேக் 28:13) என்று வேதம் சொல்லுகிறது. கிறிஸ்து வார்த்தையாயிருக்கிறார். மனிதன் ஜீவ விருட்சத்தினால் ஜீவிக்க வேண்டும். அல்லது அறிவின் விருட்சத்தைத் தெரிந்துகொண்டு, அறிவினால் ஜீவிக்க வேண்டும். ஜீவ விருட்சத்தினால் அவனுக்கு நித்திய ஜீவன் உண்டு. ஆனாலும் நன்மை, தீமை அறியத்தக்க விருட்சத்தின்

கனியைப் புசிக்க வேண்டாம். ***“அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்”*** என்று தேவன் கட்டளையிட்டார் (ஆதி 2:18).

ஆதாமும், ஏவாளும் தேவனைப்போல உரைக்கப்பட்ட வார்த்தையைக் கொண்டு, சிருஷ்டிப்பின் மூலமாக பூமியிலிருந்து தங்களுக்குப் பிள்ளைகளைக் கொண்டுவரவேண்டும் (Adam and Eve need to reproduce themselves by the Spoken Word) என்பது தேவனுடைய வழி. அதுவே தேவனுடைய பரிபூரண சித்தம் (Perfect Will of God). இனச்சேர்க்கையினால் பிள்ளைகளைப் பெற்றுக்கொள்வது (Sexual Birth) தேவனுடைய பரிபூரண சித்தமல்ல. அது தேவனுடைய அனுமதிக்கும் சித்தம் (Permissive Will of God).

b) **சர்ப்பத்தினால் ஏவாள் எப்படி வஞ்சிக்கப்பட்டாள்? (How was Eve deceived by the Serpent**)? ***சர்ப்பமானது*** மனுஷனைப் போன்ற சாயலையுடையதாயும், இரண்டு காலில் நிமிர்ந்து நடக்கக்கூடியதாகவும், பேசும் திறமையுடைய ஒரு மிருகமாயிருந்தது (ஆதி 3:1). அது ஆதாமுக்கு ஒரு வேலைக்காரன் போலிருந்தது. மிருகத்திற்கும் மனுஷனுக்குமுள்ள வித்தியாசம் என்னவென்றால், மிருகத்திற்கு ஆத்துமா இல்லை, மனுஷனுக்கு ஆத்துமா உண்டு. மனுஷனுடைய ஆத்துமாவில் தான் தேவன் வாசம்பண்ணுவார். மனுஷனுக்குள் சாத்தான் வாசம் பண்ணமுடியாது. ஆனால் மிருகத்திற்குள் சாத்தான் புகுந்து கொள்ள முடியும். இன்று மனுஷன் தெய்வீக சுபாவத்தை இழந்து, பாவத்தினால் பிறப்பதினால் சாத்தான் மனுஷனுக்குள்ளும் புகுந்து, வாசஞ்செய்ய முடிகிறது.

ஆகவே சாத்தான் ஏவாளை வஞ்சிக்கும்படி சர்ப்பத்திற்குள் புகுந்து கொண்டான். அப்பொழுது சர்ப்பமானது தந்திரமுள்ளதாகவும், இச்சையுள்ளதாகவும் மாறி ஏவாளை வஞ்சித்தது. ***சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்தது*** (2 கொரி 11:3) என்று பரிசுத்த பவுல் சொல்லுகிறார். ஏவாள் சர்ப்பத்தின் பேச்சைக் கேட்டு, தேவனுடைய வார்த்தையை அவிசுவாசித்து, சர்ப்பத்தினால் வஞ்சிக்கப்பட்டாள். அதாவது, சர்ப்பத்தோடு மாம்சத்தின்படி ஐக்கியப்பட்டாள். ***அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்*** (ஆதி 3:6). இவ்விதமாக அவள் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தில் பங்கு பெற்றாள். ஆதாமும் ஏவாளின் பேச்சைக் கேட்டு மீறுதலுக்குட்பட்டான். இதுவே **மூலபாவம் (Original Sin)**. ***அப்படியே விபசாரஸ்திரீயினுடைய வழியும் இருக்கிறது; அவள் தின்று, தன் வாயைத் துடைத்து; நான் ஒரு பாவமும் செய்யவில்லை என்பாள்*** (நீதி 30:20). இந்த வசனத்தில் தின்று என்ற வார்த்தை மாம்சத்தின்படி அறிவதற்கு அடையாளமாக எழுதப்பட்டிருப்பதைக் காணலாம். முதலாவதாக, சர்ப்பமானது ஏவாளை அறிந்தது. பின்பு ஆதாம் ஏவாளை அறிந்தான். இதனால் இரட்டையர்கள் (காயீன், ஆபேல்) தோன்றினார்கள். ஆபேல் ஆதாமினால் உண்டானவன். ***ஆதாம் தேவனால் உண்டானவன்*** (லூக்கா 3:38). காயீன் பொல்லாங்கனால் உண்டானவன் (1 யோவான் 3:12). (படம் 1 பார்க்கவும்)




படம் 1

c) **அத்தியிலையின் அரைக்கச்சைகள் (Aprons of Fig leaves):** ***அப்பொழுது அவர்கள் இருவருடைய கண்களும் திறக்கப்பட்டது. அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்து, அத்தியிலைகளைத் தைத்து, தங்களுக்கு அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள்*** (ஆதி 3:7)**.** நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியில் பங்கு பெற்றவுடன், அவர்கள் தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்தனர்**.** அதற்கு முன் அவர்கள் நிர்வாணிகளாக இருந்தும் அதை அறியவில்லை (ஆதி**.** 2:25) என்று எழுதியிருக்கிறது**.** ஆகவே அவர்கள் ஒருவரை ஒருவர் இச்சையாய் பார்க்கக்கூடாதபடிக்கு, அவர்கள் கண்களுக்கு முன்பாக தேவனுடைய பரிசுத்தம் என்னும் பரிசுத்தத் திரை (Holy Veil) இருந்தது**.** அவர்கள் பரிசுத்தஆவியின் பரிசுத்தத்தினால் திரையிடப்பட்டிருந்தனர்**.** (They did not know they were naked, because the holiness of God kept their eyes veiled. They were veiled with the holiness of the Holy Spirit)**.** ஆனால்

இப்பொழுது அந்த திரை அகன்றுவிட்டது. ஆகவே தாங்கள் நிர்வாணிகள் என்று அறிந்தனர். ***எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களானார்கள்*** (ரோமர் 3:23) என்று வார்த்தை சொல்லுகிறது. அவர்கள் தங்கள் நிர்வாணத்தை மூடுவதற்கு அத்தியிலைகளைத் தைத்து அரைக்கச்சைகளை உண்டுபண்ணினார்கள். ஆனால் தேவனுக்கு முன்பாக வந்து நிற்பதற்கு, அது போதுமான அல்லது தகுதியான வஸ்திரமாகக் காணப்படவில்லை. ஆகவே தேவன் ஆதாமைக் கூப்பிட்டபோது, அவனால் அவருக்கு முன்பாக வந்து நிற்க முடியவில்லை. புதருக்குள் ஒளிந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது தேவன் அவர்கள் நிர்வாணத்தை மூடுவதற்காக அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு ஆட்டுக்குட்டியை பலியிட்டு, அந்தத் தோலை உடுத்திக் கொண்டு அவருக்கு முன் நிற்கும்படிச் செய்தார். ***தேவனாகிய கர்த்தர் ஆதாமுக்கும் அவன் மனைவிக்கும் தோல் உடைகளை உண்டாக்கி அவர்களுக்கு உடுத்தினார்*** (ஆதி. 2:21).

**அத்தியிலை** மனுஷனால் உண்டாக்கப்பட்ட மதங்களுக்கும் கோட்பாடுகளுக்கும், ஸ்தாபனங்களுக்கும் அடையாளமாயிருக்கிறது. **நிர்வாணம்** பாவத்திற்கு அடையாளமாயிருக்கிறது. மதம் என்பதற்கு மூடல் என்று அர்த்தம் (Religion means Covering). ஆகவே மதங்களின் மூலமாகவோ அல்லது ஸ்தாபனங்கள் மூலமாகவோ, தேவனுடைய பிரசன்னத்தை அணுகமுடியாது. ஏதேனில் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தம், மெய்யான ஆட்டுக் குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்திற்கும், அந்த ஆட்டுக்குட்டியின் தோல் தேவனுடைய நீதிக்கும் அடையாளமாயிருக்கிறது. நாம் தேவனை அணுகுவதற்கு, அவருடைய இரத்தத்தினால் நம்முடைய பாவம் மன்னிக்கப்பட்டு, அவருடைய நீதியினால் தரிப்பிக்கப்பட வேண்டும் (1 பேதுரு 1:23; 2 கொரி 5:21) என்ற ஆவிக்குரிய வெளிப்பாட்டை இங்கே காண்கிறோம்.

d) **கர்த்தர் சர்ப்பத்தை சபித்தார் (God cursed the Serpent):** ***அப்பொழுது தேவனாகிய கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து நீ இதைச் செய்தபடியால் சகல நாட்டு மிருகங்களிலும், சகல காட்டு மிருகங்களிலும் சபிக்கப்பட்டிருப்பாய். நீ உன் வயிற்றினால் நகர்ந்து, உயிரோடிருக்கும் நாளெல்லாம் மண்ணைத் தின்பாய்*** (ஆதி 3:14) என்று சர்ப்பத்தைச் சபித்தார். கர்த்தர் சர்ப்பத்தைப் பார்த்து: நீ இதைச் சொன்னபடியால் என்று கூறாமல் நீ இதைச் செய்தபடியால் என்று கூறுவதால், அது ஏவாளிடம் தவறாக நடந்து கொண்டது என்பது உண்மையாகிறது. சர்ப்பமானது பிசாசுக்கு இடங்கொடுத்து, ஏவாளை வஞ்சித்ததினிமித்தமாக, தேவன் அதின் கால்களையும், கைகளையும் தரித்துப் போட்டு, அதை ஒரு வழவழப்பான கயிறு போன்ற ஊறும் பிராணியாக (Reptile) மாற்றினார். அதற்குத் தற்போது கால்களும், கைகளும் இல்லாதபடியால் அது நடந்து திரிந்து தன் விருப்பம் போல ஜீவிக்க முடியாது. அது மாத்திரமல்ல அதின் பேசும் திறமையை தேவன் எடுத்துப் போட்டபடியால், அது இப்பொழுது ஸ் ஸ் ஸ் ஸ் என்று தான் சத்தமிட முடியும். தேவன் அதின் வடிவமைப்பை முற்றிலும் மாற்றிப் போட்டார். ஆகவே அது இப்பொழுது சர்ப்பம் என்று அழைக்கப்படாமல் **பாம்பு (Snake)** என்று அழைக்கப்படுகிறது. அது பாவம் செய்வதற்கு முன்பு அது சர்ப்பமாயிருந்தது. அது பாவம் செய்த பின்பு தேவன் அதைப் பாம்பாக மாற்றினார்.

தேவன் தமது சிருஷ்டிப்பைப் படிப்படியாக உயர்ந்த சிருஷ்டிப்பாக உண்டாக்கும்போது, **மனிதனை** எல்லாவற்றிலும் உயர்ந்த சிருஷ்டிப்பாக உண்டாக்கினார். அவனைத் தேவசாயலாக உண்டாக்கினார். அவனுக்கு மாத்திரம் ஆத்துமா கொடுக்கப்பட்டது. பல ஆண்டுகளுக்கு முன்பு டாக்டர்கள் மனிதனுடைய இருதயத்தை ஆராய்ச்சி செய்தபோது, அதின் மத்தியில் புள்ளி போன்ற ஒரு வெற்றிடம் இருந்ததைக் கண்டு பிடித்தனர். ஆனால் அவ்விதமான வெற்றிடம் எந்த மிருகத்தின் இருதயத்திலும் இல்லை என்றும் கூறுகின்றனர். ஆகவே அந்த வெற்றிடம்தான்

ஆத்துமா வாசஞ்செய்யும் இடம் என்று அவர்களே கருத்து தெரிவித்திருக்கிறார்கள். மிருகங்களுக்கு ஆத்துமா என்பது இல்லை. சர்ப்பம் மனிதனைப் போன்ற உருவம் கொண்ட காட்டு ஜீவனாயிருந்தது (ஆதி 3:1). சர்ப்பமானது மிருகங்களில் உயர்ந்த சிருஷ்டியாக இருந்தது. தேவன் அதை சபித்ததினால் அது பாம்பாக மாறினது. ஆகவே **டார்வின் (Darwin)** என்ற விஞ்ஞானியால் மனிதக் குரங்கிற்கும், மனிதனுக்கும் இடையே உள்ள இணைப்பைக் (Missing Link between Man and Chimpanzee) கண்டுபிடிக்க முடியவில்லை. எனவே அந்த விஞ்ஞானி, மனிதன் குரங்கிலிருந்து உருவானான் என்ற தன் சொந்த கருத்தை வெளியிட்டார். மனிதன் குரங்கிலிருந்து வரவில்லை. அது டார்வினின் தவறானக் கூற்று, அதை டார்வினால் நிரூபிக்க முடியவில்லை. தேவன் மனுஷனை மனுஷனாகவே சிருஷ்டித்தார் என்பது தான் வேதப்பூர்வமான உண்மை.

e) **காயீனின் பிறப்பு (The birth of Cain):** ஆகவே, பாவம் இச்சையினால் உலகத்தில் பிரவேசித்தது (2 பேதுரு 1:4). அது முதல் பிள்ளைகள் மாம்சத்தின்படி ஸ்திரீயின் மூலம் பிறந்தார்கள். ஏவாள் சர்ப்பத்திற்குக் காயீனையும், ஆதாமுக்கு ஆபேலையும் இவ்விதமாக இரட்டையர்களைக் (Twins) கர்ப்பந்தரித்தாள். காயீன் பொல்லாங்கனால் உண்டானவன். அவன் சர்ப்பத்தின் வித்து என்று தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது (ஆதி 3:15). ***பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலை செய்த காயீனைப் போலிருக்க வேண்டாம்*** (1 யோவான் 3:12). இந்த வசனங்கள் காயீன் ஆதாமின் குமாரன் அல்ல என்றும் அவனுடைய தகப்பன் "**சாத்தானால் ஆட்கொள்ளப்பட்ட சர்ப்பம்**" என்றும் தெளிவாக விளங்குகிறது. ஏவாள் கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன் (ஆதி 4:1) என்று சொல்லுவது, காயீன் ஏவாளுடைய கர்ப்பத்தில் உருவாகக் கர்த்தர் அனுமதித்தார் என்பதை உணர்த்தும். ***"ஒளியைப் படைத்து, இருளையும் உண்டாக்கினேன். சமாதானத்தைப் படைத்துத் தீங்கையும் உண்டாக்குகிறவர் நானே; கர்த்தராகிய நானே இவைகளையெல்லாம் செய்கிறவர்"*** (ஏசாயா 45:7) என்று கர்த்தர் சொல்லுகிறார். கர்த்தருடைய அனுமதியில்லாமல் ஒருவரும் உலகத்தில் பிறக்க முடியாது. பாவிகள் தேவனுடைய அனுமதிக்கும் சித்தத்தின்படிப் பிறக்கிறார்கள்.

f) **காயீன் ஆதாமின் குமாரன் அல்ல (Cain is not a son of Adam)**:

i) ஆதாம் தேவனுடைய குமாரன் (லூக்கா 3:38). அவன் தேவனின் தன்மைகளை உடையவனாயிருந்தான். காயீன் ஆதாமின் குமாரனாயிருந்தால் அவனுக்கு ஆதாமின் சுபாவங்கள் இருக்கவேண்டும். ஆனால் அதற்கு மாறாக அவன் சாத்தானின் சுபாவங்களையும், மிருகத்தின் தன்மைகளையுங் கொண்ட மனிதனாயிருந்தான். சாத்தான் ஒரு பொய்யன். அவன் ஒரு மனுஷ கொலைபாதகன். அவனிடத்தில் சத்தியம் இல்லை (யோவான் 8:44). இவைகள் அனைத்தும் காயீனிடத்தில் காணப்படுகிறபடியால், அவன் சர்ப்பத்தின் வித்து. சாத்தானின் குமாரன். காயீன் தன் சகோதரனைக் கொன்ற கொலைபாதகன். அவன் ஆபேலைக் கொலை செய்து விட்டு, நான் என் சகோதரனுக்கு காவலாளியோ? (ஆதி 4:9) என்று கர்த்தரிடம் பொய் சொன்னான். மேலும் அவனிடத்தில் சத்தியமில்லை. தேவன் ஒரு பாவியை எப்படி சந்திக்கிறார் என்ற வெளிப்பாட்டை அவன் அறியாதிருந்தான். அவன் சாத்தானைப்போல மனந்திரும்பக் கூடாதவனாயிருந்தான். கர்த்தர் அவனைப் பார்த்து: ***"நீ நன்மை செய்தால் உனக்கு மேன்மை இல்லையோ?"*** (ஆதி 4:7) என்று சொன்ன போதும், அவனுக்கு நன்மை செய்ய அல்லது மனந்திரும்பி தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய மனமில்லை.

ii) காயீனின் வம்ச வரலாறு ஆதியாகமம் நான்காம் அதிகாரத்திலும், ஆதாமின் வம்ச வரலாறு ஆதியாகமம் ஐந்தாம் அதிகாரத்திலும் எழுதப்பட்டிருக்கிறது. அங்கே ஆதாம் காயீனைப் பெற்றான் என்று எழுதவே இல்லை. ***ஆதாம் நூற்று முப்பது வயதானபோது, தன் சாயலாகத் தன் ரூபத்தின்படியே ஒரு குமாரனைப் பெற்று, அவனுக்குச் சேத் என்று பேரிட்டான்*** (ஆதி 5:3) என்று தான் எழுதியிருக்கிறது. ஆகவே, காயீன் ஆதாமின் குமாரன் அல்ல என்று நிரூபிக்கப்படுகிறது.

iii) மேலும் கிறிஸ்து காயீனின் சந்ததியில் வரவில்லை. அவர் ஆதாமின் குமாரனாகிய சேத்தின் சந்ததியில் வந்தார். ***ஏனோஸ் சேத்தின் குமாரன். சேத் ஆதாமின் குமாரன்; ஆதாம் தேவனால் உண்டா னவன்*** (லூக்கா 3:38). காயீன் ஆதாமின் குமாரனாயிராதபடியால், அவன் சந்ததியில் கிறிஸ்து பிறக்க முடியவில்லை.

iv) அடுத்தப்படியாக ஆதியாகமம் நான்காம் அதிகாரத்தில், காயீனின் சந்ததியில் தோன்றினவர்கள் கொலைக்காரர்களும், பல மனைவிகளை (Polygamy) உடையவர்களாயும் இருப்பதைக் காண்கிறோம் (ஆதி 4:23). அவர்கள் தேவனுடைய குமாரனாகிய ஆதாமின் குமாரர்களாயிராதபடியால், அவர்களிடத்தில் தேவனின் சுபாவங்கள் இல்லை. மாறாக அவர்கள் தங்கள் தகப்பனாகிய சாத்தானின் சுபாவங்களைத்தான் வெளிப்படுத்துகிறார்கள். சாத்தான் அறிவின் விருட்சமாயிருக்கிறபடியால், காயீன் சந்ததியார் கட்டிடக் கலையிலும், மற்றும் உலோகங்களைக் கொண்டு கருவிகளை உருவாக்குவதிலும், சிறந்தவர்களாய்த் திகழ்ந்தார்கள் (ஆதி 4:17,21). ஆதாமின் குமாரர்களோ, தங்கள் தகப்பனாகிய ஆதாமைப்போல ஆடுகளை மேய்ப்பவர்களாக இருந்தனர்.

v) கடைசியாக, **ஏவாள்** தான் ஜீவனுள்ள எல்லாருக்கும் தாய் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ***ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டான்; ஏனெனில், அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்*** (Mother of All Living) (ஆதி 3:20). ஆதாம் ஜீவனுள்ள எல்லாருக்கும் தகப்பன் என்று சொல்லப்படவில்லை. காயீன் ஆபேலைக் கொன்று போட்ட பின்பு, உலகில் இரண்டு சந்ததிகள் இருந்தது. ஒன்று காயீனின் சந்ததி. இதை ஆதியாகமம் நான்காம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். இவர்கள் மனுஷகுமாரர்கள், மனுஷகுமாரத்திகள் என்று அழைக்கப்பட்டனர். மற்றொன்று சேத் சந்ததி. அது ஆதியாகமம் ஐந்தாம் அதிகாரத்தில் எழுதியிருக்கிறது. ஏவாள் இந்த இரண்டு சந்ததிக்கும் தாயாயிருக்கிறாள். ஆனால் ஆதாம் காயீன் சந்ததிக்குத் தகப்பன் அல்ல. ஆதாம், **சேத்** சந்ததிக்கு மாத்திரம் தகப்பனாயிருக்கிறான். அந்த சந்ததிதான் ஆதாமின் சந்ததி என்று அழைக்கப்படுகிறது (ஆதி 5:1,3). இந்தச் சந்ததியில்தான் **ஏனோக்கு** ஏழாவதாகவும், **நோவா** பத்தாவது தலைமுறையாகவும் வருவதைக் காணலாம் (ஆதி 5:18,29). இவர்கள் தேவகுமாரர்கள், தேவகுமாரத்திகள் என்று அழைக்கப்பட்டனர். ஆகவே தேவனுடைய வார்த்தையானது, காயீன் சர்ப்பத்தின் வித்து (ஆதி 3:15), அவன் பொல்லாங்கனால் உண்டானவன் (1 யோவான் 3:12) என்று சாட்சியிடுகிறது. ***பொல்லாங்கனால் உண்டாயிருந்து தன் சகோதரனைக் கொலைசெய்த காயீனைப் போலிருக்க வேண்டாம்*** (1 யோவான் 3:12).

### g) ஜலப்பிரளயம் ஏன் வந்தது? (Why did the Flood come)?

ஆதியாகமம் ஆறாம் அதிகாரத்தில் இந்த இரண்டு சந்ததிகளும் கலப்படமானது. ஆகவே தேவன் தனக்கென்று ஒரு பரிசுத்த சந்ததி இல்லாதபடியால், பரிசுத்த வித்து காயீன் சந்ததியோடு கலப்படமானபடியால், இந்த உலகத்தை ஜலப்பிரளயத்தால் அழித்துப் போட்டார். ***தேவகுமாரர் மனுஷகுமாரத்திகளை அதிக சௌந்தரியமுள்ளவர்களென்று கண்டு,***

***அவர்களுக்குள்ளே தங்களுக்குப் பெண்களைத் தெரிந்து கொண்டார்கள். அப்பொழுது கர்த்தர்; "என் ஆவி என்றென்றைக்கும் மனுஷனோடே போராடுவதில்லை; அவன் மாம்சந்தானே, அவன் இருக்கப் போகிற நாட்கள் நூற்றிருபது வருஷம் என்றார்"*** (ஆதி 6:2,3).

ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தபோது ஏதேன் தோட்டத்தைவிட்டுத் துரத்தப்பட்டார்கள் (ஆதி 3:23) பாவத்தினால் அவர்கள் தேவனை விட்டு பிரிக்கப்பட்டார்கள். ***பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்*** (ரோமர் 6:23). மரணம் என்றால் தேவனை விட்டு நித்திய காலமாகப் பிரிக்கப்படுவது (Death means eternal separation from God). ஆதாம் கிருபையிலிருந்து பாவத்தில் விழுந்துபோனான். நித்திய ஜீவனிலிருந்து மரணத்தில் விழுந்துபோனான். ஆதாம் விழுந்துபோனபோது அவன் சந்ததியாகிய மனுக்குலத்திற்கும், அவன் ஆதிக்கத்தின் கீழ் இருந்த சகல ஜீவராசிகளுக்கும் மரணம் வந்தது. அன்று முதல் மனிதன் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து ஜீவிப்பதற்குப் பதிலாக, அதற்கு விரோதமான அறிவைக் கொண்டு ஜீவிக்க ஆரம்பித்தான் (Faith Verses Knowledge).

நமது முதல் பிறப்பு ஸ்திரீயின் மூலம் உண்டானது. ஸ்திரீயின் மூலமாக பிள்ளைகள் பிறக்கும்போது அவர்கள் வாழ்நாள் குறுகினவர்களும், சஞ்சலம் நிறைந்தவருமாயிருக்கிறார்கள் (யோபு 14:1). இந்தப் பிறப்பு மரணத்தில் முடிவடையும். ஆகவே நாம் நித்திய ஜீவனைப் பெற கிறிஸ்துவினால் மறுபடியும் பிறக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது.

## VI. இயேசுகிறிஸ்து ஒருவர் மட்டுமே மறுபிறப்பை அருள முடியும்

### (Only Jesus Christ can give New Birth)

தேவன் நித்திய ஆவியாயிருக்கிறார் ( Eternal Spirit). அவருக்குத் துவக்கமுமில்லை, முடிவுமில்லை. அவர் சர்வவல்லமையுள்ளவர். ஆதி முதல் அந்தம் வரை எல்லாமறிந்தவர். எல்லையற்றவர். ***தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை*** (யோவான் 1:18). அவர் ஆவியின் ரூபத்தில் இருக்கிறபடியால் (யோவான் 4:24) காணக்கூடாதவராயிருக்கிறார் (Invisible God). பின்பு தேவனிடத்திலிருந்து வார்த்தை (Logos) வெளிப்பட்டது. அதுதான் காணக்கூடாத தேவனின் ஆவிக்குரிய சரீரம் (Theophany Body). அந்த வார்த்தையினால் (ஆவிக்குரிய சரீரத்தினால்) தான் வானமும், பூமியும் அதிலுள்ள யாவும் சிருஷ்டிக்கப்பட்டது. அந்த வார்த்தை பழைய ஏற்பாட்டில் **அக்கினிஸ்தம்பம், மேகஸ்தம்பம், கன்மலை, கர்த்தருடைய தூதனானவர்** என்றும் அழைக்கப்படுகிறது. அவர் தோன்றவும், மறையவும் கூடியவராயிருந்தார் (Appear And Disappear). இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு, வார்த்தையாயிருந்த தேவன், தனக்கென்று மரியாளின் கர்ப்பத்தில் ஒரு சரீரத்தைச் சிருஷ்டித்தார். அந்த வார்த்தை மாம்சமானது. ***ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம்பண்ணினார்*** (யோவான் 1:1,14). ஆகவே தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். ***அன்றியும், தேவபக்திக்குரிய இரகசியமானது யாவரும் ஒப்புக்கொள்ளுகிறபடியே மகாமேன்மையுள்ளது. தேவன் மாம்சத்திலே வெளிப்பட்டார்*** (1 தீமோ 3:16). அவர்தான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து.

ஸ்திரீயின் மூலமாக பாவம் உலகத்தில் பிரவேசித்தபடியால், ஸ்திரீ மூலமாகவே இரட்சிப்பு வரும். ஸ்திரீயின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்கும் என்று தேவன் வாக்குரைத்திருந்தார் (ஆதி 3:15). இயேசுகிறிஸ்துவே அந்த ஸ்திரீயின் வித்து. ஸ்திரீக்கு வித்து கிடையாது, அவளுக்கு ஒரு வித்து

கொடுக்கப்பட்டது. அதுதான் மரியாளின் கர்ப்பத்தில் ஆண்டவர் சிருஷ்டித்த ஜீவஅணு (Blood Cell). ***ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள். இம்மானுவேல் என்பதற்குத் தேவன் நம்மோடிருக்கிறார் என்று அர்த்தமாம்*** (ஏசா 7:14; மத் 1:23). இந்த வேதவாக்கியங்கள் இயேசுகிறிஸ்துவின் பிறப்பின்போது நிறைவேறினது. கிறிஸ்துவின் பிறப்பு, பரிசுத்தமான கன்னிப் பிறப்பு. அது மாம்சத்தினால் வந்ததல்ல. அது வார்த்தையினால் வந்தது. மரியாள் தேவனுடைய வார்த்தையை விசுவாசித்தபோது, தேவன் அவள் கர்ப்பத்தில் தனக்கென்று ஒரு சரீரத்தைச் சிருஷ்டித்தார். அதாவது அவர் ஜீவ அணுவையும், கருமுட்டையையும் சிருஷ்டித்தார். (He created both the Sperm and the Egg). தேவன் தமது ஜீவனைச் சுற்றிலும் ஒரு சரீரத்தைச் சிருஷ்டித்தார். ஆகவே மரியாள் நித்திய ஆவியாயிருக்கிற தேவனுக்கு தாயல்ல (Mary is not the mother of Eternal Spirit). அவள் தேவனின் ஜீவனைச் சுமக்கிற ஒரு பாத்திரமாக மாத்திரம் இருந்தாள் என்பது தெளிவான உண்மை.

அவர் பிறந்த போது தேவனுடைய குமாரன் என்று அழைக்கப்பட்டார். அவர் தேவனுடைய தன்மையின் சொரூபமாயிருந்தார் (எபி 1:3). ***தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரப்பிரகாரமாக அவருக்குள் வாசமாயிருந்தது*** (கொலோ 2:9). **பிதா, குமாரன், பரிசுத்தஆவி, சிருஷ்டிகர், இரட்சகர், மீட்பர், விடுவிக்கிறவர், சுகமளிப்பவர், பரிசுத்தர், நீதியுள்ளவர், ஆசாரியர், தீர்க்கதரிசி, மேய்ப்பர், மத்தியஸ்தர், எஜமான், நியாயாதிபதி** போன்ற எல்லா தேவனுடைய தன்மைகளும் (Attributes of God) **அன்பு, பொறுமை, தாழ்மை, சமாதானம், சாந்தம், விசுவாசம், தயவு, இரக்கம், கிருபை** போன்ற எல்லா தெய்வீக சுபாவங்களும் (Divine Nature) அவருக்குள் பரிபூரணமாக வாசமாயிருந்தது. காணக் கூடாத தேவன் இயேசுவில் காணக்கூடிய தேவனாக மாறினார். அவர் உலகத்தில் மனுஷனாக முப்பத்து மூன்றரை வருஷக் காலம், எவ்வளவேனும் பாவம் செய்யாத பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்து காண்பித்தார். மேலே குறிப்பிட்ட தேவனுடைய எல்லா தன்மைகளையும், சுபாவங்களையும் வெளிப்படுத்தினார். தம்மைத் தேவனாக நிரூபித்துக் காண்பித்தார். ***இவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார்*** (1 யோவான் 5:20). (படம் 2 பார்க்கவும்).

***பூர்வ காலங்களில் பங்கு பங்காகவும் வகை வகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார்; இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்*** (எபி 1:1,2) என்று பரிசுத்த பவுல் சொல்லுகிறார். இந்த வசனத்தில் பூர்வகாலம் என்ற வார்த்தை பழைய ஏற்பாட்டு காலத்தைக் குறிக்கும். பங்கு பங்காகவும் வகை வகையாகவும் என்பதற்குக் கொஞ்சம் கொஞ்சமாகவும், பல வகைகளிலும் என்று அர்த்தம். பிதாக்கள் என்ற வார்த்தை பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களைக் குறிக்கும். திருவுளம் பற்றினார் என்றால் வெளிப்படுத்தினார் என்று பொருள். இந்தக் கடைசி காலம் என்று சொல்லும்போது இயேசுகிறிஸ்து வாழ்ந்த காலம். அது பழைய ஏற்பாட்டிற்குக் கடைசி காலமாயிருந்தது. ஆகவே இந்த இரண்டு வசனங்களின் பொருள் என்னவென்றால், பழைய ஏற்பாட்டின் காலத்தில் தேவன் தீர்க்கதரிசிகளின் வாழ்க்கையிலும், வார்த்தையிலும் தமது தன்மைகளையும், சுபாவங்களையும் கொஞ்சம், கொஞ்சமாகவும், பல வழிகளிலும் வெளிப்படுத்தி, பின்பு பழைய ஏற்பாட்டின் முடிவில் குமாரன் மூலமாகத் தம்மைப் பரிபூரணமாக வெளிப்படுத்தினார். குமாரன் என்பது தேவன் தமக்கென்று சிருஷ்டித்த சரீரத்தைக் குறிக்கும். அடுத்த வசனத்தில் ***இவர் அவருடைய மகிமையின் பிரகாசமும், அவருடைய தன்மையின் சொரூபமுமாயிருந்து*** (எபி 1:3) என்று எழுதியிருப்பதால் இயேசு தேவனின் சரீரமாயிருக்கிறார் என்று

அறிகிறோம். ஆகவே இயேசு என்ற சரீரத்தில் தேவன் தம்மைப் பரிபூரணமாக வெளிப்படுத்தினார் என்று காண்கிறோம்.




**ஆபிரகாம் மூலமாக (Through Abraham) :** உதாரணமாக, தேவன் பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தீர்க்கதரிசியாகிய ஆபிரகாமின் வாழ்க்கையில், **விசுவாசம்** என்றால் என்ன என்பதை வெளிப்படுத்துகிறார். அவனுக்கு நூறு வயதும், சாராளுக்குத் தொன்னூறு வயதானாலும் தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறார். தேவனால் பொய் சொல்ல முடியாது (God can't lie). தேவன் மரித்தோரிலிருந்து ஈசாக்கை உயிரோடு எழுப்ப வல்லவராயிருக்கிறாரென்று விசுவாசித்தான். ஏனென்றால் தேவன் "உன் சந்ததியை வானத்தின் நட்சத்திரங்களைப்போல பெருகப்பண்ணுவேன்" என்று வாக்குரைத்திருக்கிறார். அவருடைய வார்த்தை நிச்சயமாக நிறைவேறும்


என்று விசுவாசித்தான். அது மாத்திரமல்ல, அவன் விசுவாசத்தினால் ஈசாக்கைப் பலியாக ஒப்புக் கொடுக்கும்போது, கர்த்தருடைய தூதனானவர் பிள்ளையாண்டான் மேல் கையைப் போடாதே என்று சொல்லி தடை பண்ணினார். அவன் தன் கண்களை ஏறெடுத்துப் பார்க்கும்போது, அந்த மலையிலே ஒரு ஆட்டுக்கடாவைக் கண்டான். அந்த மலையின் உச்சியில், ஒரு ஆட்டுக்கடா வாழ்வதற்கு எந்தச் சாத்தியக் கூறும் இல்லை. அப்படியானால் அந்த ஆடு எப்படி வந்தது? தேவன் அவனுக்காக அந்த ஆட்டைச் சிருஷ்டித்திருந்தார் என்பது தான் உண்மை. அதை ஈசாக்குக்குப் பதிலாக பலி செலுத்தினான் (ஆதி 22:12,13). இந்தக் காட்சி, தேவன் தமக்கென்று ஒரு சரீரத்தை சிருஷ்டித்துக் கொண்டு உலகில் வெளிப்படுவார் என்றும், அவர் நமக்காக பலியிடப்படுவார் என்ற சத்தியத்தையும் வெளிப்படுத்துகிறது. அது கிறிஸ்துவில் நிறைவேறுகிறது.

**யோசேப்பு மூலமாக (Through Joseph):** மேலும் யோசேப்பு என்ற தீர்க்கதரிசி வாழ்க்கையிலும், தேவன் தமது தன்மையை வெளிப்படுத்துகிறார். யோசேப்பு ஆவிக்குரியவனாயிருந்தான். அவனுடைய வருங்காலத்தை சொப்பனத்தின் மூலம் தேவன் அவனுக்கு வெளிப்படுத்தினார். அவனுடைய சகோதரர்கள் அவன் மேல் பொறாமை கொண்டனர். அவனை இருபது வெள்ளிக் காசுக்கு விற்றுப்போட்டனர். அவன் எகிப்தில் அடிமையாக இருந்தான். கர்த்தர் அவனோடுகூட இருந்தார். அவன் அநியாயமாகக் குற்றஞ்சாட்டப்பட்டு, சிறைச்சாலையில் அடைக்கப்பட்டான். அவன் தேவனுடைய ஆவியால் பார்வோனின் சொப்பனங்களுக்கு அர்த்தம் உரைத்தபடியால் எகிப்தின் அதிபதியாக உயர்த்தப்பட்டான். அப்பொழுது பஞ்சக் காலத்தில் அவனுடைய சகோதரர்கள் தானியம் வாங்க எகிப்துக்கு வந்து, அவனைத் தங்கள் சகோதரன் என்று அறியாமல் அவனை வணங்கினார்கள். யோசேப்பின் சொப்பனம் நிறைவேறினது. பின்பு யோசேப்பு தன்னை அவர்களுக்கு வெளிப்படுத்தினான். இவனுடைய வாழ்க்கையானது ஒரு தீர்க்கதரிசனமாயும் (Prophecy) இருக்கிறது. தேவன் மாம்சத்தில் வெளிப்படும்போது அவருடைய வாழ்க்கையில் என்ன சம்பவிக்கும் என்பதின் முன்னடையாளமாயிருக்கிறது. யோசேப்பு இயேசுகிறிஸ்துவுக்கு ஒரு பரிபூரண அடையாளமாயிருக்கிறான் (Joseph was a perfect type of Jesus Christ).

இயேசுகிறிஸ்து உலகத்தில் வாழ்ந்தபோது பிதாவுக்குப் பிரியமானதைச் செய்தார். அவர் அற்புதங்களையும் அடையாளங்களையும் உடையவராயிருந்தார். பொறாமையினால் வேதபாரகரும், பரிசேயரும், பிரதான ஆசாரியர்களும் அவரைப் பகைத்தனர். யூதாஸ் முப்பது வெள்ளிக்காசுக்காக இயேசுவை அவர்களிடத்தில் காட்டிக் கொடுத்தான். அவர்கள் அவரைச் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்தினார்கள். ஆனாலும் அவர் மரணத்தையும் பாதாளத்தையும், கல்லறையையும் ஜெயித்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். ஐம்பதாம் நாளில் பரிசுத்தஆவியாக வந்து சபையைப் போஷித்து வழி நடத்துகிறார். உபத்திரவக்காலத்தில் இரண்டு சாட்சிகளின் செய்தியின் மூலமாக ஒரு லட்சத்து நாற்பத்து நாலாயிரம் (1,44,000) யூதர்களுக்குத் தம்மை வெளிப்படுத்துவார். ஆகவே யோசேப்பின் வாழ்க்கையானது ஒரு தீர்க்கதரிசனமாயிருக்கிறது. அது இயேசுகிறிஸ்துவில் நிறைவேறுகிறது. இவ்விதமாக எல்லா தீர்க்கதரிசிகளும், தேவனை ஒரு பகுதி (Portion) வெளிப்படுத்தினார்கள். ஆனால் இயேசுகிறிஸ்து ஒருவரே தேவனைப் பரிபூரணமாக அல்லது முழுவதுமாக (Fully) வெளிப்படுத்தினார். ஆகவே அவரே மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார் (1 யோவான் 5:20).

இயேசுகிறிஸ்து தேவனைப் பரிபூரணமாக வெளிப்படுத்தினது மாத்திரமல்ல, அவர் நம்முடைய பாவங்களுக்காக ஒரு சுத்திகரிப்பை ஏற்படுத்தினார். ***தம்மாலே தாமே நம்முடைய பாவங்களை நீக்கும் சுத்திகரிப்பை உண்டுபண்ணி*** (எபி 1:3) என்று எழுதியிருக்கிறது. இயேசுகிறிஸ்துவினுடைய இரத்தம்,

தேவனுடைய சுய இரத்தம் (God’s Own Blood) (அப் 20:28). அவருடைய இரத்தத்தில் தேவனுடைய ஜீவன் இருக்கிறது. அந்த இரத்தம் கல்வாரிச் சிலுவையில், நமது பாவத்திற்கு மீட்பின் கிரயமாகச் சிந்தப்பட்டது. ***“குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே”*** (1 பேதுரு 1:19). ஏதேனில் ஏற்பட்ட மூல பாவம் (Original Sin) ஒரு மரத்தின் கனியைப் புசித்ததினால் அல்ல. அது இரத்த சம்பந்தமானது என்று கண்டோம். ***மாம்சத்தின் உயிர் அதின் இரத்தத்தில் இருக்கிறது*** (லேவி 17:11). ஜீவனுக்கு ஜீவன் கொடுக்கப்பட வேண்டும் (யாத் 21:23). இதுவே நியாயப்பிரமாணத்தின் நீதி. அந்த நீதியை இயேசு சிலுவையில் சிந்தின இரத்தத்தினால் நமக்கு சம்பாதித்தார் (2 கொரி 5:21). மிருகங்களுக்கு ஆத்துமா இல்லாதபடியால், பழைய ஏற்பாட்டில் அவைகளைப் பலியாகச் செலுத்தும்போது, அவைகளின் இரத்தத்தில் இருந்த ஜீவனானது விசுவாசிக்கிறவனுக்குள் வரமுடியாது. கிறிஸ்து மாம்சத்தில் வெளிப்பட்டு, பலியாக இரத்தம் சிந்தப்படும் வரைக்கும் ஒரு **பதிலீடாக (Substitute)** அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. ஆனால் கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தம் சிந்தப்பட்டபோது, அந்த இரத்தத்திலுள்ள ஜீவன், விசுவாசிக்கிறவனுக்குள் வந்து அவனுக்குப் புதுப்பிறப்பைக் கொடுக்கும்.



படம் 3

***நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார் ; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்*** (ஏசாயா 53:5). இயேசு நம்முடைய பாவங்களுக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு, மரணத்தையும், பாதாளத்தையும், பிசாசையும் ஜெயித்து மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். ஆகவே, இயேசு ஒருவர் மாத்திரமே நம்முடைய பாவங்களை மன்னிக்க முடியும். எந்த மனுஷனுக்கும் பாவத்தை மன்னிப்பதற்கு அதிகாரமில்லை. ***நாம் நம்முடைய பாவங்களை இயேசுவினிடத்தில் அறிக்கையிட்டால் அவர் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும்***

***நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார்*** (1 யோவான் 1:9). (படம் 3 பார்க்கவும்)

மனிதன் பாவம் செய்தபோது அவன் தேவனிடத்திலிருந்து பிரிக்கப்பட்டான். அவனுக்கும் தேவனுக்கும் இடையே அகன்ற **ஆழமான பிளவு** (Chasm) உண்டானது. அவன் பிளவைக் கடந்து மரணத்தின் பாகத்தில் (on the side of death) நின்றான். அவன் பழைய நிலைக்கு வர அவனுக்கு வேறு வழியே இல்லை. பாவத்தில் விழுந்து, பிளவைக் கடக்கும் முன்பு மனிதன் தேவ புத்திரனாயிருந்தான் (Son of God). அவன் தேவனுடைய சந்ததியாயிருந்தான் (Offspring of God). பூமியெல்லாம் அவனுக்குச் சொந்தமாயிருந்தது. இயற்கையை அவனால் அடக்க முடிந்தது. அவன் வாயினால் பேசி சிருஷ்டித்தான். அவன் ஒரு சிருஷ்டிகனாயிருந்தான். அவன் தேவனுடைய சந்ததியாயிருந்தான்.

ஆனால் அவன் பிளவைக் கடந்த மாத்திரத்தில் அவன் **புத்திரத்துவத்தை** ( Sonship) இழந்தான். அவன் தன் சுபாவத்தில் பாவியாக ஆனான். சாத்தானின் கைகளுக்கும், ஆளுகைக்கும் அவன் உட்பட்டான். தேவன் பலியின் மூலம் சிந்தப்பட்ட இரத்தத்தின் இரசாயனத்தை (Chemical of the Blood) ஏற்றுக்கொண்டார். ஆனால் காளை, வெள்ளாட்டுக் கடா இவைகளின் இரத்தம் பாவத்தைப் போக்கவில்லை (எபி 10:4). அது பாவத்தை மூடியது. பாருங்கள் என் கையில் ஒரு சிவப்பு புள்ளி இருந்து, அதை ஒரு வெள்ளையால் மூடினால் அந்த சிவப்புப் புள்ளி இன்னும் அங்கேயே தான் இருக்கிறது. ஆனால் தேவன் பாவத்தைப் போக்க, வானத்திலிருந்து **வெண்மையாக்கும் திரவத்தை** (Liquid Bleach) அனுப்பினார். அதுதான் தேவனுடைய குமாரனாகிய **இயேசுகிறிஸ்துவின் இரத்தம்.** நாம் பாவங்களை அறிக்கையிடும்போது, பாவம் தேவனுடைய வெண்மையாக்கும் திரவத்தில் விழுவதால், அது முற்றிலுமாக மறைந்து விடுகிறது. அதை மறுபடியும் காணமுடியாது. அவனுக்கு எதிரான பாவத்தின் நினைவு கூறுதல் (No more remembrance of Sin against him) என்பதே இல்லாமல் போய்விடுகிறது. அவன் இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாக அந்தப் பெரும் பிளப்பை கடந்து செல்லுகிறான். அவன் இப்பொழுது, பிளவின் மறுகரையில் நிற்கும் பிதாவுடன் மறுபடியும் முழுமையான ஐக்கியம் கொள்ளுகிறான். அவன், பாவத்தின் கறை என்பதை இனிமேல் எங்கேயும் காண முடியாது. அவன் இப்பொழுது சுயாதீனன் (Free). அல்லேலூயா! அந்த கறுப்பு மையானது வெண்மையாக்கும் திரவத்தினால் உடைக்கப்பட்டதால், மறுபடியும் எப்படி கறுமையாக்க முடியாதோ, அப்படியே அறிக்கையிடப்பட்ட ஒரு மனிதனின் பாவமோ அல்லது ஒரு ஸ்திரீயின் பாவமோ இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தில் முழுக்கப்படும்போது அது பாவத்தின் அறிகுறிகள் யாவற்றையும் கொன்று விடுகிறது. அப்பொழுது அந்தப் பிளவு அடைக்கப்பட்டு அவனுடைய பாவம் மறுபடியும் நினைக்கப்படுவதே இல்லை. அதன் பின்பு மனிதன் நீதிமானாக்கப்பட்டவனாக (Justified) தேவபுத்திரனாக ஏற்றுக் கொள்ளப்படுகிறான். பாவம் இயேசுவின் இரத்தத்தில் மூழ்கி, அதின் மூலக்கூறுகள் (molecules) அனைத்தும் சாத்தானை அடைந்து, நியாயத்தீர்ப்பின் நாள் வரைக்கும் அவன் மேல் தங்கியிருக்கும். அந்த நாளில் சாத்தான் அக்கினிக் கடலில் தள்ளப்படுவான்.

**மோசே** தவளைகள் உண்டாகக்கடவது, வண்டுகள் உண்டாகக் கடவது என்று உரைத்தபோது தவளைகளும், வண்டுகளும் உண்டானது. மோசே வார்த்தையை உரைக்கும் முன்பு அது தேவனுடைய சிந்தையாயிருந்தது. அது பேசப்பட்டபோது வார்த்தையாக வெளிப்பட்டது. அப்படியானால் மோசே பேசினது தேவனுடைய வார்த்தையாகும். அது காளை வெள்ளாட்டுக்கடாவின் இரத்தத்தின் கீழிருந்த, ஒரு எளிமையான மனித உதடுகளின் மூலம் வெளி வந்தது.

"பாவத்தைப் போக்காமல் அதை மூடின காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளின் இரத்தம் ஒரு மனிதனை, தேவனுடைய சிருஷ்டிப்பின் வார்த்தையைப் பேசி வண்டுகளைச் சிருஷ்டிக்கும் நிலையில் வைக்குமானால், பாவத்தை முற்றிலும் போக்கும் **இயேசுகிறிஸ்துவின் இரத்தம்** ஒரு மனிதன் தேவனுடைய வார்த்தையைப் பேசும்போது எவ்வளவு அதிகமாக சிருஷ்டிப்பின் கிரியைகளைக் கொண்டு வரும்". எனவே இயேசுகிறிஸ்து மாற்கு 11:23ல் இவ்விதமாக சொல்லியிருக்கிறார். ***"எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து, நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்"*** (மாற்கு 11:23).

**ஆபிரகாம் லிங்கனுக்காக உணர்ச்சிவசப்படுதல்**: சகோதரன் பிரன்ஹாம் அவர்கள் ஒரு நாளில் அமெரிக்காவில் உள்ள ஒரு அருங்காட்சியகத்தில் (Museum) நின்று கொண்டிருந்தார். அப்பொழுது நரைத்த தலையை உடைய வயதான நீக்ரோ இனத்தைச் சேர்ந்த ஒரு மனிதர், கண்ணாடி பெட்டியில் அடைத்து வைத்திருந்த ஒரு பொருளைப் பார்த்து கண்ணீர் வடித்துக் கொண்டு, குதித்துக் கொண்டும், கண்களை மூடிக் கொண்டு உணர்ச்சி வசப்பட்டு ஜெபித்துக் கொண்டிருந்தார். சகோதரன் பிரன்ஹாம் அந்த மனிதரிடத்தில் சென்று அவரைப் பார்த்து: நான் ஒரு ஊழியக்காரன் நீங்கள் எதைப் பார்த்து உணர்ச்சி வசப்பட்டு ஜெபிக்கிறீர்கள்? என்றார். அதற்கு அந்த மனிதர்: இங்கே வாருங்கள்; அந்த கண்ணாடி பெட்டியைப் பாருங்கள் என்றார். அதற்கு சகோதரன் பிரதியுத்திரமாக: அதில் ஒரு சட்டையைத் (Dress) தவிர வேறொன்றையும் நான் காணவில்லை என்றார். அப்பொழுது அந்த மனிதர்: அந்த துணியில் இரத்தக் கறையைக் காண்கிறீர்களா? அதுதான் ஆபிரகாம் லிங்கனின் இரத்தம். மேலும் அவர் தன் இடுப்பைக் காண்பித்து அதில் இருந்த தழும்பைக் காண்பித்தார். நான் அடிமையாயிருந்தபோது என்னை இழுத்துச் செல்லுவதற்காக என் இடுப்பில் கட்டின பெல்டினால் (Belt) இந்தத் தழும்பு உண்டானது. ஆபிரகாம் லிங்கனின் அந்த இரத்தம் தான் என்னுடைய அடிமைத்தன பெல்டிலிருந்து (Slave Belt) விடுதலைக் கொடுத்தது. ஆகவே நான் அந்த இரத்தத்தைப் பார்த்து உணர்ச்சிவசப்படுகிறேன் என்றார்.

உடனே சகோதரன் பிரன்ஹாம் தன் கரங்களை உயர்த்திச் சொன்னது: கர்த்தாவே, நான் எவ்விதமாக உமக்கு நன்றி செலுத்துவேன். ஒரு நீக்ரோ இனத்தைச் சேர்ந்த ஒருவன் ஆபிரகாம் லிங்கனின் இரத்தக் கறையைப் பார்த்து, அந்த இரத்தம்தான் என் அடிமைத் தனத்தின் பெல்டிலிருந்து விடுதலையாக்கினது என்று நன்றியால் உணர்ச்சி வசப்பட்டால், ஒரு கிறிஸ்தவன் இயேசுகிறிஸ்துவின் இரத்தம் தன் பாவக்கறைகளை நீக்கி, தன்னைப் பாவம் மரணம் என்பவைகளின் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கினதை நினைத்து எவ்வளவு அதிகமாய் ஆனந்த சந்தோஷமடைய முடியும்" என்றார்.

தேவன் இயேசுகிறிஸ்துவின் சிவப்பான இரத்தத்தின் மூலமாக, நம்முடைய சிவப்பான பாவங்களைப் பார்க்கும்போது அது உறைந்த மழையைப்போல வெண்மையாகத் தோன்றுகிறது (Looking red through red is White). ***உங்கள் பாவங்கள் சிவேரென்றிருந்தாலும் உறைந்த மழையைப் போல் வெண்மையாகும். அவைகள் இரத்தாம்பரச்சிவப்பாயிருந்தாலும் பஞ்சைப்போலாகும்*** (ஏசாயா 1:18) என்று தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது. கர்த்தர் இரத்தத்தைப் பார்க்கவில்லை. இரத்தத்திலுள்ள **ஜீவனைப்** பார்க்கிறார். அது அவருடைய **வெளிப்படுத்தப்பட்ட வார்த்தையில்** இருக்கிறது (God is not looking for the blood but the life of the blood. It is in His Revealed Word).

கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து, நாற்பது நாளளவும் அநேகருக்குக் காணப்பட்டு, பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். ஐம்பதாம் நாளில் மேலறையில் காத்திருந்த அவருடைய சீஷர்களுக்குள் பரிசுத்தஆவியாக வந்து இறங்கினார். அவர்களோடு மாம்சத்தில் இருந்த தேவன், இப்பொழுது அவர்களுடைய மாம்சத்திற்குள் வந்தார். ***கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்*** (கொலோ 1:27). அவர்கள் கிறிஸ்துவின் ஜீவனை உடையவர்களாயிருந்தார்கள். அதுவே பரிசுத்தஆவியின் அபிஷேகம். அதுவே மறுபிறப்பு. ஆகவே கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மாத்திரமே மறுபிறப்பை அருள முடியும் என்று இப்பொழுது அறிந்து கொண்டோம்.

## VII. இயேசுகிறிஸ்து எப்படி மறுபிறப்பை அருளுகிறார் (How Jesus Christ gives New Birth)?

***அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனைப் பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார். அவர்கள், இரத்தத்தினாலாவது மாம்ச சித்தத்தினாலாவது புருஷனுடைய சித்தத்தினாலாவது பிறவாமல், தேவனாலே பிறந்தவர்கள்*** (யோவான் 1:12, 13). இந்த வசனம் நாம் எப்படி தேவனால் பிறக்க முடியும் என்பதை வெளிப்படுத்துகிறது. இயேசு, நான் என் பிதாவின் நாமத்தில் வந்திருக்கிறேன் (யோவான் 5:43) என்று சொல்லுகிறார். ஆகவே பிதாவினுடைய நாமம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்பதே. ***அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை*** (அப். 4:12). அவருடைய நாமம் என்றால் அது அவருடைய வார்த்தையையும் குறிக்கிறது. ***அவருடைய நாமம் தேவனுடைய வார்த்தை என்பதே*** (வெளி 19:13b). இயேசு வார்த்தையாயிருக்கிறார் (யோவான் 1:1). அவருடைய வார்த்தையை விசுவாசிக்கும்போது இயேசுகிறிஸ்துவை விசுவாசிக்கிறோம். அவருடைய வார்த்தையை ஏற்றுக் கொள்ளும்போது அவரை ஏற்றுக் கொள்ளுகிறோம். அவருடைய வார்த்தையை அவிசுவாசிக்கும்போது இயேசுகிறிஸ்துவைப் புறக்கணிக்கிறோம். அவிசுவாசமே பாவம் (Sin is Unbelief). ஆகவே அவருடைய நாமத்தையும், அவருடைய வார்த்தையையும் விசுவாசித்து, கீழ்ப்படியும்போது நாம் தேவனாலே பிறக்கிறோம் என்று இயேசு சொல்லுகிறார்.

## VIII. ஆதி அப்போஸ்தல காலத்தில் மறுபிறப்பு (New Birth in the early Apostolic Age)

பேதுரு பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்தஆவியினால் நிறைந்து அவர்களை நோக்கி : ***"நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்"*** என்றான் (அப். 2:38). இதுதான் ஆதி அப்போஸ்தல உபதேசம். பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் பெறுவதே மறுபிறப்பு. ஆகவே, ஒருவன் மறுபடியும் பிறக்க வேண்டுமானால் அல்லது பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் பெற வேண்டுமானால், மனந்திரும்பி, யூத மார்க்கத்தை விட்டு அல்லது அஞ்ஞான மார்க்கத்தை விட்டு வெளியே வந்து, **பேதுரு, பவுல்** மூலமாய் கொடுக்கப்பட்ட அப்போஸ்தல சத்தியத்தை விசுவாசித்து, **கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற வேண்டும்.** அப்படிச் செய்தால் தேவன் அந்த நபரைப் பரிசுத்தஆவியினால் நிரப்பக்

கடமைப்பட்டிருக்கிறார். கர்த்தரால் அழைக்கப்பட்டவர்கள் இந்த வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்தஆவியைப் (Promise of Holy Ghost) பெற்றுக் கொள்ளுவார்கள். ***"வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது"*** (அப். 2:39). பரிசுத்த பவுல் எபேசு சபையாரைப் பார்த்து ***"நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்"*** (எபே 1:13) என்று சொல்லுகிறார். ஆதி அப்போஸ்தல சபையின் உபதேசம் தான் மூல உபதேசம் (Original Doctrine). அவர்கள் ஒரே தேவனை விசுவாசித்தார்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்தார்கள். ஸ்தாபனங்களை ஏற்படுத்தவில்லை. பரிசுத்தஆவியினால் நடத்தப்பட்டார்கள். அவர்களுடைய உபதேசத்தை விசுவாசித்துக் கீழ்ப்படிந்தவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றார்கள். அல்லது மறுபடியும் பிறந்தார்கள் என்று சொல்லலாம். அப்போஸ்தல கால உபதேசம், அப்போஸ்தலர்களால் கொடுக்கப்பட்ட பூரணமான உபதேசம். அதை அப்போஸ்தல நடபடிகளிலும், நிருபங்களிலும் வாசிக்கிறோம். பவுல் தான் சொன்ன உபதேசம் தேவனால் வெளிப்படுத்தப்பட்டதென்பதை உறுதியாக அறிந்திருந்தான். ஆகவே அவன் ***"நாங்கள் உங்களுக்குப் பிரசங்கித்த சுவிசேஷத்தையல்லாமல், நாங்களாவது, வானத்திலிருந்து வருகிற ஒரு தூதனாவது, வேறொரு சுவிசேஷத்தை உங்களுக்குப் பிரசங்கித்தால், அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன். முன் சொன்னது போல மறுபடியும் சொல்லுகிறேன்; நீங்கள் ஏற்றுக் கொண்ட சுவிசேஷத்தையல்லாமல் வேறொரு சுவிசேஷத்தை ஒருவன் உங்களுக்குப் பிரசங்கித்தால் அவன் சபிக்கப்பட்டவனாயிருக்கக்கடவன்"*** (கலா 1:8,9) என்று கலாத்திய சபையாருக்குச் சொல்லுகிறதை வாசிக்கிறோம்.

## IX. சபைக்காலங்களில் மறுபிறப்பு (New Birth in the Church Ages)

அப்போஸ்தலர்கள் காலத்திற்குப் பின்பு, சபைகளில் தேவனுடைய வார்த்தைக்குப் பதிலாக மனுஷனுடைய உபதேசங்கள் நுழைய ஆரம்பித்தது. முதலாவது அது நிக்கொலாய் மதஸ்தரின் கிரியையாக ஆரம்பித்து, பிலேயாமின் உபதேசமாக வளர்ந்து, பின்பு யேசபேலின் உபதேசமாக முடிவடைந்தது (வெளி. 2:6,14,20). ஆகவே தேவன் ஒவ்வொரு காலத்திற்கும் ஒரு செய்தியை அனுப்பினார் (God allotted a specific Message for each Age). சபைக்காலங்களுக்குக் கொடுக்கப்பட்ட செய்திகள் குறைவான செய்திகள். அவைகள் இன்னதென்பதை வெளிப்படுத்தல் இரண்டாம், மூன்றாம் அதிகாரங்களில், இயேசுகிறிஸ்து உயிர்த்தெழுந்த பின்பு நேரடியாக யோவானுக்கு பத்மு என்ற தீவிலே சொல்லியிருக்கிறார். ஆகவே அவர் ஏழு சபைக்காலங்களில் பரிந்து பேசுகிற **மத்தியஸ்த ஊழியத்தைச்** (Mediator) செய்தார் (1 யோவான் 2:1 ;1 தீமோத் 2:5). ஏழு சபைக்கால பரிசுத்தவான்களுடைய அறியாமைகளை அவர் தம்முடைய இரத்தத்தின் கீழ்க் கொண்டு வந்து, மன்னித்தார். தேவன் அவர்களுடைய விசுவாசத்தை அங்கீகரித்து, பரிசுத்தஆவியை அருளி மறுபடியும் பிறக்கும் அனுபவத்தைப் பெறும்படி கிருபை செய்தார்.




படம் 4

எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா என்னும் ஆசியாவிலிருந்த ஏழு சபைகளை தேவன் தெரிந்துகொண்டு (வெளி **1:11**) அவைகளின் ஆவிக்குரிய நிலைமைகள், வருங்காலத்திலுள்ள ஏழு சபைக் காலங்களுக்கு அடையாளமாக இருந்தபடியால் அவைகள் ஒவ்வொன்றிற்கும் ஒரு செய்தியை ஒரு தூதன் மூலமாக அனுப்பினார். அவர்கள் பூமிக்குரிய தூதர்கள். ***என் வலது கரத்தில் நீ கண்ட ஏழு நட்சத்திரங்களின் இரகசியத்தையும், ஏழு பொன் குத்துவிளக்குகளின் இரகசியத்தையும் எழுது; அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம்; நீ கண்ட ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்*** (வெளி 1:20). **எபேசு** (53–170), **சிமிர்னா** (170–312), **பெர்கமு** (312–606), **தியத்தீரா** (606–1520), **சர்தை** (1520–1750) **பிலதெல்பியா** (1750–1906), **லவோதிக்கேயா** (1906– )அந்த ஏழு தூதர்கள் முறையே **பவுல், இரேனியஸ், மார்டின், கொலம்பா, லூத்தர், வெஸ்லி, பிரன்ஹாம்.** இவர்கள் வாழ்ந்த காலங்களில், எந்த ஒரு

ஊழியக்காரனும் இந்த தூதர்களைப்போல மிகப்பெரிய ஊழியத்தைச் செய்ததில்லை. இந்த தூதர்கள் தேவனிடத்திலிருந்து நேரடியாக, அவர்கள் சபைக் காலத்துக்குரிய வார்த்தையின் **வெளிப்பாட்டைப்** (Revelation) பெற்றார்கள். அது அந்தந்த சபைக் காலத்திற்கு மறுபிறப்பைக் கொண்டு வந்தது.

படம் 4ஐ பார்க்கவும், இதில் சந்திரன் சபைக்கு அடையாளமாயிருக்கிறது. ஒவ்வொரு சபைக்காலமும் எப்பொழுது தொடங்கி, எப்பொழுது முடிவடைகிறது என்றும் எழுதப்பட்டிருக்கிறது. நட்சத்திரம் ஒவ்வொரு காலத்தின் செய்தியாளருக்கு அடையாளமாயிருக்கிறது. அந்த நட்சத்திரத்தின் வெளிச்சத்தில் நித்திய ஜீவனுக்கென்று நியமிக்கப்பட்டவர்கள் வந்து, அவர்கள் காலத்திற்கு வாக்களிக்கப்பட்டச் செய்தியை விசுவாசிக்கிறார்கள் (They believe the promised Word for their Age). அவர்களே வெள்ளைப் பகுதியைச் சேர்ந்தவர்களாயிருக்கிறார்கள். அவர்களே மறுபடியும் பிறந்த கிறிஸ்தவர்கள். நட்சத்திர வெளிச்சத்தில் வராதவர்கள் இருள் நிறைந்த பகுதியைச் சேர்ந்தவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் தங்கள் காலத்திற்கென்று வாக்களிக்கப்பட்டச் செய்தியைப் புறக்கணிக்கிறவர்களாயிருக்கிறார்கள். அவர்களைப் பாவ இருள், ஸ்தாபன இருள், அவிசுவாசமாகிய இருள் சூழ்ந்து கொள்ளுகிறது. அந்திக் கிறிஸ்துவின் ஆவி அங்கே தான் கிரியை செய்கிறது. அவர்கள் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படுவார்கள்.

தேவனுடைய சிங்காசனத்தைச் சுற்றி **நான்கு ஜீவன்கள்** இருந்தன. ***முதலாம் ஜீவன் சிங்கத்திற்கொப்பாகவும், இரண்டாம் ஜீவன் காளைக்கொப்பாகவும், மூன்றாம் ஜீவன் மனுஷமுகம் போன்ற முகமுள்ளதாகவும், நான்காம் ஜீவன் பறக்கிற கழுகுக்கு ஒப்பாகவுமிருந்தன*** (வெளி 4:7). ஏதேனில் தோட்டத்தைச் செழிப்பாக்க ஒரு நதி புறப்பட்டுச் சென்றது. அது நான்கு கிளை நதிகளாகப் பிரிந்து ஏதேன் தோட்டத்திற்குத் தண்ணீர்ப்பாய்ச்சிச் செழிப்பாக்கினது (ஆதி 2:10–13). அது போல, தேவனிடத்திலிருந்து ஜீவ நதியாகிய பரிசுத்தஆவி புறப்பட்டு, அது நான்காக பிரிந்து முதல் நான்கு முத்திரையின் காலத்தில் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்குக் **கிறிஸ்துவின் ஜீவனைக்** கொண்டு வந்தது. அந்த ஜீவனைப் பெறுவது தான் பரிசுத்தஆவியின் அபிஷேகம். அதுவே மறுபிறப்பு. அந்த ஜீவனைப் பெறாதவர்கள் அந்த நேரத்திற்குரிய சாத்தானின் சவாலை மேற்கொள்ள முடியாது. ***பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்*** (சகரியா 4:6). அந்த முத்திரைகளைப் படத்தில் காண முடியும். அதின் ஆவிக்குரிய விளக்கத்தைக் கீழே காணலாம்.

முதலாம் முத்திரை: ***ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளில் ஒன்றை உடைக்கக்கண்டேன். அப்பொழுது நான்கு ஜீவன்களில் ஒன்று என்னை நோக்கி "நீ வந்து பார்" என்று இடிமுழக்கம் போன்ற சத்தமாய்ச் சொல்லக்கேட்டேன். நான் பார்த்தபோது, இதோ, ஒரு வெள்ளைக்குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவன் வில்லைப் பிடித்திருந்தான்; அவனுக்கு ஒரு கிரீடங் கொடுக்கப்பட்டது. அவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான்*** (வெளி 6:1,2).

**எபேசு, சிமிர்னா, பெர்கமு** என்ற முதல் மூன்று சபைக் காலங்கள் முதலாம் முத்திரையின் கீழ் அடங்குகிறது. அக்காலத்தில் சாத்தான் வெள்ளைக் குதிரையில் பிரயாணம் செய்தான். அவன் வில்லைப் பிடித்திருந்தான். அவனுக்கு அம்பு இல்லை. ஆகவே அவன் ஒரு பயங்காட்டுகிறவனாயிருக்கிறான் (Bluff). குதிரை வல்லமைக்கும், வெள்ளை பரிசுத்தத்திற்கும், நீதிக்கும் அடையாளமாயிருக்கிறது. ஆகவே சாத்தான் முதலாம் முத்திரையின் காலத்தில் மத வல்லமையைப் (Religious Power) பெற்று, தன்னைப் பரிசுத்தவானாகக் காண்பித்து, ஆத்துமாக்களை வஞ்சித்தான். அவனுக்கு ஒரு கிரீடம் கொடுக்கப்பட்டது. சாத்தான் முதலாவது அந்திக்கிறிஸ்துவின் ஆவியாய் இருந்தான். பின்பு அவர்கள் ஒரு மனிதனைத் தலைவனாக நியமித்தபோது அவனுக்குக் கிரீடம் கொடுக்கப்பட்டது. அந்தக் கிரீடத்தில் "தேவனுடைய குமாரனுக்குப் பதிலாக ஆட்சி செய்கிறவர்" என்று

ரோம மொழியில் எழுதியிருக்கிறது. அதாவது **"VICARIUS FILII DEI"** இந்த ரோம எழுத்துக்களின் தொகையைக் கூட்டினால் சரியாக **666** வருகிறது. அது மிருகத்தின் இலக்கமாக இருக்கிறது (வெளி 13:18).

***வெள்ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார்*** (ஏசாயா 59:19b) என்று எழுதியிருக்கிறபடி, வெள்ளைக் குதிரையைச் சந்திக்கத் தேவன் முதலாம் முத்திரையின் காலத்தில், முதலாம் ஜீவன் சிங்கத்தை அனுப்புகிறார். சிங்கம் யூதா கோத்திரத்துச் சிங்கமாகிய கிறிஸ்துவுக்கு அடையாளமாயிருக்கிறது. கிறிஸ்து வார்த்தையாயிருக்கிறார். அந்தக் காலத்துப் பரிசுத்தவான்கள் அந்திக்கிறிஸ்துவின் ஆவியால் வஞ்சிக்கப்படாதபடிக்குத் தேவன் கலப்படமற்றத் தூய வார்த்தையை வெளிப்படுத்தினார்.

**இரண்டாம் முத்திரை**: ***அவர் இரண்டாம் முத்திரையை உடைத்தபோது, இரண்டாம் ஜீவனானது: "நீ வந்து பார்" என்று சொல்லக்கேட்டேன். அப்பொழுது சிவப்பான வேறொரு குதிரை புறப்பட்டது. அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு, பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலை செய்யத்தக்கதாகச் சமாதானத்தைப் பூமியிலிருந்தெடுத்துப் போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது; ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது*** (வெளி 6:3,4).

நான்காவது சபையாகிய **தியத்தீரா** சபையின் காலம் இரண்டாம் முத்திரையில் அடங்குகிறது. இந்தக் காலத்தில் சாத்தான் வெள்ளைக்குதிரையை விட்டிறங்கி, **சிவப்புக்குதிரையில்** பிரயாணம் செய்தான். சிவப்பு இரத்தத்திற்கும், அபாயத்திற்கும் அடையாளமாயிருக்கிறது. இக்காலத்தில் சாத்தான் அரசியல் வல்லமை (Political Power) பெற்று, தன் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் ஏற்றுக் கொள்ளாதவர்களைக் கொலை செய்தான். ரோமன் கத்தோலிக்க ஸ்தாபனம், தன் கோட்பாடுகளை ஏற்றுக் கொள்ளாத ஆறு கோடியே எண்பது இலட்சம் (6,80,00,000) கிறிஸ்தவர்களைக் கொன்று போட்டது (Foxe's Book of Martyrs). ***அவர்கள் உங்களை ஜெப ஆலயங்களுக்குப் புறம்பாக்குவார்கள். மேலும் உங்களைக் கொலை செய்கிறவன் தான் தேவனுக்குத் தொண்டு செய்கிறவனென்று நினைக்குங் காலம் வரும்*** (யோவான் 16:2) என்று இயேசு சொன்ன வசனம் நிறைவேறியது.

சிவப்புக் குதிரையைச் சந்திக்க, தேவன் இரண்டாம் ஜீவனாகிய **காளையை** அனுப்பினார். காளை சுமை சுமக்கிற மிருகம் (Beast of Burden). அது பலி செலுத்தப்படக் கூடிய மிருகம் (Sacrificial Animal). தேவன் அக்காலத்திலுள்ள பரிசுத்தவான்களுக்குக் காளையின் ஆவியை அனுப்பினபடியால், அவர்கள் தங்கள் உயிரை தேவனுடைய வார்த்தைக்காக, பலியாக ஒப்புக்கொடுப்பதைப் பெரிய பாக்கியமென்று எண்ணி பலியாக மரித்தார்கள்.

**மூன்றாம் முத்திரை**: ***அவர் மூன்றாம் முத்திரையை உடைத்தபோது, மூன்றாம் ஜீவனானது; "நீ வந்து பார்" என்று சொல்லக் கேட்டேன். நான் பார்த்தபோது, இதோ, ஒரு கறுப்புக்குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவன் ஒரு தராசைத் தன் கையிலே பிடித்திருந்தான். அப்பொழுது, ஒரு பணத்துக்கு ஒரு படி கோதுமையென்றும், ஒரு பணத்துக்கு மூன்று படி வாற்கோதுமையென்றும், எண்ணெயையும், திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே என்றும், நான்கு ஜீவன்களின் மத்தியிலிருந்து உண்டான சத்தத்தைக் கேட்டேன்*** (வெளி 6:5,6).

**சர்தை, பிலதெல்பியா** என்ற ஐந்தாம், ஆறாம் சபைக்காலங்கள் இந்த மூன்றாம் முத்திரையில் அடங்கும். இந்த முத்திரையின் காலத்தில் சாத்தான் சிவப்புக்குதிரையை விட்டிறங்கி கறுப்புக் குதிரையில் பிரயாணம் செய்தான். கறுப்பு அறியாமைக்கும் (Ignorance) சத்தியத்தை மறைப்பதற்கும் அடையாளமாயிருக்கிறது. இக்காலத்தில் சாத்தான் பிசாசின் வல்லமை (Demonic Power) நிறைந்தவனாய் சத்தியத்தை மறைத்து ஜனங்களைத் தன் சொந்த உபதேசத்தினால் வஞ்சித்தான்.

அவன் கையிலுள்ள தராசு வியாபாரத்திற்கு (Business) அடையாளமாயிருக்கிறது. இக்காலத்தில் கத்தோலிக்க ஸ்தாபனம் பாவமன்னிப்புச் சீட்டை (Indulgence) விற்றது. அதுமாத்திரமல்ல, தங்கள் மத சம்பந்தமான எல்லா காரியங்களுக்கும் கட்டணம் வசூலித்தது. அது ஒரு வியாபார மார்க்கமாகச் செயல்பட்டது. நான்கு ஜீவன்களின் மத்தியில் தேவனுடைய சிங்காசனம் இருக்கிறது. ஆகவே சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் குதிரையின் மேல் ஏறியிருக்கிறவனைப் பார்த்து: "நீ உன் ஆவிக்குரிய ஆகாரமாகிய கோதுமையையும், வாற்கோதுமையையும் வேண்டுமானால் உன் ஜனங்களுக்கு விற்றுக்கொள். ஆனால் நான் என் பிள்ளைகளுக்குக் கொஞ்சம் பரிசுத்தஆவியையும், கொஞ்சம் வெளிப்பாட்டையும் கொடுத்திருக்கிறேன். அதைச் சேதப்படுத்த உனக்கு அதிகாரமில்லை" என்று எச்சரிக்கிறார். எண்ணெய் பரிசுத்தஆவிக்கும், திராட்சரசம் வெளிப்பாட்டினால் உண்டாகும் ஊக்குவிக்கப்படுதலுக்கும் (Stimulation by Revelation) அடையாளமாயிருக்கிறது.

இந்தக் காலத்தின் சவாலைச் சந்திக்கத் தேவன் மூன்றாம் ஜீவனாகிய **மனுஷமுகமுள்ள** ஜீவனின் ஆவியை அனுப்பினார். மனுஷன் ஞானத்திற்கு அடையாளமாயிருக்கிறான். மார்டின் லூத்தர், ஜான் வெஸ்லி என்ற பரிசுத்தவான்கள் எழும்பி தெரிந்துகொள்ளப்பட்டவர்களை, அறியாமையிலிருந்து வார்த்தைக்குத் திருப்பினார்கள். 1517ம் வருடம் அக்டோபர் மாதம் 31ம் தேதி, மார்டின் லூத்தர் ஜெர்மெனியிலுள்ள விட்டன்பர்க் என்ற தேவாலயத்தின் கதவில் கத்தோலிக்க மார்க்கத்திற்கு விரோதமான 95 குறிப்புகளை எழுதி ஆணியடித்தார். இப்படி வேதப்பூர்வமான உண்மைகளை வெளியிட்டபடியால், ஒரு கூட்டமான மக்கள் கத்தோலிக்க மார்க்கத்தை வெறுத்து, விசுவாசம், பரிசுத்தமாக்கப்படுதல் என்ற பைபிள் உபதேசத்திற்குத் திரும்பினர். மறுபடியும் பிறந்த அனுபவத்தைப் பெற்றார்கள்.

**நான்காம் முத்திரை**: ***அவர் நாலாம் முத்திரையை உடைத்தபோது, நாலாம் ஜீவனானது ; நீ வந்து பார் என்று சொல்லுஞ் சத்தத்தைக் கேட்டேன். நான் பார்த்தபோது, இதோ, மங்கின நிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர்; பாதாளம் அவன் பின் சென்றது. பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்ட மிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலை செய்யும்படியான அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது*** (வெளி 6:7,8).

**லவோதிக்கேயா** என்ற ஏழாம் சபைக் காலமும், மற்றும் எடுத்துக்கொள்ளப்படுதல் வரை உள்ள காலம் இந்த நான்காம் முத்திரையில் அடங்கும். இந்தக் காலத்தில் சாத்தான் மங்கின நிறக் குதிரையில் (Pale horse) பிரயாணம் செய்கிறான். வெள்ளை, சிவப்பு, கறுப்பு, இந்த மூன்று நிறங்களையும் கலந்தால் மங்கின நிறம் உண்டாகும். ஆகவே சாத்தான் இப்பொழுது கறுப்புக் குதிரையை விட்டிறங்கி மத வல்லமை, அரசியல், வல்லமை, பிசாசின் வல்லமை இம்மூன்றையும் ஒருங்கே பெற்றுக் கொண்டவனாய்ச் செயல்படுகிறான். அவன் பெயர் மரணம். மரணம் என்றால் தேவனைவிட்டு நித்திய காலமாகப் பிரிக்கப்படுதல் (Eternal Seperation from God). இந்தக் காலம் மிகவும் வஞ்சிக்கப்படுகிற காலம் (Most deceiving age). தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் தவிர மற்ற அனைவரும் வஞ்சிக்கப்படுவார்கள். இந்தக் குதிரையின் மேல் ஏறியிருக்கிறவன் ஜனங்களை மரணத்திற்கும், பாதாளத்திற்கும், உபத்திரவக் காலத்திற்கும் உலக அழிவாகிய அர்மகெதோன் யுத்தத்திற்கும் வழி நடத்துகிறான்.

இந்தக் காலத்தின் சவாலைச் சந்திக்க, தேவன் நான்காம் ஜீவனாகிய **கழுகின்** ஆவியை, தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு அனுப்பியிருக்கிறார். தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகளை எப்பொழுதும் கழுகுகளுக்கு ஒப்பிடுகிறார் (God always likens His prophets to eagles). ஆகவே இந்த

ஏழாம் சபையின் தூதன், ஒரு தீர்க்கதரிசியாக இருக்க வேண்டும். அவர் பறக்கிற கழுகின் (Flying Eagle) ஜீவனை உடையவராயிருந்தார்.

சில கிறிஸ்தவர்கள் கடைசி கால சத்தியத்தைவிசுவாசிக்கிறவர்களைப் பார்த்து: ஏழாம் சபையின் தூதன் சகோதரன் பிரன்ஹாம் என்று பைபிளில் எங்கே எழுதியிருக்கிறது? அப்படி எழுதியிருந்தால் காட்டுங்கள் நாங்கள் விசுவாசிக்கிறோம் என்பார்கள். இப்படிச் சொல்லுகிறவர்கள் இயேசுகிறிஸ்து வாழ்ந்த காலத்தில் ஜீவித்தால், அவர்கள் இயேசுவையும், யோவான் ஸ்நானனையும் விசுவாசிக்கிறவர்களை நோக்கி, மேசியாவுக்கு முன்னோடியாக அனுப்பப்பட்ட எலியாவின் ஆவியையுடைய தீர்க்கதரிசி, இந்த யோவான் ஸ்நானன்தான் என்று நாங்கள் எப்படி விசுவாசிக்க முடியும்? அவன் பெயர் வேதத்தில் எங்கே எழுதியிருக்கிறது? என்று நிச்சயமாகக் கேட்பார்கள்.

பிரியமானவர்களே வேத வசனங்களை அறிந்து கொண்டால் மாத்திரம் போதாது. தேவன் எப்படி அதை நிறைவேற்றுகிறார் என்பதையும் அறிய வேண்டும். மற்றப்படி அதை அறிந்து கொள்வதாலோ அல்லது அதை மனப்பாடம் செய்வதாலோ எவ்வித பிரயோஜனமுமில்லை. தேவனால் முன் குறிக்கப்பட்டவர்கள், வெளிப்பாட்டினால் அதை அறிந்து கொண்டார்கள். மற்றவர்களுடைய கண்கள் குருடாக்கப்பட்டிருந்தது.

மேலும் அவர்கள் இயேசுவை மேசியாவாக விசுவாசிக்கிறவர்களை நோக்கி: இந்த நாசரேத்து ஊரிலிருந்து வந்த இயேசு தான் கிறிஸ்து என்று எப்படிச் சொல்ல முடியும்? அவர் பெயர் வேதத்தில் எங்கே எழுதியிருக்கிறது? என்று நிச்சயமாகக் கேட்பார்கள். தேவன் எவனுக்கு வெளிப்படுத்தச் சித்தமாயிருந்தாரோ அவனேயன்றி வேறொருவரும் அந்தக் காலத்தில் இயேசு யார் என்று அறிந்து கொள்ள முடியவில்லை (மத்தேயு 11:25). ஏனெனில் பழைய ஏற்பாட்டில் ***இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்*** (ஏசாயா 7:14). ***நமக்கு ஒரு பாலகன் பிறந்தார். நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்*** (ஏசாயா 9:6) என்றுதான் எழுதியிருக்கிறதே தவிர, அந்தக் குமாரன் இயேசு என்று ஒரு இடத்தில் கூட அவர் பெயரைக் குறிப்பிடவில்லை. அப்படியானால் அவர்தான் இயேசு என்று எப்படிச் சொல்ல முடியும்? அவருடைய ஜீவியமும், அவருடைய தன்மைகளும், அவருடைய அற்புத அடையாளங்களும், அவருடைய ஊழியமும் **இயேசுவே கர்த்தர், இயேசுவே கிறிஸ்து** என்று வெளிப்படுத்துகிறது. வேதவாக்கியங்கள் அவரை உறுதிப்படுத்துகிறது. முன்குறிக்கப்பட்ட ஆத்துமாக்கள் வெளிப்பாட்டினால் அவரை அறிந்திருந்தனர். மேசியா, கிறிஸ்து, வல்லமையுள்ள தேவன், கர்த்தர், நித்திய பிதா என்ற வார்த்தையில் அல்லது அந்த ஸ்தானத்தில் இயேசுவைத் தவிர வேறு யாரையும் பொருத்தமுடியாது.

சகோதரன் பிரன்ஹாமுடைய வாழ்க்கையும், அவருடைய செய்தியும், கர்த்தராகிய இயேசு அவருக்குக் காண்பித்த தரிசனங்களும், கர்த்தர் அவர் மூலமாய் நடப்பித்த அற்புத அடையாளங்களும் எதை வெளிப்படுத்துகிறது? அவர் தான் எலியாவின் ஆவியையுடைய கடைசி காலத் தீர்க்கதரிசி. அவர் தான் வார்த்தையினால் உறுதியாக்கப்பட்டத் தீர்க்கதரிசி (Word Prophet). அவர் தான் ஏழாம் சபையின் தூதன் என்பதை திட்டவட்டமாக வெளிப்படுத்துகிறது. அந்த இடத்தில் அவரைத் தவிர, வேறு எந்த ஊழியக்காரரையும் பொருத்தமுடியாது.

தூதன் என்றால் செய்தியாளன். உங்களுடைய தபால்காரரையும் ஒரு தூதன் என்று சொல்லலாம். வெளி. 1:1ல் சொல்லப்பட்டத் தூதன் சகோ. பிரன்ஹாமைக் குறிக்கிறது. வெளி. 1:11ல் ***"நீ காண்கிறதை ஒரு புஸ்தகத்தில் எழுதி, ஆசியாவிலிருக்கிற எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா என்னும் பட்டணங்களிலுள்ள ஏழு சபைகளுக்கும் அனுப்பு என்று விளம்பினது"*** அவை தான் வெளி 2 மற்றும் 3ம் அதிகாரத்தில் அந்தந்த சபைக்கால தூதர்களுக்கு எழுதப்படுகிறது. உதாரணமாக வெளி. 2:1ல் ***"எபேசு சபையின் தூதனுக்கு நீ எழுத வேண்டியது***

***என்னவெனில்”*** என்று எழுதியிருக்கிறது. அது போல் வெளி. 2:8, 2:12, 2:18, 3:1, 3:7 மற்றும் 3:14–லும் எழுதியிருக்கிறது. இந்த இரகசியங்களை வானத்திலுள்ள தூதர்களுக்கு எழுதுவதில் எந்த அர்த்தமும் இருக்க முடியாது. அது மாத்திரமல்ல. *வெளி. 1:20ல்* ***“என் வலதுகரத்தில் நீ கண்ட ஏழு நட்சத்திரங்களின் இரகசியத்தையும், ஏழு பொன் குத்துவிளக்குகளின் இரகசியத்தையும் எழுது; அந்த ஏழு நட்சத்திரங்களும் ஏழு சபைகளின் தூதர்களாம், நீ கண்ட ஏழு குத்துவிளக்குகளும் ஏழு சபைகளாம்”*** என்று எழுதியுள்ளது. அந்த ஏழு சபைகளும் பூமியில் தான் உள்ளன. அவ்விதமான சபைகளுக்கு பூமியில் வாசம்பண்ணும் தூதன்தான் செய்தியைக் கொடுக்கமுடியும். எனவே வெளிப்படுத்தலில் கூறப்பட்ட அந்த ஏழு தூதர்களும் பூமியில் வாசம் பண்ணினவர்களே என்பதைத் திட்டவட்டமாகக் கூற முடியும். அவர்கள் யார் என்று இயேசுகிறிஸ்துவே தீர்க்கதரிசி பிரன்ஹாமுக்கு வெளிப்படுத்தினார்.

கழுகின் ஜீவன், மங்கின நிறமுள்ள குதிரையின் மேல் ஏறியிருக்கிறவனுடைய பெயரை வெளிப்படுத்துகிறது. மற்ற ஜீவன்கள் அதை வெளிப்படுத்தவில்லை. அவன் பெயர் மரணம் என்று கழுகின் ஜீவன் சொல்லுகிறது. பிசாசு ஆதி முதல் எவ்வாறு கிரியை செய்கிறான் என்பது இந்த முத்திரையில் வெளிப்படுகிறது. பிசாசின் முகத்திரை கிழிக்கப்படுகிறது. கர்த்தருடைய மீட்பின் திட்டமும் (Plan of Redemption) அவருடைய மணவாட்டியைப் பற்றிய இரகசியமும், அவருடைய வருகையின் இரகசியமும், ஆதிமுதல் அந்தம்வரை தேவன் என்ன செய்து கொண்டு வருகிறார் என்ற எல்லா இரகசியங்களையும் கழுகின் ஜீவன், ஏழாம் தூதனுடைய செய்தியின் மூலமாக வெளிப்படுத்துகிறது. இக்காலத்தின் முடிவில் முதலாம் உயிர்த்தெழுதலும், எடுத்துக்கொள்ளப்படுதலும் நடக்கவிருக்கிறது.

**ஐந்தாம் முத்திரை**: ***அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, தேவவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின் கீழே கண்டேன். அவர்கள்; பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின் மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழி வாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது. அன்றியும் அவர்கள் தங்களைப்போலக் கொலைசெய்யப்படப்போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது*** (வெளி 6:9–11).

சபையானது ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டப் பின்பு தேவன் பலிபீடத்தின் கீழ் உள்ள ஆத்துமாக்களைக் கண்ணோக்கிப் பார்க்கிறார். பாவநிவிர்த்திக்கென்று பலி செலுத்தப்பட்ட மிருகத்தின் இரத்தத்தைக் கிருபாசனத்தில் ஏழு தரம் தெளித்த பின்பு, மீதி இரத்தத்தைப் பலிபீடத்தின் அடியில் ஊற்றுவார்கள் (லேவி 4:7). அதற்கு இந்த ஆத்துமாக்கள் அடையாளமாயிருக்கிறார்கள். இந்த ஆத்துமாக்கள் யூதர்களாயிருக்கிறார்கள். அவர்கள் தேவனுடைய ஜனங்கள் என்ற காரணத்தினிமித்தம் **ஹிட்லர், முசோலினி, ஏய்க்மன், ஸ்டாலின்** போன்ற கொடுங்கோல் மன்னர்களால் அநியாயமாகக் கொல்லப்பட்டார்கள். இந்த முத்திரையை அறிவிக்க எந்த ஜீவனும் இல்லை. ஏனெனில், சபை எடுத்துக்கொள்ளப்பட்டது. இவர்கள் பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் பெறமுடியாது. ஆனாலும் தேவன் இவர்களுக்குக் கிருபையாய் இரங்கி, நித்திய ஜீவனைக் கொடுப்பேன் என்று வாக்குக் கொடுக்கிறார். அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற வெள்ளை அங்கிகள் நித்திய ஜீவனுக்கு அடையாளமாக இருக்கிறது. மேலும் அவர்கள் கொஞ்சக் காலம் காத்திருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டது. இவர்கள் கடைசி உயிர்த்தெழுதலில் நித்திய ஜீவனைப் பெறுவார்கள்.

**ஆறாம் முத்திரை**: *அவர் ஆறாம் முத்திரையை உடைக்கக்கண்டேன். இதோ, பூமி மிகவும் அதிர்ந்தது. சூரியன் கறுப்புக் கம்பளியைப் போலக் கறுத்தது. சந்திரன் இரத்தம் போலாயிற்று. அத்திமரமானது பெருங்காற்றினால் அசைக்கப்படும்போது, அதின் காய்கள் உதிருகிறதுபோல, வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது. வானமும் சுருட்டப்பட்ட புஸ்தகம் போலாகி விலகிப்போயிற்று; மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களைவிட்டு அகன்றுபோயின. பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும், பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக் கொண்டு, பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள் மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்; அவருடைய கோபாக்கினையின் மகாநாள் வந்து விட்டது, யார் நிலைநிற்கக்கூடும் என்றார்கள்* (வெளி 6:12–17).

ஆறாம் முத்திரையின் காலம் **உபத்திரவக் காலம்** (Period of Tribulation). இந்த முத்திரை **அர்மகெதோன்** யுத்தத்தில் முடிவடைகிறது. இது சுத்திகரிப்பின் முத்திரை (Purging Seal). இது நியாயத்தீர்ப்பின் முத்திரை (Judgment Seal). கிறிஸ்துவின் மணவாட்டி இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தினால் ஏற்கனவே சுத்திகரிக்கப்பட்டபடியால், உபத்திரவக் காலத்தில் பிரவேசித்துச் சுத்திகரிக்கப்பட வேண்டிய அவசியமில்லை. மேலும் அவள் ஆவியின்படி கிறிஸ்துவோடுகூட சிலுவையில் அறையப்பட்டு நியாயந்தீர்க்கப்பட்டபடியால், அவள் நியாயந்தீர்க்கப்பட உபத்திரவக் காலத்தில் பங்குபெற வேண்டிய அவசியமில்லை. அவள் நாலாம் முத்திரையின் முடிவில் எடுத்துக் கொள்ளப்படுதலில் பங்கு பெறுகிறாள். எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்கு பெறாத அனைவரும் இந்த ஆறாம் முத்திரையின் காலத்திற்குள் பிரவேசிக்கிறார்கள். இந்தக் காலத்தில் மிருகத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாத **புத்தியில்லாத கன்னிகைகள்** கொல்லப்படுகிறார்கள். இவர்கள் இயேசுவின் இரத்தத்தால் சுத்திகரிக்கப்படாதபடியினாலும், காலம் இருக்கும்போதே பரிசுத்தஆவியாகிய எண்ணெயைப் பெறாதபடியினாலும் கைவிடப்பட்டு உபத்திரவத்தின் மூலம் சுத்திகரிக்கப்படுகின்றனர் (மத்தேயு 25:4). இஸ்ரவேலரின் சகல கோத்திரங்களிலும் தெரிந்துகொள்ளப்பட்ட 1,44,000 யூதர்கள் மோசே, எலியா என்பவர்களுடைய ஆவியின் அபிஷேகத்தைப் பெற்ற **இரண்டு சாட்சிகளுடைய** செய்தியின் மூலமாக, இயேசுகிறிஸ்துவைக் குறித்த வெளிப்பாட்டைப் பெற்றுக் கொள்ளுகிறார்கள் (வெளி. 11:1–4). பரிசுத்தஆவியால் முத்திரிக்கப்படுகிறார்கள் (வெளி 7:1–8). இவர்கள் மிருகத்தையும், அதின் சொரூபத்தையும் வணங்க மாட்டார்கள். அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளாமல் வார்த்தைக்காக நிற்பார்கள். ஆகவே இவர்களையும் மிருகம் கொன்று போடும். இவர்கள் இரத்த சாட்சியாக மரிப்பார்கள்.

அதன் பின்பு பூமியானது அக்கினியால் சுத்திகரிக்கப்படும். **சோதோம், கொமோரா** என்னும் பட்டணங்களில் பாவம் பெருகினபோது, எப்படி தேவன் வானத்திலிருந்து அக்கினியையும் கந்தகத்தையும் வருவித்து அவைகளை அழித்துப் போட்டாரோ, அதைப் போலவே இந்தப் பாவம் நிறைந்த பொல்லாத உலகத்தைத் தேவன் அக்கினியால் சுட்டெரிப்பார் (லூக்கா 17:28,29). ஆகவே இந்த முத்திரையின் காலத்தில் புத்தியில்லாத கன்னிகைகளும், 1,44,000 யூதர்களும், முடிவில் **இயற்கையும்** (Nature) சுத்திகரிக்கப்படுகிறது. *இதோ, சூளையைப்போல எரிகிற நாள் வரும்; அப்பொழுது அகங்காரிகள் யாவரும் அக்கிரமஞ்செய்கிற யாவரும் துரும்பாயிருப்பார்கள்; வரப்போகிற அந்த நாள் அவர்களைச் சுட்டெரிக்கும்; அது அவர்களுக்கு வேரையும் கொப்பையும் வைக்காமற்போகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்* (மல்கியா 4:1). *கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிற விதமாய் வரும்; அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம்.*

***பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்*** (2 பேதுரு 3:10) என்ற வேத வசனங்களைத் தேவன் நிறைவேற்றுவார்.

**ஏழாம் முத்திரை**: ***அவர் ஏழாம் முத்திரையை உடைத்தபோது, பரலோகத்தில் ஏறக்குறைய அரை மணி நேரமளவும் அமைதல் உண்டாயிற்று*** (வெளி 8:1).

ஏழாம் முத்திரையானது கர்த்தருடைய வருகையாயிருக்கிறது (**7th Seal is the Coming of the Lord**). இயேசுவானவர் எப்படி மேகத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டாரோ அப்படியே மேகத்தில் வருவார். ***அவர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்; அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது ...*** வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டு பேர் அவர்களருகே நின்று: ***... "இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார்"*** *என்றார்கள் (அப். 1:9–11).* அவர் மேகத்தில் எப்படி எடுத்துக்கொள்ளப்பட்டாரோ அப்படியே மறுபடியும் மேகத்தில் வந்தார். அதைப் பற்றி விபரமாக பின்னால் வருகிற பகுதியில் வாசிக்கலாம். மேலும் ஏழாம் முத்திரை எல்லாவற்றிற்கும் முடிவாக இருக்கிறது (**7th Seal is the end of everything**). அது முடிவுவரை சென்று கொண்டிருக்கிறது. அது முத்திரைகள், எக்காளங்கள், கோபகலசங்கள் எல்லாவற்றின் முடிவாயிருக்கிறது.

ஆகவே நாம் வாழுகிறகாலம் இன்னதென்றும், இக்காலத்தின் செய்தி இன்னதென்றும் அறியாமல் மறுபடியும் பிறக்க முடியாது. உதாரணமாக, நோவா காலத்தில் பேழைக்குள் பிரவேசிக்க வேண்டும்; அப்பொழுது தான் இரட்சிப்பு, இல்லாவிட்டால் ஜலப்பிரளயத்தால் மரிக்க வேண்டும் என்பது தான் நோவா என்ற தூதன் (செய்தியாளன்) மூலமாகக் கொடுக்கப்பட்டச் செய்தி. ஆனால் மோசே வரும்போது, நோவாவின் செய்தியைக் கொண்டுவராதபடி, வேறே செய்தியைக் கொண்டுவந்தான். "நீங்கள் ஆட்டுக் குட்டியின் இரத்தத்தின் கீழ் வரவேண்டும். இல்லாவிட்டால் சங்கார தூதனால் மரிப்பீர்கள்" என்று சொன்னான் (யாத் 12:13). பின்பு கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வரும்போது, அவர் நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் என்றார் (யோவான் 14:6). அவரே உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்று யோவான் சொன்னான் (யோவான் 1:29). அக்காலத்திலிருந்தவர்கள் மறுபடியும் பிறக்க வேண்டுமானால் நியாயப்பிரமாண செய்தியாகிய ஆட்டுக் குட்டியைப் பலி செலுத்துவதை விட்டு விட்டு, இயேசுகிறிஸ்துவே மெய்யான ஆட்டுக்குட்டி என்று விசுவாசித்து அவருடைய செய்தியின் கீழ் வரவேண்டும். இயேசுகிறிஸ்து சிலுவையில் மரிக்கும் வரைக்கும் அவர்கள் ஆட்டுக்குட்டியைக் கொண்டு வந்தால் ஏற்றுக்கொள்ளப்படும். அவர் மரித்த பின்பு ஆட்டுக்குட்டியைக் கொண்டு வந்தால் தேவன் ஏற்றுக்கொள்ளமாட்டார்.




படம் 5

ஆகவே ஒருவன் இரட்சிக்கப்பட வேண்டுமென்றால் அவன் வாழுகிற காலம் என்ன? அக்காலத்திற்குரிய வார்த்தை என்ன? அக்காலத்தில் தேவன் எந்த வசனத்தை நிறைவேற்றுகிறார்? அக்காலத்திற்குரிய செய்தியாளன் யார்? என்று அறிய வேண்டும். உண்மையாகவே அவன் தன் காலத்தின் செய்தியை விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படிந்தால் தேவன் அவனுக்குள் பரிசுத்தஆவியாக வந்து வாசம்பண்ணுவார். அவன் மறுபடியும் பிறந்த அனுபவத்தைப் பெறுவான். ***ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது*** (வெளி 2:7; 2:11; 2:29; 3:6; 3:13; 3:22) என்று இயேசு ஒவ்வொரு சபைக்காலத்தின் முடிவிலும் கூறுகிறார். ஆகவே ஒவ்வொரு காலத்திற்கும் ஆவியானவர் சொல்லுகிற செய்தியை விசுவாசிப்பதே, அக்காலத்தின் பரிசுத்தவான்களை

மறுபிறப்பிற்கு வழி நடத்தும். தேவனுடைய வார்த்தையே ஆவியாயும் ஜீவனாயுமிருக்கிறது (யோவான் 6:63). (படம் 5ஐ பார்க்கவும்)

## சபைக்காலங்களிலுள்ள சில தவறான உபதேசங்கள்:

a) **திரித்துவக் கோட்பாடும், பட்டப் பெயர்களில் கொடுக்கப்படும் ஞானஸ்நானமும் (Trinity and Title Baptism):** கி.பி. 325ல் திரித்துவப் பிரமாணம் நிசாயா (Nicea) என்ற இடத்தில் கான்ஸ்டன்டைன் (Constantine) என்ற ரோம பேரரசனால் கொண்டுவரப்பட்டது. பின்பு அந்த மார்க்கம் ரோமன் கத்தோலிக்க (Roman Catholic) மார்க்கமாக மாறினது. ஒரே தேவனுக்குப் பதிலாக திரித்துவக் கோட்பாட்டையும், இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்குப் பதிலாகப் பிதா, குமாரன், பரிசுத்தஆவி என்ற தேவனின் பட்டப் பெயர்களால் குழந்தைகளுக்குத் தெளிப்பு ஞானஸ்நானம் கொடுக்கும் முறைமையையும் கொண்டு வந்தார்கள். ஞானம் அடைந்த பின் ஸ்நானம் பண்ணுவதுதான் ஞானஸ்நானம் என்ற வார்த்தையின் விளக்கம். சிறு பிள்ளைகள் பொதுவாக 12 வயது (Age of Accountability) நிரம்பும் போதுதான் நன்மை, தீமை இன்னது என்று அறிகிறார்கள். மேலும் தெளித்தல் என்பது ஸ்நானம் ஆகாது. சிறு பிள்ளைகளின் ஞானஸ்நானம், அல்லது தெளிப்பு ஞானஸ்நானம் அல்லது பிதா குமாரன் பரிசுத்தஆவியின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றதாக பைபிளில் ஒரு இடத்தில் கூடச் சொல்லவில்லை. பிதா, குமாரன், பரிசுத்தஆவி என்பது நாமமல்ல. அவைகள் தேவனின் பட்டப் பெயர்கள் (Not names but Titles). அது ஒரே தேவனின் மூன்று ஸ்தானங்கள். அது ஒரே தேவனின் மூன்று காலங்களின் உரிமைகள் (Dispensation claims of one God). பழைய ஏற்பாட்டு காலத்தில் தேவன் அவர்களுக்கு மேல் இருந்தார். அதே தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டபோது, நம்மோடு கூட இருந்தார். பெந்தெகொஸ்தே நாளிலிருந்து சபைக்குள் இருக்கிறார் (God above us, God with us, God in us). தேவன் என்னவாயிருந்தாரோ அதைக் குமாரனுக்குள் ஊற்றினார். குமாரன் என்னவாயிருந்தாரோ அதைத் தமது சபைக்குள் ஊற்றினார். பிதா, குமாரன், பரிசுத்தஆவியின் நாமம், கர்த்தராகிய இயேசுகிறிஸ்து. பிதா (கர்த்தர்) குமாரன் (இயேசு) பரிசுத்தஆவி (கிறிஸ்து). ஆகவே ஒருவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறும்போது அவன் இயேசு சொன்ன கட்டளையை (மத் 28:19) நிறைவேற்றுகிறான். ஒருவன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெறவில்லையென்றால் மத்தேயு 28:19ல் இயேசு சொன்ன கட்டளையை நிறைவேற்றவில்லை.

**Table 2**

| **பட்டப் பெயர்களா? அல்லது நாமமா? (Title or Name)** | | | |
|---|---|---|---|
| Title (பட்டப்பெயர்) | Father (பிதா) | Son (குமாரன்) | Holy Ghost (பரிசுத்தஆவி) |
| Name (நாமம்) | Lord (கர்த்தர்) | Jesus (இயேசு) | Christ (கிறிஸ்து) |

தேவனுடைய நாமத்தைக் குறித்த இந்த வெளிப்பாடு பரிசுத்தஆவியினால், பெந்தெகொஸ்தே என்ற நாளில் பேதுருவுக்குக் கொடுக்கப்பட்டது. கர்த்தராகிய இயேசுகிறிஸ்து அப்போஸ்தலனாகிய பேதுருவுக்குத் தான் பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களைக் (Keys) கொடுத்தார். ***பரலோக ராஜ்யத்தின் திறவுகோல்களை நான் உனக்குத் தருவேன்; பூலோகத்திலே நீ கட்டுகிறது எதுவோ அது***

***பரலோகத்திலும் கட்டப்பட்டிருக்கும், பூலோகத்திலே நீ கட்டவிழ்ப்பது எதுவோ அது பரலோகத்திலும் கட்டவிழ்க்கப்பட்டிருக்கும் என்றார்*** (மத் 16:19). திறவுகோல் என்றால் இரகசியம் என்று அர்த்தம். பரலோகராஜ்யத்தின் திறவுகோல் என்றால் பரலோகராஜ்யத்தில் பிரவேசிக்கும் இரகசியம் என்று அர்த்தம். ***ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் அவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான்*** (யோவான் 3:2) என்று இயேசு சொல்லியிருக்கிறார். மறுபிறப்பு என்பது தேவனுடைய ஜீவனாகிய பரிசுத்தஆவியைப் பெறுவதாகும். அந்த இரகசியம் பெந்தெகொஸ்தே நாளில் பேதுருவுக்கு பரிசுத்தஆவியினால் வெளிப்படுத்தப்பட்டது. ஆகவே பேதுரு சொல்லுவதைக் கவனியுங்கள். *"ஆகையால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள்"* என்றான். இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து, சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள்.

***பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது*** என்று கூறினான் (அப் 2:36–38). இதுவே பரிசுத்தஆவியைப் பெறும் இரகசியம். முதலாவது, இயேசுவே ஆண்டவர், இயேசுவே கிறிஸ்து என்று ஒரே தேவனைக்குறித்தச் சத்தியத்தை விசுவாசிக்க வேண்டும். பாவங்களை அறிக்கை செய்து மனந்திரும்ப வேண்டும். பின்பு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறவேண்டும். அப்பொழுது தேவன் அந்த நபரை, வாக்குத்தத்தம் பண்ணப்பட்டப் பரிசுத்தஆவியால் நிரப்பக் கடமைப்பட்டிருக்கிறார். கர்த்தர் வரவழைக்கும் யாவருக்கும் கொடுக்கப்பட்ட ஒரே உபதேசம் இதுதான். இதைத் தவிர வேறு உபதேசம் இல்லை.

பேதுரு, தேவனால் கொடுக்கப்பட்ட திறவுகோலை பெந்தெகொஸ்தே நாளில் பயன்படுத்தி, யூதர்களுக்குப் பரலோக ராஜ்யத்திற்குச் செல்லவேண்டிய வழியைத் திறந்தான். அன்றையத் தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் ஞானஸ்நானம் பெற்றார்கள் (அப். 2:41). பின்பு அப்போஸ்தலர் எட்டாம் அதிகாரத்தில் சமாரியர்களுக்குக் கதவைத் திறந்தான். பிலிப்பு சமாரியாவுக்கு போய், அவர்களைச் சத்தியத்தில் வழி நடத்தி, இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்தாலும், அவர்கள் பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் பெறவில்லை. ஏனென்றால் பிலிப்புவின் கையில் இயேசுகிறிஸ்து திறவுகோலைக் கொடுக்கவில்லை. பேதுருவின் கையில்தான் கொடுத்திருக்கிறார். அவன் வந்து திறக்காவிட்டால் ஒருவரும் உள்ளே போகமுடியாது. அவன் திறந்துவிட்டால், அதன் பின்பு அவர்கள் பிரவேசிக்கலாம். ஆகவே பேதுரு வரும் வரை ஒருவரும் பரிசுத்தஆவியைப் பெறவில்லை. பேதுரு வந்த பின்பு அவர்களுக்குப் பரிசுத்தஆவி ஊற்றப்படுகிறது (அப் 8:15–17).

அதன் பின்பு அப்போஸ்தலர் பத்தாம் அதிகாரத்தில் **கொர்நேலியு** ஜெபம்பண்ணும்போது, கர்த்தருடைய தூதன் பேதுருவை அழைக்கும்படி சொல்லுகிறார். ஏன் மற்ற சீஷர்களை அழைக்கச் சொல்லக் கூடாது? பேதுரு பெயரை மட்டும் குறிப்பிடுவதின் இரகசியம் என்ன? பரலோகராஜ்யத்தின் திறவுகோல்களை இயேசுகிறிஸ்து பேதுருவினிடத்தில் தான் கொடுத்திருக்கிறார். அந்த ஊழியம் (Commission) அவனுக்குத்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. தேவன் தாம் சொன்னதை ஒரு போதும்

மாற்றமாட்டார். பேதுரு யூதர்களுக்கு மட்டும் இரட்சிப்பு உண்டு, புறஜாதிகளுக்கு இரட்சிப்பு இல்லை என்ற கருத்தை உடையவனாயிருந்தான். ஆகவே தேவன், புறஜாதிகளுக்கும் இரட்சிப்பு உண்டு. அவர்களும் பரிசுத்தஆவியைப் பெற்று பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பார்கள் என்ற அவருடைய சித்தத்தை அவனுக்கு ஒரு தரிசனத்தின் மூலமாக வெளிப்படுத்தினார். கொர்நேலியு ஒரு ரோமன். அவன் புறஜாதியான். ஆகவே பேதுரு அவன் வீட்டிற்கு அழைக்கப்பட்டு, அங்கே பிரசங்கம் செய்யும்போது வசனத்தைக் கேட்டவர்கள்மேல் பரிசுத்தஆவி ஊற்றப்பட்டது. அந்த நாளில் பேதுரு புறஜாதிகளுக்குக் கதவைத் திறந்தான் (அப். 10:44–47).

உலகில் உள்ள ஜனங்களை மூன்றாகப் பிரிக்கலாம். யூதர்கள், சமாரியர்கள், புறஜாதிகள். இம்மூன்று கூட்டத்தாருக்கும் பேதுரு கதவைத் திறந்தான். அன்று திறக்கப்பட்ட கதவு இந்நாள் வரைக்கும் திறந்தே இருக்கிறது. அது இன்னும் அடைக்கப்படவே இல்லை. ஆட்டுக் குட்டியானவருடைய **ஜீவ புஸ்தகத்தில்** உலகத்தோற்றத்திற்கு முன் எழுதப்பட்ட **கடைசி ஆத்துமா** (last soul) உண்மையான பரிசுத்தஆவியால் முத்திரிக்கப்படும் வரைக்கும் திறந்தே இருக்கும். அந்தக் கடைசி ஆத்துமா மறுபடியும் பிறக்கும்போது தேவன் கதவை அடைப்பார். அப்பொழுது எடுத்துக் கொள்ளப்படுதல் நிகழும். எடுத்துக்காட்டாக **நோவா காலத்தில்** தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட கடைசி மிருகம் உள்ளே பிரவேசிக்கும் வரைக்கும் பேழையின் வாசல் திறந்தே இருந்தது. கடைசி மிருகம் உள்ளே பிரவேசித்தவுடன் தேவன் பேழையின் கதவை அடைத்துவிட்டார். ***தேவன் அவனுக்குக் கட்டளையிட்டபடியே, ஆணும் பெண்ணுமாகச் சகலவித மாம்ச ஜந்துக்களும் உள்ளே பிரவேசித்தன; அப்பொழுது கர்த்தர் அவனை உள்ளே விட்டுக் கதவை அடைத்தார்*** (ஆதி 7:16).

அப்போஸ்தலனாகிய பவுலும், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் தான் ஞானஸ்நானம் கொடுத்தார் (அப் 19:5). ஆகவே தேவன் ஒருவரே. அவருடைய நாமம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து. பிதா, குமாரன், பரிசுத்தஆவி என்பது தேவனுடைய பட்டப்பெயர்கள் என்று சந்தேகமில்லாமல் தெள்ளத்தெளிவாக விளங்குகிறது.

b) **ஸ்தாபனங்களை ஏற்படுத்திக் கொள்ளுதல்**: பழைய ஏற்பாட்டில் சாமுவேல் தீர்க்கதரிசியிடம் இஸ்ரவேல் ஜனங்கள் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டுமென்று கேட்டுக் கொண்டது போல (1 சாமு 8:4,5), புதிய ஏற்பாட்டு காலத்திலும், தங்களை ஆள ஸ்தாபனங்களை ஏற்படுத்திக் கொண்டார்கள். **ஸ்தாபனங்கள்** மனிதனுடைய உபதேசங்களால் உருவாக்கப்பட்டிருக்கிறது. இன்று கிறிஸ்தவ உலகில் 900க்கும் அதிகமான ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அன்று ஆசாரியர்கள், லேவியர்கள், தீர்க்கதரிசிகள், நியாயாதிபதிகள் இவர்கள் மூலமாக தேவன் ஜனங்களை ஆளுகை செய்தார். அவர்களுக்கு ராஜா இல்லை. முடிவில் இயேசுகிறிஸ்துவே ராஜாதி ராஜாவாக ஆளுகை செய்ய வேண்டுமென்று தேவன் எதிர்ப்பார்த்தார். ஆனால் அவர்கள் தேவனுடைய ஆளுகையைப் புறக்கணித்து, மனுஷனுடைய ஆளுகையைத் தெரிந்துகொண்டார்கள். அதுபோலவே, புதிய ஏற்பாட்டு காலத்தில் தேவன் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரை சுவிசேஷகர்களாகவும், சிலரை மேய்ப்பராகவும், சிலரைப் போதகராகவும் தெரிந்துகொண்டு, தேவன் இந்த ஐந்து விதமான ஊழியத்தின் ( Fivefold Ministry) (எபே 4:13) மூலமாக சபையை ஆளுகை செய்தார். பின்பு ஜனங்கள் ஸ்தாபனங்களைத் தங்களுக்கு ஏற்படுத்திக்கொண்டார்கள். அப்பொழுது பரிசுத்தஆவியின் ஆளுகை சபையைவிட்டு விலகிவிட்டது. முதலாவது ஏற்பட்ட ஸ்தாபனம் ரோமன் கத்தோலிக்க ஸ்தாபனமாகும். அது வேதத்தில் மகாவேசி, மகா பாபிலோன் (வெளி 17:1,5) என்று அழைக்கப்படுகிறது. அது கி.பி. 325ல் திருத்துவ உபதேசத்தில் ஆரம்பித்து, இந்நாள்வரை உலகத்தின்

மிகப் பெரிய ஸ்தாபனமாக உள்ளது. உலகத்தின் ஐசுவரியம் அங்கே தான் இருக்கிறது. எல்லா தவறான பாபிலோனிய உபதேசங்களும் அந்த ஸ்தாபனத்தின் மூலமாகவே மற்ற கிறிஸ்துவ ஸ்தாபனத்திற்குள் பரவிக்கிடக்கிறது.

ஐந்தாம் சபையின் தூதன் **மார்டின் லூத்தர்** காலத்திற்குப்பின், லுத்தரன் ஸ்தாபனம் (Lutheran denomination) ஏற்பட்டது. ஆறாம் சபையின் தூதன் **வெஸ்லி** காலத்திற்குப் பின், மெத்தடிஸ்ட் ஸ்தாபனம் (Methodist denomination) ஏற்பட்டது. அதன்பின் 1906ம் ஆண்டு கலிபோர்னியாவில் **பெந்தெகொஸ்தே எழுப்புதல்** ஏற்பட்டது. சிறிது காலத்தில் அந்த எழுப்புதல் முடிந்து விட்டது. இப்பொழுது அவர்களும் அதிகமான பெந்தெகொஸ்தே ஸ்தாபனங்களை (Pentecostal denominations) ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஸ்தாபனங்களை ஏற்படுத்தும்போது பரிசுத்தஆவியின் ஆளுகை நீங்கி, மனிதனுடைய ஆளுகை வருகிறது. ஆகவே ஸ்தாபனங்கள் அனைத்தும் ஆவியில் மரித்த நிலையில் (Spiritually dead) காணப்படுகிறது. பரிசுத்தஆவியானவர் அங்கே இல்லாதபடியால், அங்கே மறுபிறப்பின் அனுபவம் இல்லை. ஆகவே பேதுரு பெந்தெகொஸ்தே நாளில், ***"மாறுபாடான இந்தச் சந்ததியைவிட்டு விலகி உங்களை இரட்சித்துக்கொள்ளுங்கள்"*** (அப் 2:40) என்று கூறினான். இந்த மாறுபாடான சந்ததிதான் ஸ்தாபனங்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து ***"என் ஜனங்களே நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்"*** (வெளி 18:4) என்று அழைக்கிறார். ஸ்தாபன உபதேசங்களை விட்டு வார்த்தைக்கு வாருங்கள். பரிசுத்தஆவியினால் நிரப்பப்படுங்கள் என்று கூவி அழைக்கிறார். பரிசுத்தஆவியால் நிரப்பப்படுவதே மறுபிறப்பு.

## X. கடைசி காலத்தில் மறுபிறப்பு (New Birth in this last age)

a) **கடைசி காலத்தின் செய்தியாளர் எலியாவின் ஆவியை உடைய ஒரு தீர்க்கதரிசி**: ***நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்*** (எபே. 1:13). உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனம் என்பது உங்கள் காலத்தின் செய்தியாகும். இப்பொழுது நாம் வாழுகிற காலம் கடைசி காலம். லவோதிக்கேயா சபை தான் கடைசி சபை (வெளி 3:14). இது ஏழாம் சபையின் காலம். இந்த சபையின் தூதன் சகோதரன் வில்லியம் மரியன் பிரன்ஹாம். இவர் ஏழாம் சபையின் தூதன் (வெளி 3:14). இவர் கடைசி காலத்தில் பூமி அழிவதற்கு முன்பாக, தேவனால் அனுப்பப்பட்ட, எலியாவின் ஆவியையுடைய ஒரு தீர்க்கதரிசியாயிருக்கிறார். இவருடைய செய்தி தெரிந்துகொள்ளப்பட்டவர்களுடைய இருதயங்களை ஆதி பெந்தெகொஸ்தே பிதாக்களாகிய, அப்போஸ்தலர்களுடைய விசுவாசத்திற்குத் திருப்பும் என்று தேவன் வாக்குரைத்திருக்கிறார். அப்போஸ்தலர்கள் **வெளிப்படுத்தப்பட்ட வார்த்தையை** (Manifested Word) உடையவர்களாயிருந்தார்கள். அந்த வெளிப்படுத்தப்பட்ட வார்த்தை கிறிஸ்துவாயிருக்கிறார்.

***இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்கு முன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். நான் வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடிக்கு, அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்*** (மல். 4:5,6). கர்த்தருடைய **பெரிதான நாள்** (Great Day) என்பது இயேசுகிறிஸ்துவின் முதலாம் வருகையைக் குறிக்கிறது. பிள்ளைகள் என்பது தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களைக் குறிக்கும். கர்த்தருடைய **பயங்கரமான நாள்** (Dreadful Day) என்பது இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும், உலகத்தின் முடிவையும் குறிக்கும். யோவான் ஸ்நானன் கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக அனுப்பப்பட்ட எலியாவின்

ஆவியையுடைய தீர்க்கதரிசி (லூக்கா 1:17). அவன் நியாயப்பிரமாணத்தின் கீழ் இருந்த, பழைய ஏற்பாட்டு பிதாக்களுடைய இருதயங்களை, வெளிப்படுத்தப்பட்ட வார்த்தையாகிய கிறிஸ்துவினிடத்திற்குத் திருப்பினான். இந்தக் கடைசி காலத்தில் உலகத்தைத் தேவன் அழிப்பதற்கு முன், கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக அனுப்பப்பட்ட எலியாவின் ஆவியை உடைய தீர்க்கதரிசி சகோதரன் **வில்லியம் மரியன் பிரன்ஹாம்**, அந்த வசனத்தின் இரண்டாம் பகுதியை (மல்கியா 4:6b) நிறைவேற்றியிருக்கிறார். அவருடைய செய்தி தெரிந்துகொள்ளப்பட்ட (Elect) கிறிஸ்தவ பிள்ளைகளுடைய இருதயங்களை, நமது பிதாக்களாகிய ஆதி அப்போஸ்தலருடைய விசுவாசத்திற்குத் திருப்புகிறது. அவருடைய செய்தி தேவனால் அருளப்பட்ட செய்தி. அது தேவனால் வெளிப்படுத்தப்பட்ட வார்த்தையாயிருக்கிறது. அது தேவனுடைய வார்த்தைக்குச் சரியான வியாக்கியானத்தைக் கொடுக்கிற செய்தியாயிருக்கிறது. ***"நான் உங்களிடத்தில் அனுப்பின என் பெரிய சேனையாகிய வெட்டுக்கிளிகளும், பச்சைக்கிளிகளும், முசுக்கட்டைப் பூச்சிகளும், பச்சைப் புழுக்களும் பட்சித்த வருஷங்களின் விளைவை உங்களுக்குத் திரும்ப அளிப்பேன்"*** (யோவேல் 2:25) என்று கர்த்தர் யோவேல் தீர்க்கதரிசி மூலமாக உரைத்தத் தீர்க்கதரிசன வசனத்தின் நிறைவேறுதலாயிருக்கிறது. ஏழாம் தூதனின் செய்தி சபைக் காலங்களில், விடுபட்டுப் போன அப்போஸ்தல சத்தியம் அனைத்தையும் திருப்பிக் கொண்டுவருகிற செய்தியாயிருக்கிறது.

கீழே கொடுக்கப்பட்ட அட்டவணையில் (Table 3) தேவன் எலியாவின் ஆவியை ஐந்து முறை பயன்படுத்துகிறதை வரிசைக் கிரமமாகக் காணலாம். முதலாவது பழைய ஏற்பாட்டில் ஆகாப் காலத்தில் **எலியாவின்** மேல் வந்தது. இரண்டாவதாக அதே ஆவி **எலிசாவின்** மேல் இரட்டிப்பாக வந்தது. மூன்றாவதாக அதே ஆவி, இயேசுகிறிஸ்துவின் ஊழியம் ஆரம்பம் ஆகும் போது **யோவான் ஸ்நானன்** மேல் வந்தது. நான்காவதாக கடைசி காலத்தில், இருபதாம் நூற்றாண்டில், **சகோதரன் பிரன்ஹாமுக்குள்** வந்தது. இயேசுகிறிஸ்து எலியாவின் ஆவியைக் குறித்து இவ்விதமாகச் சொல்லுகிறார். ***இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: எலியா முந்திவந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது மெய்தான். ஆனாலும், எலியா வந்தாயிற்று என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்; அவனை அறியாமல் தங்கள் இஷ்டப்படி அவனுக்குச் செய்தார்கள்; இவ்விதமாய் மனுஷகுமாரனும் அவர்களால் பாடுபடுவார் என்றார். அவர் யோவான் ஸ்நானனைக் குறித்துத் தங்களுக்குச் சொன்னார் என்று சீஷர்கள் அப்பொழுது அறிந்துகொண்டார்கள்*** (மத். 17:11–13).

இந்த வசனங்களில் எலியா வந்தாயிற்று என்று சொன்ன வார்த்தைகள் கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு, முந்திவந்த யோவான் ஸ்நானனைக் குறிக்கிறது. அதைச் சீஷர்களும் அறிந்து கொண்டார்கள். ஆனால் இந்த வசனங்களில் எலியா முந்திவந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்துவது மெய்தான் என்ற வார்த்தைகள், சகோதரன் பிரன்ஹாமைக் குறிக்கிறது. எப்படியெனில் யோவான் எதையும் சீர்ப்படுத்தவில்லை. தீர்க்கதரிசி பிரன்ஹாம்தான் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முந்தி வந்து உபதேசங்களைச் சீர்ப்படுத்தினார். ஐந்தாவதாக உபத்திரவக் காலத்தில் **இரண்டு சாட்சிகள்** தோன்றி யூதர்களுக்குப் போதிக்கிறார்கள். அப்பொழுது மோசேயின் ஆவியோடுகூட, எலியாவின் ஆவியையும் அனுப்புகிறார் (வெளி. 11:1–14). இவ்விதமாக தேவன் எலியாவின் ஆவியை ஐந்து முறை பயன்படுத்துகிறார்.

**Table 3:**

**எலியாவின் ஆவியை தேவன் ஐந்து முறை பயன்படுத்துகிறார்**
**(God Uses the Spirit of Elijah for Five times)**

| | | |
|---|---|---|
| 1 | பழைய ஏற்பாடு | எலியா தீர்க்கதரிசி |
| 2 | பழைய ஏற்பாடு | எலிசா தீர்க்கதரிசி |
| 3 | கிறிஸ்துவுக்கு முன் (கர்த்தருடைய பெரிதான நாள் வருமுன்) | யோவான் ஸ்நானன் |
| 4 | உபத்திரவ காலத்திற்கு முன் | சகோதரன் வில்லியம் மரியன் பிரன்ஹாம் |
| 5 | உபத்திரவ காலத்தில் | இரண்டு சாட்சிகள் (மோசே, எலியா என்பவர்களுடைய ஆவியைப் பெற்றவர்கள்) |

**b) மனுஷகுமாரனுடைய ஊழியம் மறுபடியும் வருவது (Son of Man ministry is Repeated):** இயேசுகிறிஸ்து உலகத்தில் மாம்சத்தில் இருந்த காலம், பழைய ஏற்பாட்டு சபையின் முடிவு காலம். அப்பொழுது யூதர்கள் தங்களைத் தேவபக்தியுள்ளவர்கள் என்று நினைத்து, தங்களைத் தாங்களே வஞ்சித்துக் கொண்டிருந்தனர். பரிசேயர், சதுசேயர், வேதபாரகர், ஏரோதியர் என்னும் பிரிவுகளை உடையவர்களாயிருந்தனர். தேவபக்தியின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு அவருடைய வார்த்தைக்குப் பதிலாகப் பாரம்பரியங்களையும், மனுஷனுடைய கோட்பாடுகளையும் உடையவர்களாயிருந்தனர். அந்த நேரத்தில் தான் தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டார். மனுஷகுமாரனுடைய ஊழியம் யூதர்களுக்கு வந்தது.

அதுபோல புதிய ஏற்பாட்டின் முடிவில் வாழுகிற புறஜாதிகளுக்கு மனுஷகுமாரனுடைய ஊழியம் ஒரு மனுஷன் மூலமாக மறுபடியும் வந்திருக்கிறது. இந்த கடைசி காலத்திலுள்ள லவோதிக்கேயா சபை குளிருமில்லாமல், அனலுமில்லாமல் வெதுவெதுப்பாயிருக்கிறது. அது கிறிஸ்துவின் பார்வையில், ஆவியில் மரித்ததாயும், பாரம்பரியங்களால் நிறைந்ததாயும், பின்வாங்கிப்போன நிலையிலுள்ள சபையாகவும் காணப்படுகிறது. இயேசுகிறிஸ்து அதை வாந்திபண்ணிப்போடுவேன் என்று சொல்லுகிறார். இந்தச் சபையில் எந்த நல்ல காரியத்தையையும் கிறிஸ்து காணவில்லை (வெளி 3:16, 17). அதுதான் இன்றைய ஸ்தாபன கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய நிலைமை. ***தேவபக்தியின் வேஷத்தைத் தரித்துக் கொண்டு அதின் பெலனை (வார்த்தையை) மறுதலிக்கிறவர்களாயிருக்கிறார்கள்*** (2 தீமோத் 3:5).

இயேசுகிறிஸ்து மனுஷகுமாரனாக பூமியில் இருந்த போது, அவருடைய ஊழியத்தில் மூன்று இழுப்புகள் (Three Pulls) இருந்தது. **முதலாம் இழுப்பு** (1st Pull) வியாதிகளைக் குணமாக்கினார் (Healing). பின்பு **இரண்டாம் இழுப்பு** (2nd Pull) இருதயத்தின் இரகசியங்களை வெளிப்படுத்தினார் (Prophecy) அதன் பின்பு **மூன்றாம் இழுப்பு** (3rd Pull) வார்த்தையைத் திறந்தளித்தார் (Opening of the Word). அதே விதமான மனுஷகுமாரனுடைய ஊழியம் முடிவு காலத்தில் வரும். அப்பொழுது உலகம் நோவா காலத்தைப் போலவும், சோதோமின் காலத்தைப் போலவும் இருக்கும். மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும் (Even thus shall it be in the day when the Son of man is revealed) என்று இயேசு தீர்க்கதரிசனமாக உரைத்திருக்கிறார்.

***நோவாவின் நாட்களில் நடந்தது போல மனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும். நோவா பேழைக்குள் பிரவேசித்த நாள்வரைக்கும் ஜனங்கள் புசித்துக் குடித்தார்கள். பெண்கொண்டு***

***கொடுத்தார்கள்; ஜலப்பிரளயம் வந்து எல்லாரையும் அழித்துப்போட்டது. லோத்தினுடைய நாட்களில் நடந்தது போலவும் நடக்கும்; ஜனங்கள் புசித்தார்கள், குடித்தார்கள், கொண்டார்கள், விற்றார்கள், நட்டார்கள், கட்டினார்கள். லோத்து சோதோமை விட்டுப் புறப்பட்ட நாளிலே வானத்திலிருந்து அக்கினியும் கந்தகமும் வருஷித்து, எல்லாரையும் அழித்துப்போட்டது. மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும்*** (லூக்கா 17:26–30). நம்முடைய காலத்தில் அது நிறைவேறியிருக்கிறது. இன்று உலகம் நோவா காலத்தைப் போல விஞ்ஞான உலகமாக மாறியிருக்கிறது. அது மாத்திரமல்ல, சோதோமைப் போல பாவமும் மிகவும் அதிகமாகப் பெருகியிருக்கிறது.

ஆகவே கிறிஸ்து சொன்னபடி, **மனுஷ குமாரனுடைய ஊழியம்**, ஏழாம் தூதனாகிய சகோதரன் பிரன்ஹாம், என்ற மனுஷன் மூலமாக மறுபடியும் வந்திருக்கிறது. அவர் அந்த மனுஷகுமாரன் அல்ல. மனுஷகுமாரன் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து. மனுஷகுமாரனாகிய இயேசுகிறிஸ்து செய்த அதே மாதிரி ஊழியத்தை மறுபடியும் சகோதரன் வில்லியம் பிரன்ஹாம் மூலமாக உலகத்திற்குக் கர்த்தர் கொண்டு வந்தார். இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தில் இருந்த அதே மூன்று இழுப்புகள் (Three Pulls) தீர்க்கதரிசி ஊழியத்திலும் இருந்தது. அவர் 1947 முதல் 1965 வரை சுவிசேஷ ஊழியத்தைச் செய்தபோது சுமார் 1,120 செய்திகளைக் கொடுத்திருக்கிறார். அவருடைய செய்தி உலகமெங்கிலும் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தச் செய்திகள் அனைத்தும் இயேசுகிறிஸ்துவின் வெளிப்பாடாக இருக்கிறது. ***இயேசுகிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராயிருக்கிறார்*** (எபி. 13:8) என்பதை அவருடைய ஊழியம் நிரூபித்தது. குணமாக்கும் வரமும், தீர்க்கதரிசன வரமும் மிகவும் வல்லமையாக வெளிப்பட்டது. விசேஷமாகக் கொடிய கேன்சர் (Cancer) வியாதிகளிலிருந்து அநேகர் விடுதலை பெற்றார்கள். முடவர்கள் நடந்தார்கள், செவிடர்கள் கேட்டார்கள். குருடர்கள் பார்வை அடைந்தார்கள். மரித்தோர் ஐந்து பேர் உயிரடைந்தார்கள். மனுஷனுடைய இருதயத்தின் இரகசியங்களையும், வருங்காலங்களையும் வெளிப்படுத்தினார். ஒன்றுகூட பிழையில்லாமல் நிறைவேறினது. அதன் பின்பு மூன்றாம் இழுப்பும் (வார்த்தை வெளிப்படுதல்) அவருடைய ஊழியத்தில் நிறைவேறியது.

ஏழாம் தூதனுடைய செய்தி அப்போஸ்தல விசுவாசத்தை மறுபடியும் கொண்டுவந்திருக்கிறது. அது மாத்திரமல்ல ஏழு முத்திரைகள் திறக்கப்பட்டு, வேதத்தில் மறைந்திருக்கிற தேவ இரகசியமாகிய அவருடைய சிந்தையை, நமக்கு வெளிப்படுத்தியிருக்கிறது. இந்த வெளிப்பாடு இயேசுகிறிஸ்து யார்? என்றும், கிறிஸ்துவுக்குள் நம்முடைய ஸ்தானம் என்ன? என்பதையும் காண்பிப்பதால், நாம் மனந்திரும்பி, தேவன் வாக்குரைத்தபடி ஏழாம் தூதனுடைய செய்தியை விசுவாசித்து, கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்று, ஸ்தாபனங்களையும் அதின் கோட்பாடுகளையும் விட்டு விலகி, வார்த்தையில் நிலைத்து நின்றால் தேவன் பரிசுத்தஆவியின் அபிஷேகத்தை அருளுவார். அதுவே இக்கடைசி காலத்தின் மறுபிறப்பு.

c) **தேவன் தமது தீர்க்கதரிசியை உறுதிப்படுத்துதல்**: **(Vindication of the Prophet)** ஒரு தீர்க்கதரிசி தேவனால் அனுப்பப்பட்டால், அவர் தேவனுடைய வார்த்தையைத் தவிர வேறொன்றையும் போதிக்கமாட்டார். தேவன் அவரையும், அவருடைய செய்தியையும் அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் உறுதிப்படுத்தினார். கர்த்தர் அப்போஸ்தலர்களை ஒரு செய்தியோடு அனுப்பும்போது, இயேசு அவர்களோடுகூட இருந்து அவர்களால் நடந்த அற்புதங்களினாலும் அடையாளங்களினாலும் வசனத்தை உறுதிப்படுத்தினார். அவர்கள் புறப்பட்டுப் போய், எங்கும் பிரசங்கம் பண்ணினார்கள். ***கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார்*** (மாற்கு 16:20). கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தீர்க்கதரிசிக்கு எப்படி வெளிப்படுத்தினார்? இக்காலத்திற்கென்று வாக்களிக்கப்பட்ட வசனத்தை எப்படி அவர் மூலமாக நிறைவேற்றினார்? என்பதைக் கீழே தொடர்ந்து படியுங்கள்.

**1) வானத்திலிருந்து உண்டான சத்தம் அவரை உறுதிப்படுத்தியது**: கர்த்தருடைய தீர்க்கதரிசி, 1933ம் வருடம் ஜீன் மாதத்தில் சில நாட்கள் எழுப்புதல் கூட்டத்தை நடத்தினார். அப்பொழுது அந்தக் கூட்டத்தின் முடிவில் சுமார் ஐந்நூறு பேர் மனந்திரும்பி, சத்தியத்தை விசுவாசித்து கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ள ஒப்புக்கொடுத்தனர். அவர்களுக்கு ஜெபர்சன்வில் (Jeffersonville), ஸ்பிரிங் தெரு (Spring Street) அருகில் உள்ள ஒகியோ (Ohio) என்ற நதியில், கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் கொடுத்துக் கொண்டிருந்தார். சுமார் நாலாயிரம் பேர் நதியின் கரையில் நின்று பார்த்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது அந்த நதியில் **மார்ஜி** (Margie) என்ற ஒரு அழகான வாலிபப் பெண், நீச்சல் உடையை அணிந்து கொண்டு ஒரு படகில் அமர்ந்திருந்தாள். அவள் ஒரு ஸ்தாபன சபையில், ஞாயிறு சிறுவர் பள்ளி ஆசிரியையாயும் இருந்தாள். சகோதரன் பிரன்ஹாம் அந்தப் பெண்ணிடம் கொஞ்சத் தூரம் தள்ளி படகைக் கொண்டு போகும்படி சொன்னார். அவளோ மறுத்துவிட்டாள். அப்பொழுது அவர் நீ போகமாட்டாய், ஆனால் நான் பிரசங்கிக்கிற சுவிசேஷம், உன்னை ஞானஸ்நானம் கொடுக்கிற இந்த இடத்திலிருந்து தூரக் கொண்டு போக முடியும் என்று சொன்னார். அப்பொழுது அந்தப் பெண், தீர்க்கதரிசியைப் பார்த்து வேடிக்கையாகச் சிரித்தாள். ஏனெனில், அந்தப் பெண்ணுக்கு ஞானஸ்நானத்தின்மேல் நம்பிக்கையில்லை. அவர் **பதினேழாவது** நபருக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்போது, வானத்திலிருந்து ஒரு வெளிச்சம் தோன்றி, சகோதரன் பிரன்ஹாமின் மேல் வந்து நின்றது. அதிலிருந்து ஒரு சத்தம் பிறந்தது. அது "**கிறிஸ்துவின் முதலாம் வருகைக்கு முன்னோடியாக யோவான் ஸ்நானன் அனுப்பப்பட்டது போல என்னுடைய இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக நீ ஒரு செய்தியோடு அனுப்பப்படுகிறாய்**" ("As John the Baptist was sent forth to forerun the first coming of Christ, you're sent forth with a message to forerun the second coming of Christ") என்று சொன்னது. (படம் 6 பார்க்கவும்).

"ஒரு ஊழியர் ஞானஸ்நானம் கொடுக்கும்போது **மர்மமான வெளிச்சம்** அவர் மேல் தோன்றினது" (Mystic Light appears over a local minister while baptizing) என்ற தலைப்பில் செய்தித்தாளிலும் பிரசுரிக்கப்பட்டது. இந்தக் காட்சியைக் கண்டவர்கள் அதிர்ச்சியினால் சோர்ந்து போனார்கள். சிலர் பயந்து ஓடினர். சிலர் முழங்கால்படியிட்டு தேவனைத் தொழுது கொண்டனர். அப்பொழுது மார்ஜி என்ற அந்தப் பெண், பயந்து தன் படகை முன்னோக்கி தள்ளி சென்றார். சகோதரன் பிரன்ஹாம் சொன்னபடி கர்த்தர் அவளை அந்த இடத்தை விட்டு அகலச் செய்தார். தேவனுடைய வார்த்தையை அவமதித்த அந்தப் பெண் சில நாட்களுக்குப் பின் பைத்தியம் பிடித்து, பைத்தியக்கார மருத்துவமனையில் சேர்க்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. தேவனுடைய வார்த்தையோடு விளையாடக்கூடாது என்பதை இந்த சம்பவத்தின் மூலமாக அறிந்து கொள்ள முடிகிறது. தேவனுடைய வார்த்தை எப்பொழுதும் தீர்க்கதரிசியினிடத்தில் தான் வருகிறது (The Word of God always comes to the prophet). பவுல் தமஸ்கு பட்டனத்திற்குப் போகும் வழியில் ஒரு வெளிச்சம் தோன்றி, அதிலிருந்து இயேசு பேசினது போலவே, சகோதரன் பிரன்ஹாமோடும் இயேசுகிறிஸ்து வெளிச்சத்திலிருந்து பேசி வசனத்தை உறுதிப்படுத்தி இருக்கிறார்.

தேவன், தம்முடைய இரகசியத்தை, தீர்க்கதரிசிகளுக்கு வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்ய மாட்டார் (ஆமோஸ் 3:7). ஆகவே, யோவான் ஸ்நானனைப் போல, சகோதரன் பிரன்ஹாமும் தேவனால் அனுப்பப்பட்ட ஒரு தீர்க்கதரிசியாக இருக்கிறார். அவருடைய செய்தி நம்மை இழந்து போன ஆதி அப்போஸ்தல விசுவாசத்திற்குத் திருப்புகிறது. அது நம்மைக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தப்படுத்துகிறது. இந்தச் செய்தி இயேசுகிறிஸ்துவின் பரிபூரண வெளிப்பாடாயிருக்கிறது (The Perfect Revelation of Jesus Christ).

கிறிஸ்துவின் வெளிப்பாடுதான் நம்மை மறுபிறப்பிற்கு வழி நடத்தும். இந்த வெளிப்பாடு நம்மைத் திருத்துவக் கோட்பாடு (Trinity dogma) என்ற உபதேசத்திலிருந்து, ஒரே தேவன் (One God) என்ற தேவத்துவத்தின் உபதேசத்திற்குத் திருப்புகிறது. பட்டப்பெயர்களால் கொடுக்கப்படுகிற ஞானஸ்நானத்திலிருந்து, தேவனுடைய நாமமாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் கொடுக்கும் ஞானஸ்நானத்திற்குத் திருப்புகிறது. மேலும் தவறான எல்லா ஸ்தாபன உபதேசத்திலிருந்தும், நம்மை உண்மையான தேவனுடைய வார்த்தைக்குத் திருப்புகிறது.



**படம் 6**

2) **அக்கினிஸ்தம்பத்தினால் உறுதிப்படுத்தப்பட்டவர்**: படம் 7ல் தீர்க்கதரிசி தலைக்குமேல் அக்கினி ஸ்தம்பம் இருப்பதைக் காணலாம். தேவன் மோசேயையும், பவுலையும் அக்கினி ஸ்தம்பத்தின் மூலம், அவர்கள் கர்த்தரால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகள் என்பதை உறுதிப்படுத்தினார். அது போலவே, சகோதரன் பிரன்ஹாமும் தேவனால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசி என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறார். இந்தப் படம் வாஷிங்டனில், அமெரிக்க பாராளுமன்றக் கட்டிடத்திலுள்ள, ஹால் ஆப் பேம் என்ற அறையில் இன்றும் தொங்கிக்கொண்டிருக்கிறது (And now it hangs in Washington, DC, in the Hall of Fame).

தேவன் தம்முடைய தீர்க்கதரிசியை அக்கினி ஸ்தம்பத்தினால் உறுதிப்படுத்தினார் என்பதைத் தொடர்ந்து படியுங்கள். சகோதரன் பிரன்ஹாமின் குணமாக்கும் ஊழியத்தை **பெஸ்ட்** (Mr. Best) என்ற போதகர் மிகவும் எதிர்த்தார். அவருக்குத் தெய்வீகச் சுகத்தில் (Divine Healing) நம்பிக்கை இல்லை. அவர் தெய்வீகச் சுகத்தைக் குறித்து வாதம் நடத்த சகோதரன் பிரன்ஹாமை சவாலுக்கு அழைத்தார். சகோதரன் பிரன்ஹாம் வாக்குவாதம்பண்ணுவது நல்லதல்ல (1 கொரி 11:16) என்று, அந்த சவாலைச் சந்திக்க முன்வரவில்லை. ஆனால் அவரோடு உடன் ஊழியம் செய்த, அவருடைய நண்பர் டாக்டர் **பாஸ்வொர்த்** (Dr. Bosworth) அந்தச் சவாலைச் சந்திக்க முன்வந்தார். அவர் சகோதரன் பிரன்ஹாமிடம் "வார்த்தையைத் தவிர வேறொன்றும் பேசமாட்டேன்" என்ற உறுதிமொழி சொல்லி விட்டு கூட்டத்திற்குச் சென்றார்.

1950ம் வருடம் ஜனவரி மாதத்தில் அமெரிக்காவிலுள்ள ஹவுஸ்டான், டெக்சாஸ் (Houston, Texas) என்ற இடத்தில் அந்தக் கூட்டம் நடந்தது. சுமார் முப்பதாயிரம் பேர் அதில் பங்கு பெற்றனர். போதகர் பெஸ்ட் தெய்வீக சுகம் என்பது இல்லை என்று மிக ஆவேசமாகப் பேசினார். பின்பு போதகர் பாஸ்வொர்த் தெய்வீகச் சுகம் வேதப் பூர்வமானது என்று பைபிளிலிருந்து அநேக வசனங்களைக் காண்பித்தார். சகோதரன் பிரன்ஹாம் கூட்டங்களில் சுகம் பெற்றவர்கள் எத்தனை பேர்; அவர்கள் எழுந்து நிற்கலாம் என்று அவர் சொன்னபோது, நூற்றுக்கணக்கான பேர்கள் எழுந்து நின்றனர். அந்தக் கூட்டத்திற்கு சகோதரன் பிரன்ஹாம் போகக்கூடாது என்று தீர்மானித்திருந்தார். ஆனால் கர்த்தருடைய ஆவியானவர் அங்கே போகும்படி ஏவினார். எனவே அவர் பாதிக் கூட்டம் நடந்து கொண்டிருக்கும் போது, அங்கு வந்து பால்கனியில் அமர்ந்திருந்தார்.

பின்பு அந்த பெஸ்ட் என்ற போதகர் பாஸ்வொர்த்தின் முகத்தில் குத்துவது போல கையசைத்துப் பேசினார். அவர் டக்ளஸ் ஸ்டுடியோ மூலமாக தான் பேசுவதைப் போட்டோ எடுக்க ஒழுங்கு செய்திருந்தார். ஜேம்ஸ் அயர் (James Ayers) என்ற ஒரு யூதனும், டெட் கிப்பர்மன் (Ted Kipperman) என்ற கத்தோலிக்க சபையைச் சேர்ந்தவரும் போட்டோ எடுத்தனர். முடிவில் அந்தப் போதகர், அந்த தெய்வீக சுகமளிப்பவர் இங்கு வரட்டும் என்று ஆவேசமாகக் கூச்சலிட்டார். அப்பொழுது போதகர் பாஸ்வொர்த் "சகோதரன் பிரன்ஹாம் இங்கு இருந்தால், அவர் மேடைக்கு வந்து சிறிது நேரம் பேசும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று கூறினார். உடனே சகோதரன் பிரன்ஹாம் மேடைக்குச் சென்றார். அவர் இவ்விதமாகப் பேசினார்: "நான் போதகர் பெஸ்ட்க்கு விரோதி அல்ல. அவர் மேல் எனக்கு எந்த மனஸ்தாபமும் இல்லை. அவர் சொல்லுகிறபடி, நான் தெய்வீகச் சுகமளிப்பவர் என்று என்னை ஒரு போதும் சொல்லிக் கொண்டதில்லை. இயேசுகிறிஸ்து ஒருவர் மாத்திரமே சுகமளிப்பவர். அவர் என்னை அற்புதங்களோடும், அடையாளங்களோடும் அனுப்பியிருக்கிறார். நான் சொல்லுகிறது சத்தியமாயிருக்குமானால், தேவன் அதைக் குறித்துச் சாட்சி கொடுப்பார்" என்று கூறி முடித்தவுடன், பெருங்காற்றின் இரைச்சல் போல ஒரு சத்தம் கேட்டது. உடனே டக்ளஸ் ஸ்டுடியோகாரர் அவரைப் போட்டோ எடுத்தனர். அதுதான் அவர்கள் எடுத்தக் கடைசி படம்.



அக்கினி ஸ்தம்பம்

சகோதரன் பிரன்ஹாமின் தலைக்குமேலே காணப்படுகிற அக்கினி ஸ்தம்பத்தோடு கூடிய புகைப்படமானது அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள டெக்சாஸ் மாகாணத்தில் ஹவுஸ்டன் என்னும் இடத்தில் 1950ம் ஆண்டு ஜனவரி மாதம் எடுக்கப்பட்டது. இப்படத்தை ஆராய்ந்த FBI என்ற போலீஸ் துப்பறியும் இலாகாவில் சந்தேகமான தஸ்தா வேஜுகளின் பரிசோதகரான டாக்டர் ஜார்ஜ் ஜே.லேஸி, நெகடிவ் முற்றிலுமாகத் தத்ரூபமானது என்று கூறினார். அவர் மேலும், " பரிசோதனைக்காக கொடுக்கப்பட்ட நெகடிவ்வானது தொடப்படாததும் இரு முறையோ அல்லது அநேக முறையோ ( Double or composite exposed ) படம் எடுக்கப்படாமல் ஒரே முறை எடுக்கப்பட்டதுமாயிருக்கிறது என்று நான் உறுதியான நம்பிக்கையுடையவனாயிருக்கிறேன். தலைக்கு மேலே வெறுமையான இடத்தில் காணப்படும் ஒளியானது, ஒரு ஒளி நெகடிவ்வில் நேரடியாக விழுந்திருப்பதால் உண்டானதாகும்" என்றும் கூறினார். ( ஜனவரி 29, 1950 )

படம் 7

அன்று இரவில், ஜேம்ஸ் அயர் என்ற அந்த போட்டோகிராபர் இருட்டறையில் பிலிம்மை எடுத்து நெகடிவ்வைப் (negative) பார்க்கும்போது, ஒரு நெகடிவ் தவிர மற்ற அனைத்தும் படம் விழாமல் காலியாக (blank) இருந்தது. கடைசியாக எடுத்தப் படம் மாத்திரம் சரியாக இருந்தது. அதில் சகோதரன் பிரன்ஹாம் தலைக்குமேல் இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிச்சம் (Supernatural Light ) காணப்பட்டது. அது **அக்கினிஸ்தம்பம்.** உடனே அந்த போட்டோகிராபர், மற்றவர்களுக்கு ஆச்சரியத்தோடு காண்பித்தார். காலையிலே அந்த நெகடிவ், இரகசிய தஸ்தாவேஜீகளை கவனிக்கும் அரசாங்க அதிகாரி ஜியார்ஜ் லேசி (George Lacy, Examiner of Questioned Documents) என்பவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அவர் அதை பல மணி நேரங்கள் தன்னுடைய பரிசோதனைக் கூடத்தில் சோதித்து, இந்த நெகடிவ் உண்மையானது. உண்மையில் வெளிச்சமானது நெகடிவில் பதிவாயிருக்கிறது. மேலும் அவர் "உலக சரித்திரத்தில் முதன் முதலாக இயற்கைக்கு அப்பாற்பட்டவர்

படமெடுக்கப்பட்டிருக்கிறார்" ("Because it's the first time in all the world's history that a supernatural Being was ever photographed"). இவ்விதமாக அறிக்கை எழுதி கையெழுத்திட்டார். ஆகவே தேவனே தம்முடைய தீர்க்கதரிசியுடன் காட்சியளித்து, அவரை உறுதிப்படுத்திக் காண்பித்திருக்கும்போது அவர் தேவனால் அனுப்பப்பட்டவர் என்று நம்புவதற்கு நாம் ஏன் தயங்க வேண்டும்?

**௩) மேகஸ்தம்பத்தினால் உறுதியாக்கப்பட்டிருக்கிறார்**: படம் 8ல் மேகஸ்தம்பத்தைக் காண்கிறோம். அதெப்படியெனில் 1963ம் வருடம் பிப்ரவரி மாதம் 28ம் தேதி சகோதரன் பிரன்ஹாம், சில நண்பர்களோடு கூட அமெரிக்காவிலுள்ள சூரிய அஸ்தமன மலையில் (Sunset Mountain) இருந்தார். திடீரென்று ஒரு வெடிச்சத்தம் கேட்டது. அவர் திரும்பிப் பார்த்தபோது, நித்தியத்திலிருந்து ஏழு தூதர்கள் மின்னல் வேகத்தில் இறங்கி வந்தார்கள். அந்தக் காட்சி ஒரு **வெண் மேகமாக** இருந்தது. அந்த மேகம் இருபத்தாறு மைல் உயரத்தில், முப்பது மைல் பரப்பளவு உடையதாயிருந்தது. பரிசுத்தஆவியின் வல்லமையினால் அந்த மேகத்திற்குள்ளாகச் சகோதரன் பிரன்ஹாம் எடுத்துக் கொள்ளப்பட்டார். அந்த மேகத்தின் போட்டோ, லைப் பத்திரிக்கையில் 1963ம் வருடம் மே 17ம் தேதி பிரதியில் (Life Magazine, 17th May 1963) "மர்மமான மேகம் தோன்றினது" (Mysterious Cloud Appeared) என்ற தலைப்பில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அந்தப் படத்தை வலதுபுறமாக திருப்பினால், இயேசுகிறிஸ்துவின் முகம் போல் காணப்படுகிறது. ***அவருடைய சிரசும் மயிரும் வெண்பஞ்சைப் போலவும் உறைந்த மழையைப் போலவும் வெண்மையாயிருந்தது. அவருடைய கண்கள் அக்கினி ஜீவாலையைப் போலிருந்தது*** (வெளி 1:14) என்ற வார்த்தை நிறைவேறியிருக்கிறது. அப்பொழுது தேவன் அந்த மேகத்திலிருந்து "**நீ புறப்பட்டு வந்த இடமாகிய ஜெபர்சன்வில்லுக்குத் திரும்பிப் போ, ஏழு முத்திரைகளின் ஏழு இரகசியங்கள் திறக்கப்படும்**" என்று கூறினார் ("Return back to Jeffersonville from where you come from for the Seven Seals of the Seven mysteries will be opened").

அவர், 1963ம் வருடம் மார்ச் மாதம் 17ம் தேதி முதல் 24ம் தேதி வரை, ஒரு சிறிய அறையில் காத்திருந்து ஏழு முத்திரைகளைக் குறித்துப் பிரசங்கம்பண்ண, வேதத்தைத் தியானித்துக் கொண்டிருந்த போது, அவர் மேகத்தில் சந்தித்த ஒவ்வொரு தூதனும் ஒவ்வொரு நாள் வந்து (each Angel coming each day) லூத்தர், வெஸ்லி, பெந்தெகொஸ்தேயினர் காலத்தில் விடுபட்டுப் போன வேதத்தில் மறைந்திருக்கிற அனைத்துச் சத்தியங்களையும் வெளிப்படுத்தினர். ஆட்டுக் குட்டியானவராகிய கிறிஸ்து ஏழு முத்திரைகளை உடைத்தார். அந்த இரகசியங்களை ஏழாம் தூதனுக்கு வெளிப்படுத்தினார். ஏழாம் தூதன் அதைச் சபைக்கு வெளிப்படுத்தினார். ***"சபைகளில் இவைகளை உங்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்படிக்கு இயேசுவாகிய நான் என் தூதனை அனுப்பினேன்"*** (வெளி 22:16). ***"இனி காலம் செல்லாது; ஆனாலும் தேவன் தம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளுக்குச் சுவிசேஷமாய் அறிவித்தபடி ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிற போது தேவரகசியம் நிறைவேறும்"*** (வெளி 10:6) என்ற வேதவாக்கியங்கள் நிறைவேறிவிட்டது.




ஏழு முத்திரைகள் திறக்கப்படுவதைக் குறித்து, சகோதரன் பிரன்ஹாமுடன் பேசின பிறகு, மேலே ஏறிச் சென்ற ஏழு தூதர்களின் செட்டைகளினால் உருவாக்கப்பட்டதுதான் இந்த இயற்கைக்கு மேம்பட்ட மேகம் ஆகும். பிப்ரவரி மாதம் 28ம் தேதி, 1963 அன்று சூரிய அஸ்தமன நேரத்தில் ஃப்ளேக்ஸ்டாப், அரிசோனாவின் மேல் இந்த மகத்தான மேகம் புகைப்படம் எடுக்கப்பட்டபோது, இது 26 மைல்கள் உயரமும், 30 மைல்கள் அகலமும் வாய்ந்ததாக இருந்தது. இப்புகைப்படமானது முதன்முறையாக மே 17, 1963 அன்று " லைப் " ( Life Magazine ) பத்திரிகையில் அச்சிடப்பட்டது.

படம் 8

4) **இந்தியாவில் பலப்பரீட்சை: (Showdown in India)** 1954ம் வருடம், செப்டம்பர் மாதம் நாலாவது வாரத்தில் சகோதரன் பிரன்ஹாம் இந்தியாவிலுள்ள பாம்பேக்கு (Bombay) வந்தார். பல சபையைச் சார்ந்த கிறிஸ்தவத் தலைவர்கள் அவரை வரவேற்றனர். அப்பொழுது இந்தியாவிலுள்ள மெத்தடிஸ்ட் சபையின் ஆர்ச் பிஷப் சகோதரன் பிரன்ஹாமைப் பார்த்து: "மிஸ்டர் பிரன்ஹாம், நீங்கள் ஒரு மிஷனரியாக இங்கு வரவில்லை என்று நம்புகிறேன். அமெரிக்கர்களாகிய நீங்கள் எல்லாரும் பைபிளை அறிந்திருக்கிறதைக் காட்டிலும், நாங்கள் அதிகமாக பைபிளை அறிந்திருக்கிறோம். ஏனெனில் பைபிள் ஒரு கிழக்கத்திய புத்தகம். பரிசுத்த தோமா 1900 வருடங்களுக்கு முன்பே இங்கு வந்து சுவிஷேசத்தைப் பிரசங்கம் பண்ணியிருக்கிறார்; தேவன் உமக்கு ஒரு வரத்தைக் கொடுத்திருக்கிறார் என்றும், அந்த வரம் பைபிளை மறுபடியும் ஜீவனுள்ளதாகச் செய்யும் (makes the Bible live again) என்றும் நாங்கள் கேள்விப்பட்டோம்" என்றார்.

அதற்குச் சகோதரன் பிரன்ஹாம் நிச்சயமாகவே உம்முடைய ஜனங்களாகிய இந்தியர்களுக்கு, இயேசுகிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவராயிருக்கிறார் என்பதை நான் காண்பிக்க விரும்புகிறேன் என்று பதிலளித்தார்.

சகோதரன் பிரன்ஹாம் பாம்பேயிலுள்ள தாஜ்மஹால் ஓட்டலில் தங்கியிருக்கும்போது, பாம்பே மேயர் அவரை விருந்துக்கு அழைத்தார். அந்த விருந்து உபசரிப்பில் பல அரசாங்க அதிகாரிகளும், நமது பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்களும் பங்குபெற்றிருந்தனர். விருந்து உண்ணும்போது பிரதமர் ஜவஹர்லால் நேரு அவர்கள் சகோதரன் பிரன்ஹாமைப் பார்த்து: "மிஸ்டர் பிரன்ஹாம், நீங்கள் சுகவீனமாக இருப்பதாக நான் நம்புகிறேன்" என்றார். சகோதரன் பிரன்ஹாம் ஓட்டலுக்குத் திரும்பும்போது, பிரதமர் நேருவின் தனிப்பட்ட டாக்டர் (personal physician) அவரைப் பரிசோதிப்பதற்காகக் காத்திருந்தார். டாக்டர் அவரைப் பரிசோதித்து, "உங்களுடைய இரத்த அழுத்தம் ஆபத்தான நிலையில் குறைந்திருக்கிறது. இந்த நிலையில், நீங்கள் எப்படி உயிரோடிருக்கிறீர்கள் என்று எனக்குப் புரியவில்லை. நீங்கள் எவ்வளவு சீக்கிரம் அமெரிக்கா போக முடியுமோ அவ்வளவு சீக்கிரம் போய், அங்குள்ள டாக்டரைப் பார்த்து உடம்பை நன்றாக கவனித்துக் கொள்ளுங்கள்" என்று உங்களுக்கு ஆலோசனைச் சொல்லுகிறேன் என்று கூறினார்.

அதற்கு அவர் எனக்கு இங்கு பாம்பேயில், இரண்டு கூட்டங்கள் உண்டு. அதன்பின்பு நான் நேராக வீட்டிற்குச் செல்வேன் என்று பதிலுரைத்தார்.

முதல் நாள் கூட்டம், மிகப் பெரிய எபிஸ்கோபல் சபையில் (Episcopal church) நடந்தது. சகோதரன் பிரன்ஹாம் உலகப் புகழ் பெற்ற சுவிசேஷகரானபடியால், சுமார் ஐந்து லட்சம் (5,00,000) பேர்கள் அந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தனர். கூட்டம் அதிகமாக இருந்தபடியால், சபையைச் சுற்றியிருந்த தெருக்களில் எல்லாம் ஒலி பெருக்கி பொருத்தப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்தில் சகோதரன் பிரன்ஹாம் இயேசுகிறிஸ்து இன்றும் ஜீவிக்கிறார், அவர் அன்றைக்குச் செய்த அதே அற்புதத்தை இன்றைக்கும் செய்ய வல்லவராயிருக்கிறார் என்று திட்டவட்டமாகப் பேசினார்.

ஜெபவரிசையில் வந்த ஒவ்வொருவரும் யார் என்றும், அவர்களுடைய பிரச்சினை என்னதென்றும் கூறி அவர்களுக்காக ஜெபம் செய்தார். அவர்களுடைய பெயரை அவர் உச்சரிக்கக் கூடாதபடியால், அவர்களின் பெயரின் எழுத்துக்களைச் சொன்னார். அவர் சொன்ன அனைத்தும் முற்றிலும் உண்மையாயிருந்தது. திரளான வியாதியஸ்தர்கள் சுகமானார்கள். அநேக அற்புதங்கள் நடந்தது. அடுத்த நாள் இந்தியாவிலுள்ள 16 மதங்களைச் சார்ந்த, அதின் மதத் தலைவர்கள் சகோதரன் பிரன்ஹாமைச் சந்தித்தனர். ஒரு ஜெயின் ஆலயத்திற்கு அவரை அழைத்துச் சென்று அங்கு தங்கள் தெய்வங்களைக் குறித்துப் புகழ்ச்சியாகப் பேசினர். அவர்கள் இயேசுகிறிஸ்துவைக் குறித்தும், கிறிஸ்தவ மார்க்கத்தைக் குறித்தும் பல கேள்விகளை அவரிடம் கேட்டனர். சகோதரன் பிரன்ஹாம் வேதத்தின்படி அவர்களுக்குச் சரியான பதிலைக் கொடுத்தார். பின்பு சகோதரன் பிரன்ஹாம் அவர்களைப் பார்த்து: "கிறிஸ்தவ மிஷனரிகள் (Christian Missionaries) இயேசுகிறிஸ்துவை உங்களுக்கு பைபிள் உபதேசங்கள் அடங்கிய கைப்பிரதிகள், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள் மற்றும் அனாதை ஆசிரமங்கள் மூலமாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அவையெல்லாவற்றையும் நான் ஆதரிக்கிறேன். ஆனால் இன்னும் உங்களுக்கு, இயேசுகிறிஸ்து பரிபூரணமாக வெளிப்படுத்தப்படவில்லை. இன்று இரவில் நடக்கும் என்னுடைய கூட்டத்திற்கு நீங்கள் வருவீர்களென்றால், இயேசுகிறிஸ்துவை, அவருடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையில் (Supernatural Power) காணலாம்" என்று சொன்னார். ஆச்சரியப்படும் வண்ணமாக, அவர்கள் அனைவரும் கூட்டத்திற்கு வருவதாகச் சம்மதம் தெரிவித்தனர்.

அன்று மாலை நேரக் கூட்டத்திற்கு, பிரசங்க பீடத்திற்கு முன் நாலு வரிசை போலீஸ் பாதுகாப்புப் போடப்பட்டிருந்தது. காலையில் ஜெயின் ஆலயத்தில் சந்தித்த, அனைத்து மதத் தலைவர்களும் முதல் வரிசையில் அமர்ந்திருந்தனர். சகோதரன் பிரன்ஹாம் இயேசுகிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலைக் குறித்துத் தெளிவாகப் பிரசங்கம் பண்ணினார். ஜெப வரிசையில் வந்த வியாதிக்காரர்களுக்கு ஜெபம் செய்யும்போது அனைவரும் சுகம் பெற்றனர். அப்பொழுது ஒரு குருடன் ஜெபத்திற்கு வந்தான். அவனுடைய கண்கள் முற்றிலும் வெள்ளையாக இருந்தது. அப்பொழுது சகோதரன் பிரன்ஹாம் அவன் சுகம் பெறுவதை ஏற்கனவே தரிசனத்தில் (Vision) கண்டிருக்கிறார். அவர் கண்ட தரிசனம் ஒவ்வொன்றும் பிழையின்றி நிறைவேறி வந்தன. இதுவே தீர்க்கதரிசியின் அச்சமற்ற நம்பிக்கைக்குக் காரணம். அந்தக் குருடன் யாரென்றும், அவன் எங்கு வசிக்கிறான் என்றும், சூரியனை அவன் தெய்வமாக ஆராதிப்பதால், அவன் அதையே உற்றுநோக்கிக் கொண்டிருந்ததின் விளைவாகக் குருடனானான் என்றும் தரிசனத்தில் கண்டார். அங்கிருந்த அஞ்ஞான பூசாரிகள் ஒவ்வொருவரிடமும் அவர்: "உங்கள் தெய்வம் உண்மையான தேவனானால், இங்கு வந்து இம் மனிதனின் கண்களைத் திறவுங்கள் பார்க்கலாம். அப்பொழுது நாங்கள் சாஷ்டாங்கமாக விழுந்து உங்கள் தெய்வத்தைப் பணிந்துகொள்வோம்" என்று சவால் விடுத்தார். ஆனால் ஒருவரும் முன் வரவில்லை. அவர் தொடர்ந்து, என் தேவனாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து உண்மையான தேவனாயிருந்து, இம்மனிதனின் கண்களைத் திறந்தாரானால், வல்லமையற்ற உங்கள் தெய்வங்களைப் புறக்கணித்து இயேசுவை உங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்வீர்களா? என்று வினவினார். அவர்கள் இணங்கினார்கள். தீர்க்கதரிசி ஜெபித்தபோது அவன் கண்கள் திறக்கப்பட்டது. உடனே ஜனங்கள் மத்தியில் பெரிய எழுச்சி ஏற்பட்டு, சுகம் பெறுவதற்காக சகோதரன் பிரன்ஹாமைத் தொடவேண்டுமென்று எண்ணி, அந்த ஜனக்கூட்டம் தள்ளிக் கொண்டு முன்வந்தது. இவ்விதமாக கர்த்தர், தம்முடைய தீர்க்கதரிசி மூலமாக அற்புதங்களைச் செய்து இந்தியாவில் தமது நாமத்தை மகிமைப்படுத்தினார். அவர் தேவனால் அனுப்பப்பட்ட கடைசி கால தூதன் என்றும், அவருடைய செய்தி தேவனால் அருளப்பட்டது என்பதும் உறுதியாக்கப்படுகிறது.

**5) சிக்காகோவில் போதகர்கள் மத்தியில் கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசியை உறுதிப்படுத்துதல்**: அமெரிக்காவிலுள்ள சிக்காகோ என்ற பட்டணத்தில் சுமார் நானூறு போதகர்கள், சகோதரன் பிரன்ஹாமின் உபதேசங்களைக் குறித்து, கேள்வி கேட்டு, அவரைக் கண்ணியில் சிக்கவைத்து, அவரை அவமானப்படுத்த வேண்டும் என்று எண்ணினர். ஆனால் அவர்களே கண்ணியில் சிக்கி வெட்கப்படும்படி கர்த்தர் கிரியை செய்தார். இந்த சம்பவத்தைச் சகோதரன் பிரன்ஹாமே விளக்கிச் சொல்லுவதைப் படியுங்கள். "சிக்காகோவில் என்ன நடந்ததென்று பாருங்கள். மூன்று போதகர்கள் அங்கு உட்கார்ந்து கொண்டிருந்தனர். அவர்கள் என்ன செய்யப் போகிறார்களென்று கர்த்தர் அன்றிரவே முன்னறிவித்தார். அவர்கள் எனக்குக் கண்ணி வைத்திருந்தனர். நான் அங்கு சென்றேன். நான் சகோ. கார்ல்ஸனிடம், நீங்கள் இந்த கூட்டத்தை இந்த ஓட்டலில் நடத்தப் போவதில்லை. நீங்கள் வேறொரு இடத்திற்கு அதை அமைக்க வேண்டியிருக்கும். அது பச்சை நிறம் கொண்ட அறையாயிருக்கும்.

அவர்கள் எனக்கு ஒரு கண்ணி வைத்திருக்கின்றனர். இல்லையா, சகோ. கார்ல்ஸன்? என்றேன். அவர் வெட்கி தலை குனிந்து கொண்டார்.

நான், அவர்கள் எனக்கு ஒரு கண்ணி வைத்திருக்கின்றனர்,

சகோ. கார்ல்ஸனே, நீங்களும் டாமி ஹிக்ஸ்..ம் அதை என்னிடம் கூற ஏன் பயப்பட்டீர்கள்? என்றேன். அவர்கள் இருவரும் வெட்கி தலை குனிந்து கொண்டனர். நான் "டாமி, ஏன் பேசமாட்டேன் என்கிறீர்" என்றேன்.

அவர், என்னால் பேசமுடியவில்லை என்றார். நான், நீங்கள் எனக்கு உதவி செய்யப்போவதாகக் கூறினதாக நினைத்தேன்.

கடந்த இரவு கர்த்தர் என்னிடம், "இன்று நீ அங்குச் செல்லும்போது, அந்தக் கட்டிடம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பதைக் காண்பாய். நீ வேறொரு கட்டிடத்தில் இருப்பாய். டாக்டர் மீட் இந்தப் பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருப்பார். பாடல்களைப் பாடும் அந்த கறுப்பு மனிதனும் அவருடைய மனைவியும் இங்கு உட்கார்ந்து கொண்டிருப்பார்கள் என்று கூறினார். அவர் புத்தமத தலைவர் ஒருவர் இங்கு உட்கார்ந்து கொண்டிருப்பார் என்றார்'' என்றேன். நான் அவர்களிடம், "இது உண்மையாவென்று பாருங்கள் நான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் கொடுக்கப்படும் ஞானஸ்நானத்தைக் குறித்துப் பிரசங்கிப்பதால் அவர்கள் எனக்கு விரோதமாய் இருக்கின்றனர். நான் சர்ப்பத்தின் வித்தைப் பிரசங்கிப்பதால், அந்நியபாஷையில் பேசும் ஒவ்வொரு மனிதனும் பரிசுத்தஆவியைப் பெற்றிருக்கிறான் என்பதற்கு எதிரான அத்தாட்சியை நான் காண்பிப்பதால், மற்றும் அநேக காரியங்களின் பேரில் அவர்கள் எனக்கு விரோதமாயிருக்கின்றனர். நீங்கள் அங்கு வந்து, தேவன் செய்வதைப் பாருங்கள்" என்றேன்.

அவர்கள் அங்குச் சென்றபோது, அதற்கு இரண்டு மணி நேரத்துக்கு முன்பு, அல்லது இன்னும் சற்று முன்பு, அந்தப் பிற்பகலில் ஒட்டல் நிர்வாகிகள் சகோ. கார்ல்ஸனை வரும்படியாகக் கூறினர். வாடகைக்கான முன்தொகையை வாங்கினவர் அவரிடம், இதை நாங்கள் ரத்து செய்ய வேண்டும். ஏனெனில், எங்கள் மேலாளர் இந்த இடத்தை இன்று காலை ஒரு இசைக் குழுவுக்கு அளிப்பதாக வாக்களித்துவிட்டார் என்றார்.

ஆகவே அவர்கள் அந்த டவுன் அண்ட் கண்ட்ரீ (Town and Country) உணவகத்திற்குச் சென்றார்கள். அக்காலையில் அவர்கள் உள்ளே சென்று நின்ற போது, சகோதரன் கார்ல்சன்: "ஒரு காரியம் உண்டு. சகோதரராகிய நீங்கள் சகோதரன் பிரன்ஹாமுடன் ஒத்துப்போகாமல் இருக்கலாம். ஆனால் ஒன்று, தான் விசுவாசிப்பதைக் கூறுவதற்கு அவருக்குப் பயமே கிடையாது" என்றார். மேலும், அவர், "இவை இப்படியாக நடக்கும் என்று அவர் கூறின விதமாகவே சரியாக அப்படியே தான் இருக்கின்றது. இப்பொழுது இதோ, இவரே இருக்கின்றார். இவரே பேசட்டும்" என்றார். அப்பொழுது சகோதரன் பிரன்ஹாம் ***"நான் அந்தப் பரமதரிசனத்துக்குக் கீழ்ப்படியாதவனாயிருக்கவில்லை"*** என்று பவுல் கூறின அந்த வேத வசனத்தை எடுத்துக் கொண்டேன். நான் இங்குள்ள முன்னூறு பேருக்கும் அதிகமானவர்கள் உங்களை டாக்டர் இன்னார் இன்னார் என்று அறிமுகப்படுத்திக் கொண்டீர்கள். எனக்கு ஆரம்பப் பள்ளி கல்வியும்கூட கிடையாது. ஆயினும் இங்குள்ள ஒவ்வொருவருக்கும் நான் சவால் விடுகிறேன். உங்கள் வேதாகமத்துடன் இங்கு வந்து என் பக்கத்தில் நின்று கொண்டு, நான் கூறினவைகளில் ஒன்றையாகிலும் மறுதலியுங்கள் பார்க்கலாம் என்றேன்.

"நீங்கள் அதைக் கேட்க விரும்பினால், அது ஒலி நாடாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் கண்டதிலேயே அது மிகவும் அமைதலான கூட்டமாகி விட்டது. நான், என்ன நேர்ந்தது? என்று கேட்டேன். நான், உங்களால் இந்த உபதேசங்களை ஆதரிக்க முடியாமற் போனால் விலகி நில்லுங்கள் என்றேன். அவர்கள் வெளியே இதைக் குறித்து அதிகச் சத்தமிடுகின்றனர். ஆனால் இந்தப் பிரச்சினையை முகமுகமாய் சந்திக்க வேண்டியத் தருணம் வரும்போது, அது வித்தியாசமாகி விடுகின்றது. அது உண்மை".

“அவர்கள் சென்ற பின்பு, டாமி ஹிக்ஸ், இதன் முன்னூறு ஒலி நாடாக்களை வாங்கி, எனக்குத் தெரிந்த, பாவனை செய்கின்ற திரித்துவ பிரசங்கி போதகர் ஒவ்வொரு போதகருக்கும் அனுப்ப விரும்புகிறேன் என்றார். அங்கு வந்திருந்த மக்கள் என்னுடன் கைகுலுக்கி, நாங்கள் உம்முடைய கூடாரத்திற்கு வந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வோம் என்றனர்.

அவர்கள் எங்கே? சாக்குபோக்குகள். என்னால் முடியாது. என் ஸ்தாபனம் என்னை அனுமதிக்காது. நான் ஒரு மனைவியைக் கொண்டேன். நான் ஏர்மாடு வாங்கினேன். நான் நிலம் வாங்கியிருக்கிறேன். அதைப் போய் பார்க்கவேண்டும், போன்றவை” என்று இக்கூட்டத்தின் சம்பவத்தை விளக்கிக் கூறியுள்ளார்.

**௬) ஏழு தரிசன்ங்கள்**: 1933ம் வருஷம் ஜீன் மாதம் ஒரு ஞாயிற்றுக்கிழமை காலையில் தேவனுடைய தீர்க்கதரிசியாகிய பிரன்ஹாம், தொடர்ச்சியாக ஏழு தரிசனங்களைக் கண்டார். கர்த்தராகிய இயேசுகிறிஸ்து, அவருடைய வருகை சமீபமாயிருக்கிறதென்றும், அவர் வருமுன் இந்த ஏழு தரிசனங்களும் நிகழ்ந்தேற வேண்டுமென்று தீர்க்கதரிசிக்கு அறிவித்தார். அவர் அவைகளையெல்லாம் எழுதிக் கொண்டு, அன்று காலையில் தேவனிடத்திலிருந்து கிடைக்கப்பெற்ற வெளிப்பாட்டை மக்களுக்கு எடுத்துரைத்தார்.

1) தீர்க்கதரிசி முதலாவதாகக் கண்ட தரிசனம் **முஸோலினி** (Mussolini) என்பவன் எத்தியோப்பியாவின் மேல் படையெடுத்து அதை எளிதில் கைப்பற்றுவான் என்பதாம். தீர்க்கதரிசி முதலில் அதை அறிவித்தபோது, அநேக எதிர்ப்புகளுக்கு அது ஆளானது. ஆனால் அவர் கண்டவிதமாகவே அது சம்பவித்தது. முஸோலினி தன்னுடைய நவீன யுத்த ஆயுதங்களை உபயோகித்து அந்நாட்டைக் கைப்பற்றினான். அந்நாட்டின் சுதேசிகளுக்கு அவனை எதிர்க்கவும் கூடத் தருணமில்லாதபடியாயிற்று. முடிவில் முஸோலினி தன்னுடைய சொந்த ஜனங்களையே எதிர்த்து, பயங்கரமான முடிவை அடைவானென்றும் அத்தரிசனம் அவருக்கு வெளிப்படுத்தினது. அதுவும் பிழையில்லாமல் நிகழ்ந்தேறினது.

2) தீர்க்கதரிசி கண்ட அடுத்த தரிசனம், **அடால்ஃப் ஹிட்லர்** (Adolf Hitler) என்னும் ஆஸ்திரியா தேசத்தான், ஜெர்மனி நாட்டில் சர்வாதிகாரியாய்த் தோன்றி உலக மகா யுத்தம் நடைபெறக் காரணமாயிருப்பான் என்று முன்கூட்டி அறிவித்தது. சீக்ஃபிரீட் எல்லையையும் (Sigfried Lane) அதை மேற்கொள்ள அமெரிக்க சைனியங்கள் படும் பாடுகளையும் அது தீர்க்கதரிசிக்குத் தெளிவாகக் காண்பித்தது. அன்றியும் ஹிட்லர் மர்மமான முடிவை அடைவான் என்பதையும் அது அவருக்குக் காண்பித்தது. இந்த தரிசனமும் பிழையில்லாமல் நிறைவேறினது.

3) தீர்க்கதரிசி கண்ட மூன்றாவது தரிசனம், உலக அரசியலோடு சம்பந்தப்பட்டது. **பாஸீஸம்** (Facism), **நாஸீஸம்** (Nascism), **கம்யூனிஸம்** (Communism), என்னும் மூன்று பெரிய இயக்கங்கள் இவ்வுலகத்தில் தோன்றுமென்றும், முடிவில் பாஸீஸமும் நாஸீஸமும் கம்யூனீஸத்தோடு கலந்துவிடும் என்றும் அந்த தரிசனம் அறிவித்தது. அப்பொழுது ருஷியாவை ஜாக்கிரதையாய் கவனிக்கவும், வடக்கு பாகத்தின் ராஜாவாகிய அவனைக் கவனிக்கவும் (Watch Russia, Watch Russia, the king of the north) என்ற சத்தத்தை அவர் கேட்டார். இந்த தரிசனமும் நிறைவேறிவிட்டது. முசோலினியின் பாஸீஸமும் (Mussolini’s Fascism), ஹிட்லரின் நாஸீஸமும் (Hitler’s Nascism) மறைந்து கம்யூனிஸமே நிலைத்திருக்கிறது. அந்த சத்தம் சோவியத் யூனியனைக் கவனித்துப்பார் என்று சொல்லாமல் ருஷியாவைக் கவனித்துப்

பார் என்று சொன்னது. இப்பொழுது ருஷியா U.S.S.R. என்று அழைக்கப்படாமல் Russia (ருஷியா) என்றழைக்கப்படுகிறது.

4) நான்காவது தரிசனம், இரண்டாவது உலக மகாயுத்தத்திற்குப் பிறகு, **விஞ்ஞானத்தில்** ஏற்படவிருந்த முன்னேற்றத்தைக் காண்பித்தது. பிளாஸ்டிக் என்னும் சாதனத்தால் உண்டாக்கப்பட்ட ஒரு மோட்டார் வண்டி, யாரும் ஓட்டாமலேயே, தூரத்திலிருந்து இயக்கப்பட்டு (Remote control) அழகான ரஸ்தாக்களின் வழியாய்ச் செல்வதை அவர் அத்தரிசனத்தில் கண்டார். அந்த வண்டியில் இருந்தவர்கள் ஏதோ ஒரு விளையாட்டில் குதூகலமாக ஈடுபட்டிருந்தனர். இவ்வகையான கார் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்டாயிற்று. அதற்கேற்ற சாலை அமைப்பு இருந்தால் அவைகளை இயக்கலாம். முட்டை வடிவத்தில் கார்கள் இருக்கும் என்பதும் நிறைவேறிவிட்டது.

5) ஐந்தாவது தரிசனம், நம்முடைய காலத்திலுண்டாகும் **நல்லொழுக்கமின்மையைக்** குறித்தது. பெண்களுக்கு ஓட்டுரிமை அளிக்கப்பட்டதனால், பெண்கள் மிஞ்சிவிட்டனர் என்பதைத் தேவன் அவருக்கு வெளிப்படுத்தினார். மனிதனின் அதிகாரத்திற்கு அவர்கள் இனியும் கீழ்ப்பட்டிருக்காமல், சம உரிமை கோரினர் என்பதின்அறிகுறியாக, அவர்கள் தங்கள் கூந்தல்களைக் கத்தரித்துக் கொண்டனர். மேலும் அவர்கள் ஆண்களின் உடைகளைத் தரித்து, கடைசியில் நிர்வாணிகளாகக் காணப்பட்டனர். அந்தத் தரிசனத்தின் கடைசி பாகத்தில், அத்தி இலையின் வடிவில் அமைந்த ஒரு சிறு துணியை மாத்திரம் இடுப்பின் முன்னால் உடுத்தி, மற்றபடி முழுவதும் நிர்வாணமாயிருந்த ஒரு பெண்ணைக் கண்டார். முழு உலகமும் தாறுமாறான நிலையையடைந்து நல்லொழுக்கத்தைக் கைவிடும் என்பது அவருக்கு உணர்த்தப்பட்டது. இந்த தரிசனமும் அழகிப் போட்டி (Beauty Contest) மற்றும் பலவிதமான சினிமா காட்சிகள் மூலம் நிறைவேறி வருகிறது.

6) தீர்க்கதரிசி கண்ட ஆறாம் தரிசனத்தில், மிகவும் அழகுள்ள ஒரு பெண் அமெரிக்காவில் தோன்றினாள். அவள் அழகிற் சிறந்திருந்தாலும், மிகவும் கொடூரமான குணம் படைத்தவளாயிருந்தாள். ரோமன் கத்தோலிக்க சபை அமெரிக்காவில் வளர்ந்து ஆதிக்கம் பெறுவதை இது குறிக்கிறது என்று அவர் நம்புவதாகவும், இல்லையேல், அமெரிக்காவின் ஸ்திரீகள் ஓட்டுரிமை பெற்றதன் காரணமாக, ஒரு ஸ்திரீ அமெரிக்காவில் அரசியல் வல்லமை பெறுவதையும் இது குறிக்கலாம் என்றும் விளக்கமளித்தார்.

7) அவர் கடைசியாகக் கண்ட ஏழாம் தரிசனத்தில், "மிகப்பெரிய சத்தத்தைக் கேட்டேன். நான் திரும்பிப் பார்த்தபோது, அமெரிக்கா முழுவதும் பாழடைந்து, இடிந்து புகைக்காடாய் இருக்கக் கண்டேன்" என்று சொல்லியிருக்கிறார்.

கடந்த ஐம்பது வருஷங்களாக, இவ்வுலகத்தில் வேகமாக நேர்ந்த மாற்றங்களையும், இந்த ஏழு தரிசனங்களையும் ஆதாரமாகக் கொண்டு பார்க்கும்போது, நாம் கடைசி காலத்தில் இருக்கிறோம் என்பது தெளிவாகிறது. தீர்க்கதரிசி கண்ட ஏழு தரிசனங்களில் முதல் ஐந்து தரிசனங்கள் பிழையில்லாமல், அவர் கண்ட விதமாகவே நிறைவேறியிருக்கிறது. மற்ற இரண்டு தரிசனங்களும் விரைவில் நிறைவேறும் என்பது உறுதி. ஆகவே, தீர்க்கதரிசி பிரன்ஹாம் தேவனால் அனுப்பப்பட்ட கடைசி காலச் செய்தியாளர் என்றும், அவருடைய செய்தி தான் கடைசி காலத்தில் வாழுகின்ற மக்களுக்கு மறுபிறப்பைக் கொண்டு வரும் என்பதும் மேற் சொல்லிய சம்பவங்களால் உறுதியாக்கப்படுகிறது.

## XI. கர்த்தருடைய வருகையும், மறுபிறப்பும் (Coming of the Lord and the New Birth)

"*ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள். பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்*" (1 தெச. 4:16,17). 1963 பிப்ரவரி மாதம் 28ம் தேதி, பலமுள்ள தூதனாகிய கிறிஸ்து மேகஸ்தம்பத்தோடு இறங்கிவந்தார் (வெளி. 10:1). அவர் ஏழு முத்திரைகளைத் திறந்து, அதை ஏழாம் தூதனுக்கு வெளிப்படுத்தினார். அந்தத் தூதன், அதைச் சபைக்கு வெளிப்படுத்தியிருக்கிறார் (வெளி. 22:16). வெளிப்படுத்தல் ஐந்தாம் அதிகாரத்தில் ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த அந்த மீட்பின் புஸ்தகம் (வெளி. 5:1), பத்தாம் அதிகாரத்தில் திறக்கப்பட்ட புஸ்தகமாயிருக்கிறது (வெளி. 10:2). ஆகவே நாம் இப்பொழுது இரண்டாம் வருகையின் காலத்தில் இருக்கிறோம். நாம் ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் (வெளி. 10:6). கிறிஸ்து, வார்த்தையின் ரூபத்தில் நம்மோடுகூட இருக்கிறார். ஏழு முத்திரைகள் திறக்கப்படுதலானது, கிறிஸ்துவை, பூமிக்கு வார்த்தையின் ரூபத்தில் கொண்டு வந்திருக்கிறது. **(The opening of Seven Seals brought Christ back to earth in Word Form).** வார்த்தையில் மறைந்திருந்த "கிறிஸ்து" இப்பொழுது திரைநீக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறார் (Unveiling of Christ sealed in the Word).

**ஆரவாரம், சத்தம், எக்காளம்** இவை அனைத்தும் இந்த நேரத்துக்குரிய செய்தியைக் குறிக்கும் ஆவிக்குரிய வார்த்தைகள். கர்த்தருடைய இரண்டாம் வருகை என்பது ஆரவாரம், சத்தம், எக்காளம் என்ற மூன்று சம்பவங்கள், ஒன்றன்பின் ஒன்றாக, தொடர்ச்சியாக நடக்கும் நிகழ்ச்சியாயிருக்கிறது (Rapture is a process of three events). கர்த்தருடைய வருகை சரீர மறுரூபமாக்கப்படுதலில் முற்றுப் பெறும். சரீரம் மறுரூபமாக்கப்படுதல் கண்ணிமைக்கும் நேரத்தில் நடக்கும் நிகழ்ச்சியாயிருக்கிறது (The body change is in a twinkling of an eye). அதைக் குறித்துக் கீழே விளக்கமாகக் காணலாம்.

**ஆரவாரம் (Shout)** என்பது சகல ஜனங்களிலிருந்தும், ஜாதிகளிலிருந்தும், பாஷைக்காரரிலிருந்தும், கோத்திரங்களிலிருந்தும் ஒரு கூட்டமான மக்களை, இக்காலத்தின் செய்தியில் கொண்டுவருகிறது. இஸ்ரவேல் ஜனங்கள் எரிகோ கோட்டையை ஏழு முறை சுற்றி வந்த பின்பு ஆர்ப்பரித்தார்கள். அப்பொழுது எரிகோ கோட்டை விழுந்தது. தேவனால் முன்குறிக்கப்பட்ட **ராகாப்** வெளியே வந்தாள். அவள் வீட்டிலிருந்த அனைவரும் வெளியே வந்தனர் (யோசுவா. 6:16,22).

**பிரதான தூதனுடைய சத்தம் (Voice)** என்பது பலமுள்ள தூதனாகிய கிறிஸ்துவின் சத்தம் (Voice of the Mighty Angel). அந்தச் சத்தம் உயிர்ப்பிக்கும் வல்லமையுடையது. "லாசருவே வெளியே வா" என்று மகா சத்தமாய் கூப்பிட்டபோது, மரித்து நாலு நாட்களான அவன் உயிரோடு வந்தான் (யோவா 11:42,43). இயேசு மகா சத்தமாய்க் கூப்பிட்டு ஜீவனை விட்டபோது, மரித்த பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்களுடைய சரீரங்கள் உயிர் அடைந்தது (மத். 27:50, 52,53). அன்றைக்கு அவருடைய

சத்தம் உயிர்ப்பித்ததுபோல, இன்றைக்கு அவருடைய வார்த்தையின் சத்தம் அக்கிரமத்திலும், பாவத்திலும் மரித்துக்கிடந்த, அவருடைய மணவாட்டிக்கு ஜீவனைக் கொண்டுவந்து, அவர்களை வார்த்தையில் பூரணமடையச் செய்கிறது.

**எக்காளம் (Trumpet)** என்பது மரித்துப்போன சபைக் கால பரிசுத்தவான்களுக்கு மகிமையான உயிர்த்தெழுதலையும், பின்பு பூமியில் உயிரோடிருக்கும் பூரணமடைந்த பரிசுத்தவான்களுக்குச் சரீர மறுரூபமாக்கப்படுதலையும் கொண்டுவந்து, கண்ணிமைப் பொழுதில் ஆகாயத்தில் கிறிஸ்துவைச் சந்திக்கக் கொண்டுச் செல்லுகிறது. ***"இதோ ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன்; நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை; ஆகிலும் கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே, நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம். எக்காளம் தொனிக்கும் அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள்; நாமும் மறுரூபமாக்கப்படுவோம்"*** (1 கொரி. 15:51,52). ஆகவே கர்த்தருடைய வருகை ஏற்கனவே ஆரம்பித்துவிட்டது. ஆனால் அது இன்னும் முடிவடையவில்லை. நமது சரீரம் மறுரூபமாக்கப்படும்போது அது முடிவடையும். சரீரம் மறுரூபமாக்கப்படுதல் இமைப்பொழுதிலே நடந்துவிடும் என்று மேற்கூறிய வசனம் திட்டவட்டமாக உரைக்கிறது. அந்த நேரத்திற்காக நாம் காத்திருக்கிறோம்.

இஸ்ரவேல் ஜனங்களுக்கு ஐம்பது வருடங்களுக்கு ஒரு முறை **யூபிலி** வருஷம் வருகிறது. யூபிலி (Jubile) என்றால் விடுதலை என்று அர்த்தம். அப்பொழுது ஆசாரியர்கள் எக்காளங்களை ஊதுவார்கள். அந்த எக்காளச் சத்தம் தொனிக்கும்போது அடிமைகள் யாவரும் விடுதலைப்பெற்றுத் தங்கள் காணியாட்சிக்குத் திரும்பிப்போவார்கள். அடைமானம் வைக்கப்பட்ட நிலம், வீடு போன்றவைகள் விடுதலைப்பெற்று மூலச் சொந்தக்காரர்களுக்கு உரிமையாகிவிடும் (லேவி 25:10). மேலும் வனாந்திரத்தில் இஸ்ரவேல் ஜனங்களுடைய பாளயங்களைப் புறப்படப்பண்ண, ஆசாரியர்கள் எக்காளங்களை ஊதினார்கள் (எண் 10:1–8). அதுபோல ஏழாம் தூதனுடைய செய்தி என்ற எக்காளம் முடிவாக மணவாட்டிக்கு, பாவம் நிறைந்த உலகத்திலிருந்து விடுதலையையும், அழிந்துபோகிற மாம்ச சரீரத்திலிருந்து (Mortal Body) விடுதலையையும் கொண்டு வரும். அவருடைய சபையாகிய மணவாட்டி அழிவில்லாத **மகிமையின் சரீரத்தைப்** (Glorified Body) பெற்று ஆகாயத்தில் கிறிஸ்துவைச் சந்திப்பாள். புத்தியில்லாத கன்னிகைகள் பரிசுத்தஆவியைப் பெறாதபடியால் கைவிடப்பட்டு உபத்திரவக் காலத்தில் பங்கடைவார்கள். புத்தியில்லாத கன்னிகைகளுக்கும், புத்தியுள்ள கன்னிகைகளுக்குமுள்ள வித்தியாசத்தை அட்டவணை 4ல் (Table 4) காணலாம்.

**Table 4:**

| புத்தியில்லாத கன்னிகைகளுக்கும் புத்தியுள்ள கன்னிகைகளுக்கும் உள்ள வித்தியாசம் (Difference between the Wise and the Foolish Virgins) | | |
|---|---|---|
| **வ.எண்** | **புத்தியில்லாத கன்னிகைகள்** | **புத்தியுள்ள கன்னிகைகள்** |
| 1 | நோவா இவர்களுக்கு ஒரு அடையாளமாயிருக்கிறான். (உபத்திரவத்தின் வழியாக கடந்துபோவது) | ஏனோக்கு இவர்களுக்கு அடையாளமாயிருக்கிறான். (ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுவது) |

| | | |
|---|---|---|
| 2 | எண்ணெய் இல்லை (பரிசுத்தஆவி இல்லை) | எண்ணெய் உடையவர்களாயிருக்கிறார்கள் (பரிசுத்தஆவியினால் அபிஷேகம் பண்ணப்பட்டவர்கள்) |
| 3 | நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல் மட்டுமே | நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாக்கப்படுதல், பரிசுத்தஆவியினால் அபிஷேகம்பண்ணப்படுதல் |
| 4 | கைவிடப்பட்டு, உபத்திரவ காலத்தில் பங்கடைகிறார்கள் | எடுத்துக்கொள்ளப்படுதலில் போய்விடுகிறார்கள் |
| 5 | வரங்களை உடையவர்கள் | வரங்களைக் கொடுக்கிறவரை உடையவர்கள் |
| 6 | வெதுவெதுப்பானவர்கள், தாமதம்பண்ணுகிறவர்கள் | தேவனுக்காக ஆவியில் அனலாயிருக்கிறவர்கள் |
| 7 | இயந்திர சாதனத்தை (Mechanics) மாத்திரம் உடையவர்கள் | இயந்திர சாதனத்தையும், சக்தியையும் உடையவர்கள் (Both Mechanics and Dynamics) |
| 8 | அழைக்கப்பட்டவர்களாயிருக்கிறார்கள் | அழைக்கப்பட்டவர்களும், தெரிந்து கொள்ளப்பட்டவர்களுமாயிருக்கிறார்கள் |
| 9 | சபை என்று அழைக்கப்படுகிறார்கள் | மணவாட்டி என்று அழைக்கப்படுகிறார்கள் |
| 10 | பரிசுத்த நகரத்திற்கு புறம்பே வசிப்பார்கள் | பரிசுத்த நகரத்திற்கு உள்ளே வசிப்பார்கள். |

## XII. மறுபிறப்பின் மூன்று படிகள் (Three Stages of New Birth):

தேவன் உலகத்தைச் சுமார் நாலாயிரம் வருடங்களுக்கு முன் நோவா காலத்தில், தண்ணீரினால் சுத்திகரித்தார். அது விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதலைக் (**Justification by Faith**) குறிக்கும் (ரோமர் 5:1). அதன்பின்பு சுமார் இரண்டாயிரம் வருடங்களுக்கு முன் இயேசுவின் இரத்தம் இந்தப் பூமியில் சிந்தப்பட்டது. அது இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்படுதலைக் (**Sanctification by Blood**) குறிக்கும் (எபி 9:22); 1 யோவான் 1:7). இப்பொழுது மறுபடியும் இரண்டாயிரம் வருடம் முடிவடைகிறது. இனி, தேவன் இந்தப்பூமியை, அக்கினியால் சுட்டெரித்துப் புதுப்பிப்பார். இது பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைக் (**Baptism of the Holy Ghost**) குறிக்கும். பின்பு இந்த உலகத்தில் தம்முடைய பரிசுத்தவான்களோடு வந்து வாசம்பண்ணி, ஆயிரம் வருடம் ஆளுகைச் செய்வார். தேவன் இந்த உலகத்தை எப்படி மூன்று படிகளில் கொண்டு வந்து மீட்டுக் கொள்ளுகிறாரோ அதேபோலவே, ஒரு தனிப்பட்ட மனிதனையும் விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல், இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்படுதல், பரிசுத்தஆவியினால் நிரப்பப்படுதல் என்ற மூன்று படிகளில் மீட்டுக் கொள்ளுகிறார் **(Table 5)**

***"(பரலோகத்தில் சாட்சியிடுகிறவர்கள் மூவர், பிதா, வார்த்தை, பரிசுத்தஆவி என்பவர்களே. இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள். பூலோகத்திலே) சாட்சியிடுகிறவைகள் மூன்று. ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே. இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது"*** (1 யோவா 5:7,8). இந்த வசனங்கள் திரித்துவத்தை ஆதரிக்கும் வசனமல்ல, மாறாக ஒரே தேவனைக் குறித்த வெளிப்பாட்டையும், மறுபிறப்பின் இரகசியத்தை வெளிப்படுத்துகிறதாயுமிருக்கிறது. பிதாவை உடையவன் குமாரனையும், பரிசுத்தஆவியையும் உடையவனாயிருக்கிறான். அல்லது குமாரனையுடையவன் பிதாவையும் பரிசுத்தஆவியையும் உடையவனாயிருக்கிறான். அல்லது ஒருவன் பரிசுத்தஆவியையுடையவனானால்

அவன் பிதாவையும், குமாரனையும் உடையவனாயிருக்கிறான். ஏனெனில் இம்மூன்றும் ஒரே நபரையே குறிக்கிறது. இவைகள் ஒரே தேவனின் மூன்று ஸ்தானங்கள் அல்லது மூன்று பட்டப்பெயர்கள்.

**Table 5:**

| **மீட்பின் மூன்று படிகள் (Redemption in Three Stages)** | | | |
|---|---|---|---|
| **Natural Birth** (மாம்ச பிறப்பு) | **Water** (ஜலம்) | **Blood** (இரத்தம்) | **Spirit** (ஆவி) |
| **The New Birth** (மறுப்பிறப்பு) | **Justification** (நீதிமானாக்கப்படுதல்) | **Sanctification** (பரிசுத்தமாக்கப்படுதல்) | **Holy Spirit Baptism** (பரிசுத்தாவியின் அபிஷேகம்) |
| **The Earth** (உலகம்) | **Noah** (நோவா) | **Jesus** (இயேசு) | **Armageddon** (அர்மகெதோன்) |

ஆனால் மறுபிறப்பு அப்படியல்ல. ***"பூலோகத்திலே சாட்சியிடுகிறவைகள் மூன்று. ஆவி, ஜலம், இரத்தம் என்பவைகளே, இம்மூன்றும் ஒருமைப்பட்டிருக்கிறது"*** (They agree in one) என்று வசனம் (1 யோவா 5:8) சொல்லுகிறது. சரீர பிறப்பு மூன்று படிகளையுடையதாயிருக்கிறதுபோல, ஆவிக்குரிய பிறப்பும் மூன்று படிகளையுடையதாயிருக்கிறது (Three Stages). ஒரு குழந்தை பிறக்கும்போது, முதலில் தண்ணீரும், பின்பு இரத்தமும் அதன் பின்பு ஜீவனும் வெளிப்படுகிறது. தண்ணீர், இரத்தம், ஜீவன் இம்மூன்றில் குழந்தைப் பிறப்பு முற்றுப்பெறுகிறது. இயேசுகிறிஸ்து மரிக்கும்போது ஜலம், இரத்தம், ஆவி இம்மூன்றும் அவர் சரீரத்திலிருந்து வெளிப்பட்டது. ஆகவே ஒருவன் கிறிஸ்துவினால் மறுபடியும் பிறப்பதென்பது, விசுவாசத்தினால் நீதிமானாக்கப்படுதல் (ஜலம்), இரத்தத்தினால் பரிசுத்தமாக்கப்படுதல் (இரத்தம்), பரிசுத்தஆவியினால் ஞானஸ்நானம் பண்ணப்படுதல் (ஆவி) என்னும் மூன்று படிகளில் முற்றுப் பெறுகிறது. இம்மூன்றும் மறுபடியும் பிறத்தலில் ஒருமைப்படுகிறது. இம்மூன்றும் தனித்தனிக் காரியங்கள். இம்மூன்று காரியங்கள் சேர்ந்தால் தான் மறுபிறப்பு முற்றுப் பெறும். அதெப்படியெனில் ஒருவன் தேவனையும் அவருடைய வார்த்தையையம் விசுவாசித்து நீதிமானாக்கப்படலாம் (Justification by Faith). ஆனால் அவனுடைய மறுபிறப்பு பூரணமாகவில்லை. பின்பு அவன் தன் பாவங்களையெல்லாம் அறிக்கை செய்து, இயேசுவின் இரத்தத்தால் பரிசுத்தமாக்கப்படலாம் (Sanctification by Blood). இன்னும் மறுபிறப்பு முற்றுப் பெறவில்லை. பின்பு தேவன் அவன் விசுவாசத்தை அங்கீகரித்து, அவனுக்குள் ஆவியின் ரூபமாக வந்து வாசம் செய்து, அவனைச் சகல சத்தியத்திற்குள்ளும் வழி நடத்தும்போது (Baptism by the Spirit) அவன் மறுபடியும் பிறந்திருக்கிறான் என்று உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

ஆகவே பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் பெறுவதுதான் மறுபடியும் பிறப்பதாயிருக்கிறது. ஆனால் நீதிமானாக்கப்படாமல், பரிசுத்தமாக்கப்படாமல் பரிசுத்தஆவியைப் பெறமுடியாது. பரிசுத்தஆவி தேவனுடைய ஜீவனாயிருக்கிறது. **யூதாஸ் காரியோத்து** இயேசுவை விசுவாசித்து அவரைப் பின்பற்றி ஊழியம் செய்தான். யூதாஸ்காரியோத்து மறுபிறப்பின் முதல் இரண்டு படிகளுக்கு வந்தான். ஆனால் அவன் பெந்தெகொஸ்தே நாளுக்குச் சென்று பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் பெறவில்லை. அவன் நீதிமானாக்கப்பட்டான் (யோ. 4:1–2). அவன் பரிசுத்தமாக்கப்பட்டான். ***உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும். உம்முடைய வசனமே சத்தியம்*** (யோ. 17:17). அற்புத அடையாளங்கள் கூட நடப்பித்தான். ஆனால் அவன் தன் எஜமானைக் காட்டிக் கொடுத்த துரோகியும் கள்ளப்

போதகனுமாயிருந்து தற்கொலை செய்து கொண்டான். இயேசு அவனைக் குறித்து ***"பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்துகொள்ளவில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான்"*** என்றார் (யோ. 6:70). ஆகவே அவன் மறுபடியும் பிறக்கவில்லை. அவன் மறுபிறப்பு முற்றுப்பெறவில்லை. **பேதுரு** பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்தஆவியைப் பெறும் வரைக்கும் அவன் மறுபிறப்பு முற்றுப் பெறவில்லை. இயேசு கல்வாரிக்குப் போகுமுன் பேதுருவைப் பார்த்து ***"நீ குணப்பட்டப் பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து" என்றார்*** (லூக்கா 22:32). ஆகவே பேதுரு பரிசுத்தஆவியினால் நிரப்பப்பட்டப் பின்புதான் மறுபடியும் பிறந்தான் அல்லது குணப்பட்டான் என்று சொல்லமுடியும்.

**அந்நியபாஷை அடையாளம் அல்ல**: பரிசுத்தஆவியின் அபிஷேகம் என்பது அந்நிய பாஷையைப் பேசுவதல்ல. அந்நியபாஷை கடைசியான ஆவியின் வரமாயிருக்கிறது (Least Gift of the Holy Spirit). ஆகவே அந்நியபாஷை அடையாளமல்ல. அந்நியபாஷை வருகின்ற அழிவுக்கு அடையாளமாயிருக்கிறது (The tongues are God's sign of impending disaster). **பாபேலில்** தேவன் அவர்களுடைய பாஷைகளைத் தாறுமாறாக்கினார். ஒருவர் பேசுவது மற்றொருவருக்குப் புரியவில்லை. பின்பு பாபேல் கோபுரத்திற்கு அழிவு வந்தது (ஆதி. 11:1–8). அதே போல பாபிலோன் ராஜ்யத்தில் **பெல்ஷாத்சார்** அரண்மனையின் சுவரில் கையுறுப்பு வந்து ஒருவரும் அறியாத பாஷையில் எழுதினது. அதன்பின்பு அந்த ராஜ்யத்திற்கு அழிவு வந்தது (தானி. 5:5). பாபேலில் பேசினது போலவே இன்றைய **பெந்தெகொஸ்தே ஸ்தாபனத்தார்** அந்நியபாஷை பேசுகிறார்கள். அவர்கள் பேசுவது அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் புரியாத ஒரு தாறுமாறான பேச்சு. அது ஒரு விளங்காத சத்தம். பாபிலோன் என்றால் குழப்பம் (Confusion) . அவ்வாறே அவர்கள் பேச்சு குழப்பமாயிருக்கிறது. ஆகவே இது அழிவுக்கு அடையாளம். அவர்கள் பேசுகிற அந்நியபாஷை உண்மையிலேயே சீக்கிரத்தில் வரப்போகிற உலக அழிவுக்கு அடையாளமாயிருக்கிறது.

நவீன பெந்தெகொஸ்தேயினர் தாங்கள் அந்நியபாஷையில் பேசுவதையே பரிசுத்தஆவியைப் பெறுதல் என்று தவறான அர்த்தம் கொள்ளுகிறார்கள். அப்படிப் பேசுகிற ஒருவரிடம் நீங்கள் போய் "உங்கள் சபையில் கடந்த வாரமும், அதற்கு முந்தின வாரமும் அந்நியபாஷையின் செய்தி அருளப்பட்டதா? என்று கேட்டால் அவர்கள் "ஆம்" என்று சொல்லுவார்கள். நீங்கள் "தேவன் என்ன சொன்னார்?" என்று கேட்டால் அவர்களால் ஒன்றும் சொல்ல முடியாது. "பரலோகத்திலிருந்து தேவன் அருளிய வார்த்தைகளை மறப்பதற்கு உங்களுக்கு அவருடைய வார்த்தை அவ்வளவு முக்கியத்துவமில்லாமல் போய்விட்டதா?" என்று நீங்கள் அவர்களைக் கேட்கலாம்.

தேவன் ஒரு கூட்டத்தாருக்கோ அல்லது ஒரு தனி நபரிடமோ பேசினால் வேதத்தில் உள்ள வசனத்தை அப்படியே திரும்பச் சொல்லப் போவதில்லை. அது ஏற்கனவே வேதத்தில் இருக்கிறது. தேவன் அதைத் திரும்பவும் சொல்ல வேண்டியதில்லை. அது தேவன் பேசுவதாக இருந்தால் அது ஒரு எச்சரிப்பாகவோ அல்லது சீக்கிரமாய் நடக்கப் போகிற ஒரு காரியமாகவோ இருக்கும்.

பரிசுத்த பவுல் 1 கொரி. 14ம் அதிகாரத்தில் அந்நியபாஷையைக் குறித்துத் தெளிவாகக் கூறியிருக்கிறார். *14:27ல்* ***"யாராவது அந்நியபாஷையிலே பேசுகிறதுண்டானால் அது இரண்டு பேர் மட்டில் அல்லது மிஞ்சினால் மூன்று பேர் மட்டில் அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவர் பேசவும், ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும். அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால், சபையிலே பேசாமல் தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன்"*** என்று எழுதியிருக்கிறது.

நவீன பெந்தெகொஸ்தே சபைகளில் பேசுகிற அந்நியபாஷையை நீங்கள் பதிவு செய்து கேட்டால் "தூர பரா, சங்கர பரா" இன்னும் சில வார்த்தைகள் தான் எப்பொழுதும் இருக்கும். இதில் எந்த அர்த்தமும் இல்லை, இதனால் யாருக்கும் எந்தப் பிரயோஜனமும் இல்லை. பாபேலில் கர்த்தர் பாஷையைத் தாறுமாறாக்கும் போது ஒருவர் பேசுவது மற்றவர்களுக்குப் புரியாமல் இருந்ததுபோலத்தான் இவர்கள்

பேசுவதும் இருக்கும்.

பரிசுத்தஆவி என்பது தேவனுடைய சொந்த ஜீவனையே நாம் பெறுவது. அவருடைய வார்த்தையை நாம் விசுவாசத்தோடு ஏற்றுக்கொள்ளும்போது அவர் நமக்குள் வந்து வாசஞ் செய்து நம்மைச் சகல சத்தியத்திலும் வழி நடத்துவார் (God's word is Spirit when you receive it by faith). நாம் பரிசுத்தஆவியை எந்தவித உணர்ச்சிவசப்படாமலேயே பெறமுடியும் (We receive Holy Ghost without any sensation).

**Table 6**

**முதலாம் நூற்றாண்டில் பேசின அந்நியபாஷைக்கும் தற்போதுள்ள பெந்தெகொஸ்தே சபையினர் பேசும் அந்நியபாஷைக்கும் உள்ள வித்தியாசம்**

| வ.எண் | முதலாம் நூற்றாண்டில் | பெந்தெகொஸ்தெ சபையினர் |
|---|---|---|
| 1 | உண்மையான மானிட பாஷை (அப் 2:8) | முழுவதும் அர்த்தமில்லாத பிதற்றல் |
| 2 | புரிந்துகொள்ள முடிந்தது (அப் 2:6; 1 கொரி 14:19) | புரிந்துகொள்ள முடியாதது |
| 3 | வார்த்தையை உறுதிப்படுத்தினர் (அப் 10:46; எபி 2:3,4) | உறுதிப்படுத்தப்பட்ட வார்த்தையை மறுதலிக்கிறார்கள் |
| 4 | ஒருவர் பின், ஒருவராக பேசினார்கள் (1 கொரி 14:27) | எல்லாரும் மொத்தமாக பேசுகிறார்கள் |
| 5 | அதிக பட்சமாக மூன்று பேர் பேசினார்கள் (1 கொரி 14:27) | ஏராளமான பேர் ஒரே நேரத்தில் பேச ஊக்குவிக்கப்படுகிறார்கள் |
| 6 | வியாக்கியானம் பண்ணுகிறவன் இல்லாவிட்டால் பேசாமல் அமைதியாயிருந்தார்கள் (1 கொரி 14:28) | வியாக்கியானம் பண்ணப்பட விரும்பவில்லை |
| 7 | வியாக்கியானத்திற்காக ஜெபித்தார்கள் (1 கொரி 14:13) | அந்நியபாஷை பேசுவதற்காக ஜெபிக்கிறார்கள் |
| 8 | அவிசுவாசிகளுக்கு அடையாளமாயிருந்தது (1 கொரி 14:22) | பரவசமடைவதற்காக உபயோகப்படுத்துகிறார்கள் |
| 9 | நினைத்த நேரமெல்லாம் பேசாமல், பரிசுத்தஆவியின் வழி நடத்துதலின்படி பேசினார்கள் | எல்லா ஆராதனைகளிலும், பாடலை வேகமாக பாடி, பரவசமடைந்து, உணர்ச்சிவசப்பட்டு பேசுகிறார்கள் |
| 10 | பரிசுத்தஆவி என்றால் தேவன் என்று விசுவாசித்தார்கள் (யோவான் 4:24, 2 கொரி 3:18) | பரிசுத்தஆவி என்றால் அந்நியபாஷை என்று நம்புகிறார்கள் |

## XIII. மறுபிறப்பின் அத்தாட்சி (Evidence of New Birth)

இயேசுகிறிஸ்து இப்பொழுது என்ன செய்கிறார் என்ற இந்த நேரத்திற்குரிய சத்தியத்தின் வெளிப்பாட்டின்படி வாழும் வாழ்க்கையே, உண்மையாகவே ஒருவர் மறுபடியும் பிறந்ததற்கு அடையாளமாகும் (A life lived by a clear revelation of the present Truth - what Jesus Christ is doing now). பரிசுத்த பேதுரு ***"நீங்கள் இப்பொழுது அறிந்திருக்கிற சத்தியத்தில் உறுதிப்பட்டிருந்தும்"*** என்று II பேதுரு 1:12ல் கூறியிருக்கிறார் (Be established in the present truth). **அது** மாத்திரமல்ல 1 யோவான் 1:7ன் படி நாம் ஒளியிலே நடக்க வேண்டும். அப்படியென்றால், தற்போது இயேசுகிறிஸ்து என்னச் செய்கிறாரோ அதை நாம் அறிந்து அந்த வெளிப்பாட்டின்படி வாழுவதாகும். நாம் இந்த நேரத்திற்குரிய செய்திக்கு எழுதப்பட்ட வாசிக்கப்படும் நிருபங்களாக இருக்கவேண்டும் (We must be written epistles of the Word for this day).

இந்த நேரத்திற்குரிய செய்தி நம்முடைய வாழ்க்கையின் மூலமாக வெளிப்படும் என்றால் நாம் கிறிஸ்துவின் சரீரமாகியச் சபையில் நம்முடைய ஸ்தானத்தைக் கண்டுபிடித்து விட்டோம் என்றும், நாம் மறுபடியும் பிறந்து, மீட்கப்படும் நாளுக்கென்று பரிசுத்தஆவியால் முத்திரை போடப்பட்டிருக்கிறோம் என்றும் திட்டவட்டமாக அறிந்துகொள்ளலாம். அது மாத்திரமல்ல, ஒருவன் மறுபடியும் பிறந்தால் அவன் விருப்பமெல்லாம் உலகத்தைப்பற்றிய விருப்பமாக இல்லாமல் தேவனைப்பற்றும் விருப்பமாக மாறுகிறது (His desire changes from wordly desire to Godly desire).

பரிசுத்தஆவியைப் பெற்றதற்கு, கிறிஸ்துவின் இரத்தத்திலிருந்த ஜீவன் தான் அடையாளம் (The Life of Christ is the Token). அந்த ஜீவன் வார்த்தையிலிருக்கிறது. ***"ஆவியே உயிர்ப்பிக்கிறது. மாம்சமானது ஒன்றுக்கும் உதவாது; நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது."*** (யோவான் 6:63). ஒவ்வொரு காலத்துக்கும் கொடுக்கப்பட்ட செய்தி அக்காலத்தில் வாழ்ந்த மக்களுக்கு ஆவியானவர் பேசுகிறச் செய்தியாயிருக்கிறது. ***ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்றெழுது*** என்று இயேசு ஒவ்வொரு காலத்தின் செய்தி முடிவிலும் சொல்லுகிறார் (வெளி. 2:7,11,17,29 & 3:6,13,22). அந்த வார்த்தை அவர்களுக்கு நித்தியஜீவனைக் கொண்டுவந்தது.

நாம் வாழுகிற லவோதிக்கேயா சபைக் காலத்தில், ஏழாம் தூதன் மூலம் கொடுக்கப்பட்டச் செய்தி கிறிஸ்துவின் ஜீவனாகிய பரிசுத்தஆவி என்ற அடையாளத்தை (Token) நமக்குக் கொண்டுவரும். நாம் தேவனுடைய சொந்த ஜீவனைப் பெறுவதுதான் பரிசுத்தஆவியின் அபிஷேகம். அது தான் மறுபிறப்பு. **முத்திரைகள் திறக்கப்படுதலானது, கிறிஸ்துவை வார்த்தையின் ரூபத்தில் (Word form) உலகத்திற்குக் கொண்டுவந்துள்ளது.** நாம் அவரை வார்த்தையின் ரூபமாக ஏற்றுக்கொண்டு கீழ்ப்படியும்போது, அவர் ஆவியின் ரூபமாக நமக்குள் வந்து வாசம் செய்கிறார் (God's Word is Spirit when you receive it by Faith). இதுதான் பரிசுத்தஆவியின் அபிஷேகம். ***நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்*** (எபே 1:13).

அப்பொழுது நம்முடைய ஜீவியம் கிறிஸ்துவோடும், அவருடைய வார்த்தையோடும், வேதத்திலுள்ள பரிசுத்தவான்களோடும் அடையாளப்படுத்திக் (identified) காண்பிக்கப்படும். இதுவே நாம்


பரிசுத்தஆவியைப் பெற்றதின் உண்மையான அடையாளம். இதுவே மறுபடியும் பிறந்த கிறிஸ்தவனின் அடையாளம். ஒரு மரத்தின் ஜீவனை அதின் கனியினால் அறியலாம் (மத். 7:20). நம்மால் இயேசு வாழ்ந்த வாழ்க்கையை வாழமுடியாது. ஆனால் அவருடைய சொந்த ஜீவன் நமக்குள் இருந்தால், அந்த ஜீவன் இயேசு வாழ்ந்த வாழ்க்கையை மறுபடியும் கொண்டு வரும் (It will reproduce the Life of Jesus Christ).

## XIV. மறுபிறப்பு என்பது ஒரு மனிதனுடைய வாழ்வில் தேவன் செய்யும் மிகப்பெரிய அற்புதம் (New Birth is God's greatest miracle in a man's life)

இயற்கைப் பிறப்பு அதிசயமானது. அதைக் குறித்து தாவீது: ***"நான் பிரமிக்கதக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால், உம்மைத் துதிப்பேன். நான் ஒளிப்பிடத்தில் உண்டாக்கப்பட்டு, பூமியின் தாழ்விடங்களிலே விசித்திர விநோதமாய் உருவாக்கப்பட்டபோது, என் எலும்புகள் உமக்கு மறைவாயிருக்கவில்லை. என் கருவை உம்முடைய கண்கள் கண்டது"*** (சங். 139:14–16). மேலும் யோபு, இந்தப் பிறப்பைக் குறித்து: ***"நீர் என்னைப் பால் போல் வார்த்து, தயிர்போல் உறையப்பண்ணினீர் அல்லவோ? தோலையும், சதையையும் எனக்குத் தரித்து, எலும்புகளாலும் நரம்புகளாலும் என்னை இசைத்தீர். எனக்கு ஜீவனைத் தந்ததும் அல்லாமல் தயவையும் எனக்குப் பாராட்டினீர்"*** (யோபு 10:10–12) என்று கூறுகிறான். ஆகவே, இயற்கைப் பிறப்பில் எலும்புகள், தசைகள், உடல் உறுப்புகள், நரம்புகள் மற்றும் தோல் முதலானவைகள் எப்படி அதிசயமாக உருவாகிறதோ, அதை விட அதிக அதிசயமான முறையில் மறுபிறப்பு நடந்தேறுகிறது. மறுபடியும் பிறந்த ஒருவனுடைய ஆத்துமாவில் தேவன் தம்முடைய சொந்த ஜீவனை (நித்தியஜீவன்) கொண்டுவருகிறார். ஆகவே இயேசுகிறிஸ்து வாழ்ந்த அதே வாழ்க்கையை தன் வாழ்வில் பிரதிபலிக்கிறான். அவனுடைய வாஞ்சைகள் பூமிக்குரியதாயிராமல், உன்னதத்திற்குரியதாயிருக்கிறது. அவன் உலகம், மாமிசம், பிசாசு இவைகளால் வஞ்சிக்கப்படாமல், கிறிஸ்துவுக்குள் ஜெயங்கொள்ளுகிற ஜீவியம் செய்கிறான். அவன் மனதில் உண்டாகிற எந்த எண்ணத்தையும், தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிய சிறைப்படுத்துகிறவனாயிருக்கிறான் (2 கொரி. 10:4,5). அவன் ஒரு புது சிருஷ்டியாயிருக்கிறான். இது எவ்விதமாக நிகழுகிறது என்பதைக் காண தொடர்ந்து கீழே படியுங்கள்.

மறுபிறப்பு என்பது இயேசுகிறிஸ்து ஒரு மனுஷனுக்குத் தன்னைத் தனிப்பட்ட பிரகாரமாக வெளிப்படுத்துகிறதாயிருக்கிறது (What is New birth?" It is the revelation of Jesus Christ personally to you). **பவுலுக்குக்** கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்மை வெளிப்படுத்தச் சித்தமாயிருந்தார். இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன் சென்ற அதே அக்கினிஸ்தம்பம் தமஸ்குவுக்குப் போகும் வழியில் பவுலைச் சந்தித்தது. அப்பொழுது நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே என்று அந்த ஒளியிலிருந்து உண்டான சத்தத்தைக் கேட்டான் (அப். 9:4). அந்தச் சத்தம், "நான் இஸ்ரவேலின் தேவனாகிய யேகோவா" என்று சொல்லும் என்று நினைத்தான். ஆனால் அது இயேசு என்று உரைத்தபடியால், **பழைய ஏற்பாட்டின் யேகோவாதான் புதிய ஏற்பாட்டின் இயேசு** (The Jehovah of the Old Testament is Jesus Christ of the New Testament) என்பதை இந்த அனுபவத்தின் மூலம் தெரிந்துகொண்டான். அவன் அரபிதேசம் சென்று பழைய ஏற்பாட்டைத் தியானிக்கும்போது, அது அவனுக்குப் புதிய புத்தகமாக இருந்தது. நியாயப்பிரமாணமும், தீர்க்கதரிசன புத்தகங்களும் இயேசுகிறிஸ்துவையே வெளிப்படுத்துகிறது என்பதை அறிந்துகொண்டான். அதுமுதல் அவன் இயேசுவே கிறிஸ்து, இயேசுவே கர்த்தர் என்று தைரியமாய்ப் போதித்தான். இயேசுகிறிஸ்துவே, அவனுக்குத் தம்முடைய வார்த்தையினால் வெளிப்படுத்தினார். அது அவன் ஜீவியத்தை முற்றிலும் மாற்றிவிட்டது. இதுவே மறுபிறப்பு. அதுபோலவே கர்த்தராகிய இயேசுகிறிஸ்து **சமாரிய ஸ்திரீக்குக்** கிணற்றண்டையில் தம்மை வெளிப்படுத்தினார் (யோவான் 4:26). அவ்விதமாகவே நாத்தான்வேலுக்கும், சீமோன் பேதுருவுக்கும், சகேயுவுக்கும், இன்னும் அநேகருக்கும்

தம்மை வெளிப்படுத்தினார். அது அவர்கள் ஜீவியத்தை முற்றிலும் மாற்றிவிட்டது. இது தேவன் அவர்கள் வாழ்க்கையில் செய்த மிகப்பெரிய அற்புதம்.



படம் 9

தேவன் எல்லாம் அறிந்தவர் (Omniscient God). தேவன் தம்முடைய பிள்ளைகள் இன்னார் என்பதை உலகத்தோற்றத்திற்கு முன்பாகவே அறிந்திருக்கிறார். அவர்கள் தேவனின் சிந்தையில் ஒரு தன்மையாக (Attribute) அல்லது நினைவாக (Thought) இருக்கிறார்கள். உதாரணமாக ஒரு குழந்தை பிறப்பதற்கு முன்பாக அது தகப்பனாருக்குள் ஒரு ஜீவ அனுவாக (Germ of Life) இருந்தது. அது உலகத்தில் பிறந்தபோது அதினுடைய, தகப்பனாருடைய சாயலையும், சுபாவத்தையும் பிரதிபலிக்கிறது. பின்பு அந்தத் தகப்பனாரும், குழந்தையும் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டு மகிழ்ச்சியடைகிறார்கள்.

அதுபோலத் தான் மறுபிறப்பும் இருக்கிறது. தேவனுடைய பிள்ளைகள் உலகத்தோற்றத்துக்கு முன் தேவனுடைய சிந்தையில் ஒரு ஆவிக்குரிய அனுவாக (Spiritual Gene of God) இருந்தார்கள். தேவனுடைய சிந்தைகள் நித்தியமானவைகள் (God's thoughts are Eternal). தேவன் தம்முடைய சிந்தையை ஒருபோதும் மாற்றமாட்டார். அவைகள் தேவன் நியமித்தக் காலங்களில், சமயங்களில் நிச்சயமாக நிறைவேறும். அதை அவமாக்க மனுஷனால் கூடாது. தேவன் முன்குறித்தக் காலத்தில் அவர்களைப் பிறக்கச் செய்கிறார். பின்பு ஏற்ற சமயம் வரும்போது அவர்கள் வாழும் காலத்துக்கென்று கொடுக்கப்பட்ட தூதனுடைய செய்தியைக் கேட்பதற்குத் தருணத்தைத் (Opportunity to hear the Word) தருகிறார். அதைக் கேட்ட உடனே அவர்களுடைய ஆத்துமா அதை ஆவலோடு பற்றிக் கொள்ளுகிறது. அந்த வார்த்தை இயேசுகிறிஸ்துவின் வெளிப்பாடாக இருக்கிறது. தேவன் அவர்களுடைய இருதயத்தில் வெளிப்படுத்துகிறார். "இதுதான் சத்தியம். இதுதான் நித்தியஜீவன். இதை விடாமல் பற்றிக்கொள்" என்று இருதயத்தில் பேசுகிறார். அவர்கள் அதைப் பற்றிக்கொண்டு அதோடு தங்கள் ஆத்துமாவை இணைத்துக்கொள்ளுகிறார்கள். தேவன் அவர்கள் விசுவாசத்தை அங்கீகரித்து அவர்களை, அவருடைய ஆவியினால் நிரப்புகிறார். **அவர்கள் அவரை வார்த்தையின் ரூபமாக ஏற்றுக் கொள்ளும்போது, அவர் ஆவியின் ரூபமாக அவர்களுக்குள் வாசம்பண்ணுகிறார். இதுதான் பரிசுத்தாவியின் அபிஷேகம்.** அவர்கள் ஜீவிக்கிற தேவனின் ஜீவிக்கிற கூடாரமாக (Living Tabernacle of the Living God) மாறுகிறார்கள். அவர்களைச் சகல சத்தியத்திற்குள்ளும் நடத்துகிறார். (யோவான் 16:13). அவர்கள் தேவனால் பிறந்திருக்கிறார்கள். அவர்கள் அவருடைய சிந்தையிலிருந்து மாம்சத்தில் (From thought to flesh) வெளிப்பட்ட தேவகுமாரர்களும், குமாரத்திகளுமாயிருக்கிறார்கள் (Manifested sons and daughters of God). இப்பொழுது அவர்கள் அவரோடு கூட வார்த்தையினாலும், ஜெபத்தினாலும் ஆவியில் ஐக்கியப்பட்டு மகிழ்ச்சியாயிருக்கிறார்கள். தகப்பன், பிள்ளைகள் என்ற ஐக்கியம் ( Father Son Relationship) ஏற்படுகிறது.

நம்மில் ஒருவரும், மாம்சத்தின்படி கர்த்தருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள இயலாது. ஆகவே அவரே நமக்குள் பரிசுத்தஆவியாக வந்து, வாசம் செய்து அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளவும், அதின்படி நடக்கவும் உதவி செய்கிறார். ***"உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன். உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களைக் கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும்பண்ணுவேன்"*** (எசேக் 36:26,27) என்ற வேத வாக்கியத்தை இயேசு நம்முடைய வாழ்க்கையில் நிறைவேற்றுகிறார். நாம் இந்த உலகத்தில் அவருடைய வார்த்தைக்குச் சாட்சியாக ஜீவித்து, இந்த நேரத்திற்குரிய சவாலைச் சந்திக்கச் செய்கிறார் (To meet the challenge of this hour). இயேசு சொன்னது போலவே (யோவான் 13:3) நாமும் தேவனிடத்திலிருந்து வந்திருக்கிறோம் தேவனிடத்திற்குப் போகிறோம் என்ற நிச்சயத்தை நமக்குத் தருகிறார். நம்மை அழைத்த அவருடைய நோக்கத்தையும், தீர்மானத்தையும் நம்மில் நிறைவேற்றின பின்பு (after serving His purpose in our life) அவரை மகிமையில் சந்திப்போம். அவர், நமக்குச் **சரீர மீட்பைத்** தந்து மகிமையடையச் செய்வார். நாம் அவருடைய ராஜ்யத்தில் என்றென்றும் அவரோடு வாழுவோம். இதுவே அவரை நேசிக்கிற அவருடைய மணவாட்டியாகிய சபை (Bride Church). இந்தச் சபையைத் தான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மகிமையடையச் செய்து, ஆகாயத்திலே எடுத்துக் கொள்ள வருகிறார். ***தேவன் எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார்; எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார்; எவர்களை நீதிமான்களாக்கினாரோ அவர்களை மகிமைப்படுத்தியுமிருக்கிறார்*** (ரோமர் 8:30).

தேவனால் உலகத்தோற்றத்திற்கு முன்பே முன்குறிக்கப்பட்டு தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், பூமியில் தாயின் வயிற்றிலிருந்து பிறக்கும்போது, அவர்களுடைய ஆத்துமாவில் தேவன், தம்முடைய ஜீவ அனுவுள்ள வித்தை இடம்பெறச் செய்கிறார். அது எப்பொழுதும் அவர்களுக்குள் தான் இருக்கிறது. ஆனால் அவர்கள் வார்த்தையைக் கேட்கும் தருணம் வரை அது உறக்க நிலையில்

இருக்கிறது. வார்த்தையைக் கேட்கும்போது அந்த வித்து பரிசுத்தஆவியால் உயிர்ப்பிக்கப்படுகிறது. பின்பு அவர்கள் தொடர்ந்து வார்த்தையினால் போஷிக்கப்படும்போது பரிசுத்தஆவி வளர்ந்து, வளர்ந்து அவர்களுடைய ஆவி முற்றிலும் ஆட்கொள்ளப்பட்டு கிறிஸ்துவே அவர்களுக்குள் ஜீவிக்கிறார் என்ற ஸ்தானத்தை அடைகிறார்கள். இவர்கள் தான் பரிசுத்தஆவியைப் பெற்றவர்கள். இந்த அனுபவத்தைப் பெற்றவர்கள்தான் புதுப்பிறப்பை அடைந்தவர்கள். பரிசுத்த **பவுல்** இவ்வித அனுபவத்தை உடையவனாயிருந்தான். ஆகவே அவன், ***கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல. கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்; நான் இப்பொழுது மாம்சத்தில் பிழைத்திருக்கிறதோ, என்னில் அன்பு கூர்ந்து எனக்காகத் தம்மைத்தாமே ஒப்புக் கொடுத்த தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்தினாலே பிழைத்திருக்கிறேன்*** (கலா. 2:20) என்று சொல்லுகிறான். படம் 9ல் குறிப்பிட்டபடி அந்தக் கருப்பு பாகம் முற்றிலும் மறைந்து, அது வெள்ளையாக மாறுகிறது. நமக்குள் வாசம் செய்கிற பரிசுத்தஆவி, வெளிப்படுத்தப்பட்ட வார்த்தையினால் தொடர்ந்து போஷிக்கப்படும்போது, நமது மாம்ச சுபாவங்கள் முற்றிலும் ஒழிந்து, பரிசுத்தஆவியின் தன்மை நிறைந்த அனுபவத்தை அடைகிறோம். நமது சரீரம் பரிசுத்தஆவியின் ஆலயமாக மாறுகிறது. உலகத்திற்கு நாம் ஜீவிக்கிற தேவனின் ஜீவனுள்ள கூடாரமாகக் காட்சி அளிக்கிறோம்.

## XV. இனி வரும் நாட்களில் நடக்கும் சம்பவங்கள் (The Events that will happen hereafter)

1) **அமெரிக்காவில் சுனாமி (Tsunami in America):** அமெரிக்காவின் மேற்கு கடற்கரையிலுள்ள **கலிபோர்னியா (California)** மாகாணத்திலுள்ள **ஹாலிவுட் லாஸ் ஏஞ்சல்ஸ், (Hollywood Los Angels) சான்பிரன்சிஸ்கோ (Sanfrancisco)** போன்ற பட்டணங்கள் அடங்கிய 1500 மைல் நீளமும் 400 மைல் பரப்பளவு கொண்ட நிலப்பரப்பு மிகப்பெரிய பூமி அதிர்ச்சி உண்டாவதினால், பசிபிக் மகா சமுத்திரத்தில் (Pacific Ocean) 40 மைல் ஆழத்திற்கு தலைகீழாக அமிழ்ந்துபோகும். அதனால் ஏற்படும் சுனாமியால் உலகத்திலுள்ள எல்லா கடற்கரைப் பட்டணங்களும் பாதிப்புக்குள்ளாகும். சகோதரன் பிரன்ஹாமின் ஊழியம் லாஸ் ஏஞ்சல்ஸ் பட்டணத்தில் மிகவும் வல்லமையாய் நடைபெற்றது. ஆவிக்குரிய ஆழமான செய்திகள் கொடுக்கப்பட்டன. அதிகமான அற்புதங்களும் அடையாளங்களும் நடந்தன. ஆனாலும் அந்தப் பட்டணத்தார் வார்த்தைக்குச் செவி கொடுக்கவில்லை. ஆகவே சகோதரன் பிரன்ஹாம் அந்தப் பட்டணத்தைப் பார்த்து "தூதனுடைய பெயரை வைத்துக் கொண்டிருக்கிற நகரமே. அழகான சபைக் கட்டிடங்கள் கோபுரங்களையுடைய பட்டணமே, உன்னுடைய அசுத்தமான படப்பிடிப்பால் உலகம் முழுவதும் மோசம் போனதே! ஞாபகம் கொள், ஒரு நாள் நீ சமுத்திரத்தின் அடியில் அமிழ்ந்து போவாய்" என்று கூறினார். வேதாகமத்திலும் இந்தப் பூமியதிர்ச்சியையும், சுனாமியையும் குறித்துக் கீழ்க்கண்ட வசனங்களில் அதிக திட்டமாய் எழுதப்பட்டிருக்கிறது. ***சத்தங்களும் இடிமுழக்கங்களும் மின்னல்களும் உண்டாயின; பூமி மிகவும் அதிர்ந்தது. பூமியின்மேல் மனுஷர்கள் உண்டான நாள்முதற்கொண்டு அப்படிப்பட்ட பெரிய அதிர்ச்சியுண்டானதில்லை. தீவுகள் யாவும் அகன்றுபோயின; பர்வதங்கள் காணப்படாமற்போயின*** (வெளி. 16:18, 20). ***அப்பொழுது, பலமுள்ள தூதனொருவன் பெரிய ஏந்திரக்கல்லையொத்த ஒரு கல்லை எடுத்துச் சமுத்திரத்திலே எறிந்து: இப்படியே பாபிலோன் மகாநகரம் வேகமாய்த் தள்ளுண்டு. இனி ஒரு போதும் காணப்படாமற்போகும்*** (வெளி. 18:21).

இயேசுகிறிஸ்து கப்பர் நகூமில் அதிகமான அற்புதங்களைச் செய்தார். அங்கு அதிகமான சத்தியங்கள் போதிக்கப்பட்டது. ஆனாலும் அந்தப் பட்டணத்தார் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே இயேசு அந்தப் பட்டணத்தைப் பார்த்து ***"வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ***

***பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய்: உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமிலே செய்யப்பட்டிருந்ததானால், அது இந்நாள் வரைக்கும் நிலைத்திருக்கும்"*** (மத். 11:23) என்று சபித்தார். சுமார் முந்நூறு வருடங்களுக்குப்பின், அந்தக் கப்பர்நகூம் பட்டணம் மத்தியத்தரைக் கடலில் (Mediterranean Sea) அமிழ்ந்துபோனது. அதுபோலவே லாஸ் ஏஞ்சல்ஸ் பட்டணம் ஒரு நாளில் பசிபிக் மகா சமுத்திரத்தின் அடியில் அமிழ்ந்துபோகும்.

2) **எடுத்துக்கொள்ளப்படுதல் (Rapture):** ***இயேசு, மகா சத்தமாய்க் கூப்பிட்டு, ஆவியை விட்டார். அப்பொழுது, தேவாலயத்தின் திரைச்சீலை மேல்தொடங்கிக் கீழ்வரைக்கும் இரண்டாகக் கிழிந்தது. பூமியும் அதிர்ந்தது. கன்மலைகளும் பிளந்தது. கல்லறைகளும் திறந்தது. நித்திரையடைந்திருந்த அநேக பரிசுத்தவான்களுடைய சரீரங்களும் எழுந்திருந்தது. அவர் உயிர்த்தெழுந்தபின்பு, இவர்கள் கல்லறைகளைவிட்டுப் புறப்பட்டு, பரிசுத்த நகரத்தில் பிரவேசித்து, அநேகருக்குக் காணப்பட்டார்கள்*** (மத் 27:50–53). இவர்கள் அனைவரும் கிறிஸ்துவின் முதலாம் வருகைக்குக் காத்திருந்த பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள். அவர்கள் காலத்தில் கிறிஸ்து வெளிப்படாதபடியால் விசுவாசத்தோடு மரித்தார்கள். கிறிஸ்து உயிர்த்தெழுந்தபின்பு இவர்களும் உயிர்த்தெழுந்து நாற்பது நாளளவும் அவர்கள் பூமியில் இருந்து, நாற்பதாம் நாளில் அவர்கள் இயேசுவோடு உன்னதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள்.

அதுபோலவே கிறிஸ்துவின் இரண்டாம் வருகையிலும் நடக்கும். ஏழு சபைக் காலங்களில், கிறிஸ்து வராதபடியால் அக்காலத்துப் பரிசுத்தவான்கள் அவர்கள் காலத்தின் செய்தியில் நிலைத்திருந்து விசுவாசத்தோடு மரித்தார்கள். லாஸ் ஏஞ்சல்ஸ் பூமியதிர்ச்சி ஏற்படும்போது, இந்தப் பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுவார்கள். இதுவே முதலாம் உயிர்த்தெழுதல். இதில் பங்கு பெறுகிறவர்கள், பரிசுத்தவான்களும், பாக்கியவான்களுமாயிருக்கிறார்கள் (வெளி. 20:4). இவர்கள் சில நாட்கள் பூமியில் இருப்பார்கள். பின்பு கர்த்தர், இக்காலத்துக்கென்று வாக்களிக்கப்பட்ட வார்த்தையினால் மறுபடியும் பிறந்த மணவாட்டி சபையை அல்லது பரிசுத்தவான்களை, கண்ணிமைப்பொழுதில் மறுரூபப்படுத்தி மேகங்கள் மேல் அவர்களோடுகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளுவார். அவர்கள் இயேசுகிறிஸ்துவை ஆகாயத்தில் சந்திப்பார்கள் (1 தெசலோ 4:16, 17; 1 கொரிந் 15:51, 52).

3) **அந்திக்கிறிஸ்துவின் ஆளுகை (Reign of Anti-Christ):** கிறிஸ்துவின் மணவாட்டி எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பு, உலகம் ஏழு வருடங்கள் மாத்திரமே நீடிக்கும். அந்தக் காலத்தில் அந்திக்கிறிஸ்து உலகத்தை ஆளுகை செய்வான் என்று பைபிளில் சொல்லப்பட்டிருக்கிறது (தானி 9:27). அந்த அந்திக்கிறிஸ்து ரோமன் கத்தோலிக்க மார்க்கத்தின் கடைசி போப்பாக **(Pope)** இருக்க வேண்டும். அந்திக்கிறிஸ்து அமெரிக்காவிலிருந்து தோன்றுவான் என்று எதிர்பார்க்கப்படுகிறது. லாஸ் ஏஞ்சல்ஸ் பூமியதிர்ச்சியினால், அமெரிக்காவின் பொருளாதாரம் மிகவும் பாதிக்கப்படும். அமெரிக்காவின் டாலரின் மதிப்பு மிகவும் குறைந்துவிடும். ஆகவே, உலக வர்த்தகம் நலிவடையும். இந்த நிலைமையைச் சரி செய்ய அந்திக்கிறிஸ்து முன் வருவான். அமெரிக்காவின் பங்கு வர்த்தகம் (Share Market) அனைத்தும் யூதர்களுடைய கைவசம் உள்ளது. ஆகவே யூதர்களோடு அந்திக்கிறிஸ்து உடன்படிக்கை செய்வான் (தானி. 9:27). இந்த சூழ்நிலையில் ரஷ்யா **(Russia)** அமெரிக்காவின் மேல் படையெடுத்து வரும். அப்பொழுது அந்திக்கிறிஸ்து, நடு நின்று சமாதானத்தை ஏற்படுத்துவான். ஆகவே அவன் உலகத் தலைவனாக நியமிக்கப்படுவான். இப்பொழுது உலகமானது ஒரு உலக பொது அரசாங்கத்தை **(One World Government)** எதிர்பார்க்கிறது. அது புதிய உலகக் கொள்கை என்று அழைக்கப்படுகிறது **(NWO = New World Order)**. அந்திக்கிறிஸ்து அதை நிறைவேற்றுவான். அப்பொழுது உலக முழுவதும் ஒரே மதக் கொள்கை ஒரே பொருளாதாரக் கொள்கை, ஒரே அரசியல்

கோட்பாடு இருக்கும். அந்திக்கிறிஸ்து மத வல்லமை, அரசாங்க வல்லமை, பிசாசின் வல்லமை இம்மூன்றையும் பெற்று, ஒப்பற்ற உலகத் தலைவனாக விளங்குவான்.

**4) ஆயிரம் வருட ஆளுகைக்கு முன்பு நடைபெறும் கோகு மாகோகு யுத்தம்: (The Battle of Gog and Magog Before Millennium):** இஸ்ரவேல் நாட்டில் உண்டாகும் பூமியதிர்ச்சியால் ஒலிவமலை இரண்டாகப் பிளக்கும். ***அந்நாளிலே அவருடைய பாதங்கள் கிழக்கே எருசலேமுக்கு எதிரே இருக்கிற ஒலிவமலையின்மேல் நிற்கும். அப்பொழுது மகா பெரிய பள்ளத்தாக்கு உண்டாகும்படி ஒலிவமலை தன்நடுமையத்திலே கிழக்கு மேற்காய் எதிராகப் பிளந்துபோம்; அதினாலே ஒரு பாதி வடப்பக்கத்திலும் ஒரு பாதி தென்பக்கத்திலும் சாயும்*** (சகரியா 14:4). அதனால் ஓமர் மசூதி இடிந்து விழும். அப்பொழுது யூதர்கள் அந்த இடத்தில் தேவாலயத்தைக் கட்ட முயற்சிப்பார்கள். அரபியர்கள் அதற்கு எதிராக படையெடுப்பார்கள். ரஷ்யா அவர்களுக்கு உதவியாகப் படையெடுத்து வரும். இந்த யுத்தத்தில் கர்த்தர் யூதர்களுக்குத் துணை நின்று யுத்தம் செய்வார். இஸ்ரவேலருக்கு மகத்தான வெற்றி கிடைக்கும். ரஷ்ய படையை இஸ்ரவேலர்கள் தோற்கடித்து மாஸ்கோவரைக்கும் துரத்துவார்கள். இந்த யுத்தத்திற்குக் கோகுமாகோகு என்று பெயர். இந்த யுத்தத்தைக் குறித்து எசேக்கியேல் முப்பத்தெட்டாம், முப்பத்தொன்பதாம் அதிகாரத்தில் வாசிக்கலாம்.

**5) இரண்டு சாட்சிகள் (Two Witnesses):** மணவாட்டி எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு புறஜாதிகளின் காலம் முடிவடையும். கர்த்தர் இஸ்ரவேல் ஜனங்களோடு ஈடுபடுவார். அப்பொழுது கர்த்தர் அவர்களுக்குச் சத்தியத்தை அறிவிக்க, இரண்டு தீர்க்கதரிசிகளை அனுப்புவார். இவர்கள் **மோசே, எலியா** என்ற இரண்டு தீர்க்கதரிசிகள் என்ன அபிஷேகத்தைப் பெற்றார்களோ, அதே அபிஷேகத்தை உடையவர்களாயிருப்பார்கள். இவர்களை இரண்டு சாட்சிகள் என்று கர்த்தருடைய வார்த்தை சொல்லுகிறது. இவர்கள் அந்திக் கிறிஸ்துவின் காலத்தில் மூன்றரை வருடங்கள் அல்லது ஆயிரத்திருநூற்றறுபது (1260) நாட்கள் யூதர்களுக்குச் சத்தியத்தை அறிவிப்பார்கள் (வெளி. 11:3). கடைசி கால மணவாட்டிக்கு எந்தச் செய்தி அறிவிக்கப்பட்டதோ, அதே செய்திதான் அவர்களுக்கும் அறிவிக்கப்படும். அந்த இரண்டு சாட்சிகளுடைய சத்தியத்தைக் கேட்டு இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் பேர் (1,44,000) பரிசுத்தஆவியினால் முத்திரிக்கப்படுவார்கள். ***முத்திரைபோடப்பட்ட வர்களின் தொகையைச் சொல்லக்கேட்டேன். இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரைபோடப்பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர்*** (வெளி. 7:4).

மோசே தண்ணீரை இரத்தமாக மாற்றினது போல, இவர்களும் தண்ணீரை இரத்தமாக மாற்ற அதிகாரம் கொடுக்கப்படும். எலியா வானத்திலிருந்து அக்கினியை இறங்கப்பண்ணி விரோதிகளைப் பட்சித்துப் போட்டது போல, இந்த இரண்டு சாட்சிகளும் தங்களைச் சேதப்படுத்த வருகிறவர்களுக்குச் செய்ய முடியும். ***அவர்கள் தீர்க்கதரிசனஞ் சொல்லி வருகிற நாட்களிலே மழைபெய்யாதபடிக்கு வானத்தை அடைக்க அவர்களுக்கு அதிகாரமுண்டு. அவர்கள் தண்ணீர்களை இரத்தமாக மாற்றவும், தங்களுக்கு வேண்டும்போதெல்லாம் பூமியைச் சகலவித வாதைகளாலும் வாதிக்கவும் அவர்களுக்கு அதிகாரமுண்டு*** (வெளி. 11:6).

அவர்கள் தங்கள் சாட்சியைச் சொல்லி முடித்திருக்கும்போது, அந்திக்கிறிஸ்து அவர்களோடே யுத்தம்பண்ணி, அவர்களை ஜெயித்து, அவர்களைக் கொன்றுபோடுவான். அவர்களுடைய உடல்கள் எருசலேம் மகா நகரத்தின் விசாலமான வீதியிலே கிடக்கும். ஜனங்களிலும், கோத்திரங்களிலும், பாஷைக்காரரிலும், ஜாதிகளிலுமுள்ளவர்கள் அவர்களுடைய உடல்களை மூன்றரை நாள் வரைக்கும் டெலிவிஷன், கம்ப்யூட்டர் மூலமாகப் பார்ப்பார்கள். ***அவர்களுடைய உடல்களைக் கல்லறைகளில் வைக்கவொட்டார்கள். அவ்விரண்டு தீர்க்கதரிசிகளும் பூமியின் குடிகளை வேதனைப்படுத்தினபடியால்***

***அவர்கள் நிமித்தம் பூமியில் குடியிருக்கிறவர்கள் சந்தோஷப்பட்டுக் களிகூர்ந்து, ஒருவருக்கொருவர் வெகுமதிகளை அனுப்புவார்கள். மூன்றரை நாளைக்குப் பின்பு தேவனிடத்திலிருந்து ஜீவஆவி அவர்களுக்குள் பிரவேசித்தது. அப்பொழுது அவர்கள் காலூன்றி நின்றார்கள்; அவர்களைப் பார்த்தவர்களுக்கு மிகுந்த பயமுண்டாயிற்று. இங்கே ஏறி வாருங்கள் என்று வானத்திலிருந்து தங்களுக்கு உண்டான பெரிய சத்தத்தை அவர்கள் கேட்டு, மேகத்தில் ஏறி வானத்திற்குப் போனார்கள்; அவர்களுடைய சத்துருக்கள் அவர்களைப் பார்த்தார்கள்*** (வெளி. 11:7–12).

தேவனுடைய வார்த்தைக்கு விரோதமான ஒரு திட்டம் அக்காலத்தில் உருவாக்கப்படும். ஆனால் மனிதனின் பார்வையில் அது சரியானதாகவும், தேவனுடைய திட்டத்தோடு ஒத்ததாகவும் காணப்பட்டு, உலகம் முழுவதையும் வஞ்சிக்கும். தெரிந்துகொள்ளப்பட்டவர்களோ வஞ்சிக்கப்படுவதில்லை. இத்திட்டம் பின்வருமாறு: உலகம் அனைத்தும் ஐக்கியப்பட்டு எல்லாம் ஒன்றாய் இருக்க வேண்டுமென்ற கிறிஸ்துவின் ஜெபத்தை நிறைவேற்றினதாகக் கூறிக்கொள்கின்றன. இந்த ஐக்கியம் அரசியல் வல்லமை பெற்று எல்லா குழுக்களையும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ தன் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவர முயற்சிக்கும். இதற்கு வணங்காதவர்கள் சபைகளாகக் கருதப்படாமல், தங்களுடைய சொத்துக்களையும் மற்றுமுள்ள சிலாக்கியங்களையும் இழக்க நேரிடும். இப்பொழுதே மார்க்கச் சம்பந்தமான கூட்டம் நடத்துவதற்கென கட்டிடங்களை வாடகைக்கு எடுக்க வேண்டுமாயின் அதற்கு குருமார்களின் அனுமதி அவசியம். திருத்துவ போதனையைக் கைக்கொள்ளும் சபைகளின் ஐக்கியத்தில் ஆதரவைப் பெற்றிருக்கவேண்டும். இந்நிபந்தனைகள் நாள்தோறும் வளர்ந்து கொண்டே வந்து, கடைசியில் அநேகர் அவைகளை எதிர்க்க வல்லமையற்றவர்களாய் அவைகளுக்கு இணங்க நேரிடும். அவைகளைத் துணிந்து எதிர்ப்பவர்கள் சுயாதீன உரிமையை இழப்பார்கள். இதன் காரணத்தால் அநேகர் தேவனுக்கு ஊழியம் செய்யாதிருப்பதற்குப் பதிலாக, இந்த ஐக்கியத்தில் மூலமாவது சேவிக்கலாம் என்றெண்ணி, ஐக்கியத்தில் சேருவார்கள். அவ்வாறு சேருபவர்கள், பிசாசின் பொய்யை விசுவாசித்து சாத்தானைச் சேவிக்கிறவர்கள். தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் வஞ்சிக்கப்பட முடியாததால், இவ்வைக்கியத்தில் கலந்து கொள்ளமாட்டார்கள்.

அல்லாமலும் உலக சபைகளின் ஐக்கியம் (**WCC - Wold Council of Churches**) மிருகத்திற்கென்று உண்டாக்கப்பட்ட சொரூபமாக (Image of the Beast) மாறும்போது (வெளி 13:15,16), பரிசுத்தவான்கள் எடுக்கப்பட்டிருப்பார்கள் ( **Rapture**). எபேசு சபையில் தொடங்கப்பட்ட சிறு ஐக்கியம் கடைசி காலத்தில் சாத்தானின் சொரூபமாக மாறி, முழு உலகத்தையும் ஏமாற்றும். ரோமன் கத்தோலிக்கச் சபையும், பிராட்டஸ்டண்ட் சபைகளும் கடைசி காலத்தில் ஒன்று சேர்ந்து, உலக ஐசுவரியத்தின்மேல் அதிகாரம் செலுத்தி, அந்த ஐக்கியத்தில் சேராதவர்கள் கொள்ளவும் விற்கவும் கூடாதபடிக்குத் தடை விதிக்கும் (வெளி. 13:16,17). ஆவிக்குரிய வேசியாகிய ரோமன் கத்தோலிக்க சபையோடு (வெளி 17:5) அவள் குமாரத்திகளான பிராட்டஸ்டண்ட் சபைகள் ஒன்று சேர்ந்துவிட்டன. ரோம சபை அதிகமான பொன்னைச் சேகரித்துவிட்டது. யூதர்கள் முதலீட்டு வாக்குறுதி சீட்டுகளை (Share Bonds) வைத்திருக்கின்றனர். ஆதிக்கம் பெற்ற வேசியானவள், தக்க சமயத்தில், பேப்பர் நாணயங்களைத் தடைசெய்து, பொன் நாணயங்களை உபயோகிக்கக் கட்டளையிடுவாள். பொன்னில்லாத யூதர்கள் அவள் கண்ணியில் விழுந்து அவளோடு உடன்படிக்கை செய்துகொள்வார்கள். வேசி சபை இவ்விதம் முழு உலகத்தையும் தன் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டுவரும்.

அந்திக்கிறிஸ்து யூதர்களோடு செய்த உடன்படிக்கையை முறித்துப்போடுவான். அவன் தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து ஆராதிக்கப்படுவான் (2 தெசலோ 2:4). மிருகத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளும்படிக் கட்டளையிடுவான். மிருகத்தின் முத்திரையைத் தரித்துக் கொள்ளாத அனைவரும் கொல்லப்படுவார்கள். 144,000 யூதர்கள் கொல்லப்படுவார்கள். அவர்கள் தங்கள் சாட்சியை இரத்தத்தால் முத்திரிப்பார்கள் (வெளி 12:11).

**௬) அர்மகெதோன் யுத்தம் (War of Armageddon)**: உலகத்தில் இதுவரைக்கும் அநேக யுத்தங்கள் நடந்திருக்கிறது. எல்லா யுத்தங்களும் அர்மெகெதோன் யுத்தத்தில் முடிவடையும். இது மூன்றாம் உலக

யுத்தம். இது அணு ஆயுத யுத்தம் (Nuclear War). சாத்தான் பூமியின் நான்கு திசையிலுள்ள கத்தோலிக்கர்கள், பிராட்டஸ்டெண்ட், மற்றும் உலக சபைக் கூட்டமைப்பில் (World Council of Churches) உள்ள அனைவரையும் சேர்த்துக்கொண்டு, அர்மகெதோன் யுத்தத்திற்கு ஆயத்தமாவான் (வெளி. 16:16). கிறிஸ்துவும் பரலோகத்திலுள்ள பரிசுத்தவான்களோடுகூட யுத்தத்திற்கு இறங்கி வருவார். அவர்கள் வெள்ளைக்குதிரைகளில் வருவார்கள் (வெளி 19:11,14). வெள்ளைக்குதிரை உறுதியாக்கப்பட்ட வார்த்தைக்கு (Vindicated Word) அடையாளமாயிருக்கிறது.

ரஷ்யா அமெரிக்காவின் மீது அணுகுண்டை வீசும். அமெரிக்கா முற்றிலுமாக அழிந்துபோகும். சகோதரன் பிரன்ஹாம் கண்ட ஏழாம் தரிசனம் நிறைவேறும். ஐரோப்பிய நாடுகளின் ஐக்கியத்திலுள்ள (Europian Union) பத்து நாடுகளும், ஒரே யோசனையுடையவர்களாய்த் தங்கள் அதிகாரத்தை மிருகத்திற்குக் கொடுப்பார்கள். அவர்கள் போப்பின் அதிகாரத்தின் கீழ் வருவார்கள் (வெளி 17:12,13). கொஞ்ச காலத்திற்குப் பின்பு அவர்கள் எல்லாரும் ஒன்று சேர்ந்து, அந்தக் கத்தோலிக்க மார்க்கத்தைப் பகைப்பார்கள் (வெளி 17:16). ரஷ்யாவின் உதவியை அணுகுவார்கள். ரஷ்யா வாடிகன் பட்டணத்தின் மேல் ஒரு அணுகுண்டை வீசும்போது, ரோமாபுரி பட்டணம் ஒரு மணி நேரத்திற்குள் சுட்டெரிக்கப்படும் (வெளி 18:10, 19). பின்பு ஒரு தேசம் மற்றொரு தேசத்திற்கு விரோதமாக எழும்பி, ஒருவர் மேல் ஒருவர் அணுகுண்டுகளை வீசி, முழு உலகமும் அக்கினியால் வெந்து உருகிப்போம். சூளையைப் போல உலகம் அனைத்தும் எரிந்து சாம்பலாகிவிடும் (மல் 4:1). தேவன் அதைத் தொடர்ந்து வந்து, இயற்கைக்கு அப்பாற்றபட்ட அக்கினியால் (Supernatural Fire) உலகத்தைச் சுத்திகரிப்பார். எரிமலைகள் வெடிக்கும். பாவம் நிறைந்த உலகத்தின் மேற்பரப்பு பூமிக்குள்ளாகப் போகும். பூமியின் மத்தியிலுள்ள லாவா (Lava) பூமியின் மேல் வரும். இவ்விதமாக தேவன் இந்த உலகத்தை ஆயிர வருட ஆளுகைக்குச் சுத்தம் செய்து புதுப்பிப்பார்.

**7) ஆயிரவருட ஆளுகை (Millennial Reign):** கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம் வருஷமாகக் காணப்படுகிறது (2 பேதுரு 3:8). தேவனாகிய கர்த்தர் இந்த உலகத்தை ஆறு நாட்களில் சிருஷ்டித்தார். ஏழாம் நாளைப் பரிசுத்தப்படுத்தி, அதில் ஓய்ந்திருந்தார் (ஆதி 2:2,3). நாம் சுமார் ஆறாயிரம் வருடங்களாகப் பாவத்திற்கு விரோதமாகப் போராடிக்கொண்டு வருகிறோம். ஏழாம் நாள் ஆயிர வருட ஆளுகையாக இருக்கிறது. அதில் நாம் ஓய்ந்திருப்போம். அங்கு பாவம் இல்லை. வியாதி இல்லை. துன்மார்க்கர் இல்லை. யுத்தம் இல்லை. மனிதனின் ஆளுகை இல்லை. பிசாசும், அவனைச் சேர்ந்த தூதர்களும் பாதாளத்தில் கட்டிவைக்கப்படுவார்கள். துன்மார்க்கர் அனைவரும் பாதாளத்தில் இருப்பார்கள். ஆகவே அந்த ஆளுகையில் நீதி, சமாதானம், சந்தோஷம்தான் இருக்கும்.

இப்பொழுது உலகத்திலுள்ள ஒவ்வொரு ராஜ்யமும் சாத்தானின் ஆதிக்கத்தில் உள்ளது. ஏழாம் தூதனின் செய்தி முடிவாக கிறிஸ்துவின் ராஜ்யத்தைப் பூமிக்குக் கொண்டுவருகிறது. தானியேல் புஸ்தகத்தில் எழுதியிருக்கிற வண்ணமாக, கையால் பெயர்க்கப்படாத கல் உருண்டு வந்து, அந்தச் சிலையை நொறுக்கினது (தானி 2:44). அந்தக் கல் தேவனிடத்திலிருந்து வெளிப்பட்ட செய்தி. அது ஏழாம் தூதனின் செய்தி. அது கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் பரிபூரண வெளிப்பாடு. ஏழு முத்திரைகள் திறக்கப்பட்டப் பின்பு உலகம் கடைசி காலத்தில் வந்திருக்கிறது. ராஜ்யங்கள் உடைகிறது. உலகம் விழுந்துபோகிற நிலையில் உள்ளது.

சாத்தான் இந்த நவீன, பாவம் நிறைந்த உலகத்தை கிறிஸ்துவுக்குக் கொடுக்க முன்வந்தான். அதற்காகத் தன்னை வணங்கவேண்டும் என்று சொன்னான். ஆனால் இயேசு அவனைப் பார்த்து, ***அப்பாலே போ, சாத்தானே உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனைச் செய்வாயாக*** (மத் 4:8–10) என்று சொன்னார். வேறு விதமாகச் சொன்னால் இந்த உலகம் என்னுடையது. ஆதாம் பாவத்தினால் இதை இழந்து போனான். நான் இதைக் கிரயம் செலுத்தி மீட்டுக் கொள்வேன். நான் இதைச் சுத்திகரித்துப் பெற்றுக்கொள்வேன். அப்பாலே போ சாத்தானே என்றார்.

கல்வாரி சிலுவையில் இரத்தம் சிந்தி மீட்டுக் கொண்டார். அக்கினியால் சுத்திகரித்துப் பெற்றுக்கொள்ளப் போகிறார்.

இன்று பூமி, ஒரு புதிய உலகத்தைப் பிறப்பிக்க பிரசவவேதனைப்படுகிறது. சர்வ சிருஷ்டியும் தாங்கள் மீட்கப்பட்டு முன்பிருந்த நிலையை அடைவதற்காகத் தவிக்கிறது (ரோமர் 8:22). ஆதாமும் ஏவாளும் பாவத்தினால் ஏதேன் தோட்டத்தை விட்டுத் துரத்தப்பட்டனர். பாவத்திற்கு முடிவு ஏற்படும்போது, நாம் ஆயிர வருடக் காலம் கிறிஸ்துவோடு இந்த உலகத்தைச் சுதந்தரித்துக் கொள்வோம். அப்பொழுது உலகம் ஏதேனாக மாறும். பசுவும் கரடியும் சேர்ந்து மேயும். முடவன் மானைப்போலக் குதிப்பான். ***சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருப்பதுபோல ஜனங்கள் எல்லாரும் கர்த்தரை அறிகிற அறிவினால் நிறைந்திருப்பார்கள்*** (ஏசாயா 11:2–6).

வனாந்திரம் பூத்து குலுங்கும். தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் மாத்திரம் (Only the Elect) பங்கு பெறுவார்கள். பழைய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள். புதிய ஏற்பாட்டுப் பரிசுத்தவான்கள், உயிரோடு எடுத்துக்கொள்ளப்பட்ட கடைசி கால மணவாட்டி, இலட்சத்து நாற்பத்து நாலாயிரம் இஸ்ரவேலர்கள் மாத்திரம் இந்த ஆயிரம் வருட அரசாட்சியில் கிறிஸ்துவோடுகூட ஆளுகை செய்வார்கள். மனிதனை ஆளுகை செய்யமாட்டார்கள். இயற்கையை ஆளுகை செய்வார்கள்.

**8) வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு (White Throne Judgment):** ஆயிர வருட ஆளுகைக்குப் பின் பொதுவான உயிர்த்தெழுதல் நடைபெறும். மரித்தோர் அனைவரும் தேவனுடைய குமாரனுடைய சத்தத்தைக் கேட்டு, உயிர்த்தெழுவார்கள் (யோவான் 5:28,29). இது இரண்டாம் உயிர்த்தெழுதல். முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குபெறாதவர்கள், இரண்டாம் உயிர்த்தெழுதலில் பங்கடைவார்கள். இயேசுகிறிஸ்து பெரிய வெள்ளை சிங்காசனத்தில் வீற்றிருப்பார். அவருடைய மணவாட்டி அவரோடுகூட சிங்காசனங்களில் உட்கார்ந்திருப்பார்கள். ***மரித்தோராகிய பெரியோரும், சிறியோரும் அவருக்கு முன்பாக நிற்பார்கள். அவர்களுடைய தொகை கோடான கோடியாயிருக்கும்*** (தானி 7:9,10). ***மேய்ப்பனானவன் செம்மறி ஆடுகளையும், வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிப்பது போல செம்மறியாடுகளை வலதுபக்கத்திலும், வெள்ளாடுகளை இடதுபக்கத்திலும் நிறுத்துவார்*** (மத். 25:32). புஸ்தகங்கள் திறக்கப்படும். ஜீவபுஸ்தகத்திலே பெயர் காணப்படுகிறவர்களுக்கு நித்தியஜீவன் உண்டு. அவர்கள் வலதுபக்கத்தில் நிற்கிற செம்மறியாடுகளுக்கு ஒப்பானவர்கள். ஜீவபுஸ்தகத்தில் பெயர் காணப்படாதவர்கள் இடதுபக்கத்திலுள்ள வெள்ளாடுகளுக்கு ஒப்பானவர்களாயிருக்கிறார்கள். இவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு உண்டு.

சாத்தானும் அவனைச் சார்ந்த அவனுடைய தூதர்களும், ஆயிர வருட ஆளுகைக்குப் பின்பு, காவலிலிருந்து விடுதலையாகி, நியாயந்தீர்க்கப்பட்டு, ஆக்கினைத்தீர்ப்படைவார்கள். இந்த ஆக்கினைத் தீர்ப்பு இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலில் பங்கடைவதாகும். (வெளி. 20:11, 12, 15; மத்தேயு 25:41; யூதா 1:6).

இப்பொழுதே நாம் செய்தியைக் கொண்டு நம்மை நிதானித்துப் பார்த்து நம்மை வார்த்தைக்கு ஒப்புக் கொடுத்து, மறுபடியும் பிறக்கும் அனுபவத்தைப் பெற்றுக்கொண்டால், நாம் நியாயத்தீர்ப்பின் நாளில் அவருக்கு முன்பாக நிற்கமாட்டோம். நாம் அவரோடு உலகத்தை நியாயந்தீர்ப்போம். அவரோடு சேர்ந்து செம்மறியாடுகளுக்கு நித்தியஜீவனையும், வெள்ளாடுகளுக்கு ஆக்கினைத்தீர்ப்பையும் வழங்குவோம் (1 கொரி. 6:2,3).

**௯. ஆயிரம் வருட ஆளுகைக்குப் பின்பு வரும் கோகு மாகோகு யுத்தமும் அக்கினிக்கடலும் (Battle of Gog and Magog after Millennium and the Lake of Fire):** சாத்தான் அக்கினிக் கடலில் முடிவடைய நேரம் வருகிறபடியால், அவன் கடைசியாக தேவனுக்கு விரோதமாக ஒரு யுத்தம் செய்கிறான். அதுதான் இந்த கோகு, மாகோகு யுத்தம். இந்த யுத்தம் ஆயிர வருட ஆளுகைக்குப் பின்பு நடக்கிறது. இதைக் குறித்து வெளி. 20:7–9ல் சொல்லப்பட்டிருக்கிறது. ***"அந்த ஆயிரம் வருஷம் முடியும் போது சாத்தான் தன் காவலிருந்து விடுதலையாகி பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளாகிய கோகையும் மாகோகையும் மோசம்போக்கும்படிக்கும், அவர்களை யுத்தத்திற்குக் கூட்டிக்கொள்ளும்படிக்கும் புறப்படுவான்; அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும். அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்துகொண்டார்கள்; அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப்போட்டது".***

வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பில் செம்மறியாடுகளுக்கு நித்தியஜீவனும், வெள்ளாடுகளுக்கு ஆக்கினைத்தீர்ப்பும் அளிக்கப்படுகிறது. இந்த வெள்ளாடுகளின் கூட்டமாகிய சர்ப்பத்தின் வித்துக்கள்தான் மேலே சொல்லப்பட்ட கடற்கரை மணலத்தனையானவர்கள். தங்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பு செலுத்தப்பட்டதை பொறுத்துக்கொள்ள முடியாமல் இவர்களெல்லாரும் சேர்ந்து கர்த்தருக்கும் அவருடைய ஜனத்துக்கும் விரோதமாக வருகிறார்கள். காவலிலிருந்து விடுதலையான சாத்தான் இவர்களை யுத்தத்தில் வழி நடத்துகிறான். சகல அசுத்த ஆவிகளையும், ஜீவபுஸ்தகத்தில் பேர் எழுதப்பட்டிராதவர்களையும், ஜீவபுஸ்தகத்திலிருந்து பேர் கிறுக்கப்பட்டவர்களுமாகிய அனைத்து அவிசுவாசிகளையும் ஒன்று சேர்த்து தேவனுக்கு விரோதமாக யுத்தம்பண்ணும்படி புறப்படுவான்.

அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்து கொள்வார்கள்; அப்பொழுது தேவனால், வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப்போடும். (வெளி. 20:9). ***துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும், நரகத்திலே தள்ளப்படுவார்கள்*** (சங். 9:17). ***பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபச்சாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாரதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்*** (வெளி. 21:8) என்ற வேதவாக்கியங்கள் நிறைவேறும். அங்கே அவர்கள் சதாகாலமும் வாதிக்கப்படுவார்கள். அவர்கள் புழு சாகாமலும், அக்கினி அவியாமலும் இருக்கும்.

முடிவிலே அவர்களை மோசம் போக்கின பிசாசு என்ற சாத்தானும் இந்த அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே தள்ளப்படுவான். ***பரிகரிக்கப்படும் கடைசி சத்துரு மரணம்*** (1 கொரி. 15:26). பிசாசுக்கு மரணம் என்று பெயர் (வெளி. 6:8). மரணம் அக்கினிக் கடலிலே தள்ளப்படும் (வெளி. 20:14). சாதாரண அக்கினியால் பிசாசின் ஆவிகளைச் சுட்டெரிக்க முடியாது. ஆகவே இவர்கள் அனைவருடைய ஆவிகளும் இயற்கைக்கு அப்பாற்பட்ட அக்கினியால் (Supernatural Fire) சுட்டெரிக்கப்படும். ஆகவே கடைசியாக பிசாசு என்று சொல்லப்படும் சாத்தான் நரகத்திலே தள்ளப்படுகிறான் என்று காண்கிறோம். இனி ஒருபோதும் அவன் இருக்கவே மாட்டான் (எசேக். 28:19).

யோசுவாவும், இஸ்ரவேலரும் எமோரியர்களுக்கு விரோதமாக யுத்தம் செய்தபோது, எமோரியர்கள் தோல்வியடைந்து ஓடினர். அவர்களை இஸ்ரவேலர்கள் சங்காரம்பண்ணினார்கள். அப்பொழுது எமோரியரின் ஐந்து ராஜாக்கள் ஒரு கெபியில் ஒளித்துக்கொண்டார்கள். அதை அறிந்த யோசுவா பெரிய கற்களை கெபியின் வாயிலே புரட்டி, அவ்விடத்தில் அவர்களைக் காவல் காக்க மனுஷரை வைத்தான். அவன் எமோரியர் எல்லாரையும் சங்கரித்தப் பின்பு, கடைசியாக அந்த ஐந்து

ராஜாக்களையும் கெபியிலிருந்து வெளியே கொண்டுவந்து அவர்களை வெட்டிக் கொன்றுபோட்டான் (யோசுவா 10:16–27) என்று எழுதியிருக்கிறது.

அது போலவே கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் பிசாசின் ஆவிகளையும், தேவனை மறக்கிற சகல ஜாதிகளையும் நரகத்திலே தள்ளின பின்பு, கடைசியாகச் சாத்தானை நரகத்திலே தள்ளுகிறார். அவன் மரணத்திற்கு அதிகாரியாக இருக்கிறான் (எபி. 2:14). அதிபதிகள் எப்பொழுதும் கடைசியாகச் சாகிறார்கள் என்ற சொல்லின்படி **(Leaders always die last**) சம்பவிக்கும்.



படம் 10

**10) நித்தியம் (Eternity):** புதிய வானம், புதிய பூமி, புதிய எருசலேம் என்பவைகளை வேதத்தில் வாசிக்கிறோம். சமுத்திரம் இல்லாமற்போகும் (வெளி 21:1,2). புதிய எருசலேம் 1500 மைல் நீளமும், 1500 மைல் அகலமும், 1500 மைல் உயரமுமுள்ள பட்டிணம். அதன் வீதியெல்லாம் சுத்தப்பொன். அதின் மதில்கள் இரத்தின கற்கள். அதற்குப் பன்னிரெண்டு வாசல்கள். ஒவ்வொரு வாசலும் ஒரு முத்தாயிருக்கும். நகரத்திற்கு வெளிச்சங்கொடுக்கச் சூரியனும், சந்திரனும் வேண்டுவதில்லை. ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு. தேவனுடைய மகிமையே அங்குப் பிரகாசிக்கிறது. அதின் வாசல்கள் அடைக்கப்படுவதே இல்லை.

ஆட்டுக்குட்டியானவருடைய ஜீவபுஸ்தகத்தில் (Lamb's Book of Life) பேர் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள் (வெளி. 21:10–27). அதாவது வார்த்தையினால் மறுபடியும் பிறந்தவர்கள் (Born again by the Word) மாத்திரம் அதில் வாசம்பண்ணுவார்கள். இந்தப் பட்டணம் பரலோக மணவாளனாகிய இயேசுகிறிஸ்து, தமது பூலோக மணவாட்டியாகிய சபைக்கு ஆயத்தமாக்கிய பட்டணம். இரட்சிக்கப்படுகிறவர்கள் (Saved People) அதின் வெளிச்சத்தில் நடப்பார்கள். புதிய பூமியில் வாசம்பண்ணுவார்கள்.

இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை. முந்தினவைகள் ஒழிந்துபோயின. எல்லாம் புதிதாயின. நித்திய மகிழ்ச்சி அவர்கள்மேல் இருக்கும். தேவனுடைய பரிபூரண அன்பு நிலைத்திருக்கும். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும், அவருடைய பரிசுத்தவான்களும் மகிமையடைந்த நிலையில் நித்தியமாய் ஐக்கியப்பட்டிருப்பார்கள். இந்தச் சம்பவங்கள் அனைத்தையும் படம் 10ல் காணலாம்.

## முடிவுரை (Conclusion)

ஆகவே இந்த சிறிய புஸ்தகத்தை வாசிக்கிற அருமையான சகோதரனே, சகோதரியே, நீங்கள் உங்களையே நிதானித்துப் பாருங்கள். கர்த்தர் உங்கள் ஆத்துமாவில் "நான் இயேசுகிறிஸ்துவை நேசிக்கவேண்டும், நான் மறுபடியும் பிறக்கவேண்டும், வார்த்தையினால் பிறக்கவேண்டும், ஆவியினால் பிறக்கவேண்டும், நித்தியஜீவனைப் பெறவேண்டும், உண்மையான பரிசுத்தஆவியின் அபிஷேகத்தைப் பெறவேண்டும், தேவனுடைய ராஜ்யத்திற்குச் சுதந்திரவாளியாக மாறவேண்டும், வரப்போகிற உபத்திரவகாலத்திற்கும், உலக அழிவிற்கும், மரணத்திற்கும், பாதாளத்திற்கும், நரகத்திற்கும் தப்பி எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்குபெறவேண்டும்" என்று உணர்த்தினால் தேவன் உங்களோடு பேசுகிறார். உங்களை அழைக்கிறார். ஆகவே இருதயத்தைக் கடினப்படுத்தாமல், காலம் தாழ்த்தாமல் இப்பொழுதே சத்தியத்தை விசுவாசித்து, பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ள ஒப்புக்கொடுங்கள்.

பாவத்தையும், மனுஷனுடைய சூதும், வஞ்சிக்கிறதற்கேதுவான மதகோட்பாடுகளையும், ஸ்தாபனக் கோட்பாடுகளையும் விட்டு வார்த்தைக்குத் திரும்புங்கள். பாவங்களைக் கிறிஸ்துவினிடத்தில் அறிக்கை செய்து மனந்திரும்புங்கள் (1 யோவான் 1:9). ***"என் ஜனங்களே நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்"*** (வெளி. 18:4) என்று இயேசு கூறுகிறார். ***"நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்"*** (அப் 2:38) ***(Repent, and be baptized every one of you in the name of Jesus Christ for the remission of sins, and ye shall receive the gift of the Holy Ghost).***

நாம் ஜீவிக்கும் இந்தக் காலம் மிகவும் குறுகியதாயிருக்கும் என்பதை நான் கூற விரும்புகிறேன். சம்பவங்கள் அனைத்தும் இக்காலத்தில் ஒன்றன்பின் ஒன்றாக வேகமாக நிகழ்ந்தேறும். ***அவருடைய சத்தம் அப்பொழுது பூமியை அசையப்பண்ணிற்று. இன்னும் ஒரு தரம் நான் பூமியை மாத்திரமல்ல, வானத்தையும் அசையப்பண்ணுவேன் என்று இப்பொழுது வாக்குத்தத்தஞ் செய்திருக்கிறார்*** (எபி 12:26). ஆம், இனியும் ஒரு முறை தேவன் பூமியையும், இன்னும் அசையக் கூடியவைகளனைத்தையும் அசையப்பண்ணுவார். அதன் பின்பு அவர் பூமியைப் புதுப்பிப்பார். 1964–ம் வருஷம் மார்ச் மாதம் பெரிய வெள்ளிக்கிழமையன்று, அலாஸ்கா (Alaska) என்னும் பட்டணத்தில் நேர்ந்த பூகம்பம் உலகத்தையே அசைத்தது. கூடிய சீக்கிரத்தில் உண்டாகவிருக்கும் மகத்தான அசைவைக் (**லாஸ் ஏஞ்சல்ஸ் பூமியதிர்ச்சி**) (Los Angeles Earthquake) குறித்து, இப்பூகம்பத்தின் மூலம் கர்த்தர் எச்சரிக்கிறார். என் சகோதரனே, சகோதரியே, பாவம் நிறைந்த இவ்வுலகத்தைக் கர்த்தர் அழித்து அதைப் புதுப்பிப்பார். கர்த்தரின் பாதுகாப்பிலிருப்பவர் மாத்திரமே இந்த அதிர்ச்சியைத் தாங்குவர். தேவனுடைய இரக்கம் கிடைக்கப்பெறும் இச்சமயத்திலே, உங்களுடைய முழு ஜீவியத்தையும் இயேசுகிறிஸ்துவினிடத்தில் ஒப்புவிக்க நான் உங்களை வேண்டிக்கொள்கிறேன். அவர் உண்மையுள்ள மேய்ப்பனாக, பொறுப்பேற்று

உங்களைப் பாதுகாத்து, தமது மகிமையுள்ள சன்னிதானத்தில் மிகுந்த மகிழ்ச்சியோடு உங்களை மாசற்றவர்களாய் நிறுத்துவார். ஆமென்.

மேலும் சத்தியத்தை விபரமாக அறிய விரும்பினால் www.calvarytabernacle.in என்ற எங்கள் சபை இணைய தளத்தில் (website) கர்த்தருடைய வெளிப்பாடான வார்த்தையைக் கேளுங்கள். கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்களோடு இருப்பதாக. ஆமென்.


## முகவரி:

# கல்வாரி சபை

10, கலைஞர் தெரு

வளசரவாக்கம்

சென்னை - 600087

தொலைபேசி: +91 9884720958

samuelappadurai@gmail.com

www.calvarytabernacle.in